வைப்பகம்

2025 ஒத்தோபர் - திசெம்பர் மலர் 9 இதழ் 10 - 12

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 80/-

02 ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கத்தின் வகிபாகம்

14 சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் வகிபாகமும் பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகள் மீதான அதன் தாக்கமும்

26 நாட்டிற்கான படுகடன் முகாமைத்துவம் பற்றிய உலகளாவிய மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் அண்மைய மறுசீரமைப்புக்களில் இலங்கைக்கான அதன் பிரயோகம்

35 பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவின் முக்கியத்துவமும் அதற்கான இலங்கையின் தயார்நிலையும்

ISSN 7645-2700

9 777645 270082

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் கட்டுரையாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

ஒரு பிரதியின் விலை ரூ.80.00

தபாற்செலவு ரூ.150.00

இலங்கை மத்திய வங்கி

தொடர்பூட்டல் திணைக்களம்

ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கத்தின் வகிபாகம்

டபிள்யு ஏ என் பி விக்ரமசிங்க
மூத்த உதவிப் பணிப்பாளர்
முதலீட்டு முகாமைத்துவத் திணைக்களம்

எஸ் மல்லிகாராச்சி
மூத்த உதவிப் பணிப்பாளர்
முதலீட்டு முகாமைத்துவத் திணைக்களம்

தங்கத்தின் விலைகள் அவுன்ஸ் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 3,700 இனைவிடவும் விஞ்சி, 2025 செத்தெம்பரில் உயர்ந்தளவு புதிய சாதனை விலைகளைப் பதிவுசெய்து, ஆண்டின் தொடக்கத்திலிருந்து 40 சதவீதம் வரை கவர்ச்சிகரமான இலாபத்தை எடுத்துக்காட்டின. ஐக்கிய அமெரிக்க வட்டி வீதக் குறைப்புக்கள் பற்றி தோற்றம்பெற்றுவரும் எதிர்பார்க்கைகள், மதிப்பிழக்கும் டொலர் அத்துடன் தற்போதுள்ள புவிசார்அரசியல் பதற்றங்கள் போன்றவற்றின் மூலம் இவ்வுயர்வு தூண்டப்பட்டிருந்தது. இருப்பினும், இவ்வுலோகம் “மிதமிஞ்சி கொள்வனவு செய்யப்படும்” புலத்திற்குப் பிரவேசித்து, எதிர்பார்க்கப்படும் 2026இல் உத்வேகம் மீளத்தொடங்குவதற்கு முன்னர் ஐ.அ.டொலர் 3,600 இனை நோக்கி பின்னோக்கிய நகர்தலுடன் சாத்தியமான விலையில் தற்காலி பின்னடைவை அதிகரிக்கலாம் என சில பகுப்பாய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். இந்த இயக்கவாற்றல்வாய்ந்த பின்னணி, அலுவல்சார் ஒதுக்குகளினுள் தங்கத்தின் வகிபாகத்தை மீண்டும் பரிசீலனைச் செய்வதற்கான சரியான சூழலை வழங்குகின்றது.

1. அறிமுகம்

தங்கம் நீண்டகாலமாக நிதியியல் உறுதிப்பாட்டின் மூலக்கல்லாகவும் மத்திய வங்கிகளினதும் நாட்டின் நிறுவனங்களினதும் பன்னாட்டு ஒதுக்குகளின் முக்கிய சொத்தாகவும் கருதப்பட்டு வருகின்றது. “தங்கத்தின்” தனித்துவமான பௌதீக மற்றும் நிதியியல் பண்புகள் தொடர்ந்து பரிணமிக்கும் உலகளாவிய பொருளாதாரத்தில் தங்கம் தொடர்புடையதாகத் திகழ்வதற்கு இயலச்செய்துள்ளன. இக்கட்டுரையானது ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கத்தின் வகிபாகத்தை ஆராய்ந்து, அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் உபாயரீதியிலான அநுகூலங்களையும் பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்குச் சொத்துப்பட்டியலினுள் அதன் ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் காரணிகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

2. தங்கத்தின் வரலாற்றுரீதியிலான முக்கியத்துவம்

பல ஆண்டுகாலமாக குறிப்பாக, நாணயச் செலாவணி வீதங்கள் தங்கத்தின் பெறுமதியுடன் இணைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் தங்கம் பன்னாட்டு நாணய முறைமையில் அடிப்படை கூறொன்றாகச் செயற்பட்டது. 1870 தொடக்கம் 1914 வரை, உலகம் பாரம்பரிய பன்னாட்டு தங்க நியமத்தை நிர்ணயித்த, அக்காலக்கட்டத்தில் சீனாவைத் தவிர பெரும்பாலான முக்கிய நாடுகள் தங்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிலையான நாணய முறைமையொன்றைப் பின்பற்றிய நாணயத்திற்கான தங்க நியமத்தின் கீழ், பெரும்பாலான பிரதான நாணயங்கள் தங்கத்துடன் நிலையான வீதமொன்றில் இணைக்கப்பட்டிருந்ததுடன், ஐக்கிய அமெரிக்காவிற்கு, இவ்வீதம் அவுன்ஸ் தங்மொன்றுக்கு ஐ.அ.டொலர் 20.67 ஆக நிர்ணயிக்கப்பட்டது. செலாவணி வீதங்கள் முன்கணிக்கத்தக்கதாகவிருந்தாலும் பௌதீக தங்க ஒதுக்குகளால் பிணையளிக்கப்பட்டதனாலும், இந்தக்

கட்டமைப்பானது நாணய உறுதிப்பாட்டினை வழங்கியதுடன் உலகளாவிய வர்த்தகத்தையும் முதலீட்டையும் வசதிப்படுத்தியது.

முதலாம் உலகப் போரினால் ஏற்பட்ட குழப்பங்களைத் தொடர்ந்து, போருக்கு முந்தைய நாணய இயல்புநிலைக்கு மீண்டும் திரும்புவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1925ஆம் ஆண்டில், உலகப் பொருளாதாரம் இயல்புநிலையை நிலைநிறுத்துவதற்கு இயலாது இருந்தபோதிலும், ஐக்கிய இராச்சியம் தங்க நியமத்தை போரிற்கு முன்பிருந்த அதே அளவிற்கு மீளமைத்துக்கொண்டது. போருக்கு இடையிலான தங்கத்தின் நியமம் பொருளாதார சமமின்மைகளால் அதிகரித்துவரும் அழுத்தத்தை எதிர்கொண்டு, இறுதியாக பொருளாதார பெரும் மந்தத்தின் போது சீர்குலைந்தது. 1933ஆம் ஆண்டில், உள்நாட்டு பொருளாதார சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில், ஐக்கிய அமெரிக்க சனாதிபதி பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் டொலரை தங்கமாக மாற்றும் தன்மையை இடைநிறுத்தினார். சிறிது காலத்தின் பின்னர், 1934 சனவரியில் பணவீக்கம் மற்றும் பொருளாதார மீட்சி என்பவற்றைத் தூண்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பிறக்கமொன்றாக தங்கத்தின் அலுவல்சார் விலை டிராய் அவுன்ஸ் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 35ஆக மீள்மதிப்பிடப்பீடுசெய்யப்பட்டது.

பிரட்டன் வூட்ஸ் உடன்படிக்கை நிறுவப்பட்டதன் மூலம், 1944ஆம் ஆண்டு மிகவும் கட்டமைக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு சர்வதேச நாணய முறைமை தோற்றம்பெற்றது. இம்முறைமை தங்கத்தின் செலாவணி நியமத்தை அறிமுகப்படுத்தியது. இம்முறைமையின் கீழ், ஐக்கிய அமெரிக்க டொலர் அவுன்ஸ் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 35ஆக நேரடியாக தங்கமாக மாற்றக்கூடியதாகவிருந்த அதேவேளை ஏனைய பிரதான நாணயங்கள் டொலருடன் நிர்ணயிக்கப்பட்டன. போரிற்குப் பின்னரான உலகப் பொருளாதாரம் விரிவடைந்தமையினால், ஐ.அ.டொலர் மற்றும் தங்கம் போன்றவற்றுக்கான கேள்வி சடுதியாக அதிகரித்தது. பிரட்டன் வூட்ஸ் கட்டமைப்பைப் பேணும் வகையில், தலையீடுகளை ஒருங்கிணைத்து தங்கத்திற்கான சந்தையை நிலையுறுதிப்படுவதற்கு மத்திய வங்கிகள் குழு 1961இல் லண்டன் கோல்ட் பூலினை (டொலருக்கும் தங்கத்துக்கும் இடையிலான விலையை நிலைத்திருக்கக் கூடிய சர்வதேச ஒத்துழைப்பு முயற்சி) உருவாக்கியிருந்தன. எனினும், அதிகரிக்கின்ற சமமின்மைகள் மற்றும் ஊக அழுத்தங்களுக்கு மத்தியில் இந்த ஒத்துழைப்பின் நிலையற்ற தன்மை நிரூபிக்கப்பட்டு, 1968ஆம் ஆண்டில் கோல் பூலின் சீர்குலைவிற்கு வழிவகுத்தது.

சனாதிபதி நிக்சன் அமெரிக்க டொலரை தங்கமாக மாற்றும் வசதியை இடைநிறுத்தி, “தங்கச் சாளரத்தை மூடியமையினால்” (closing the gold window) 1971ஆம் ஆண்டளவில், ஐக்கிய அமெரிக்க தங்க ஒதுக்குகள் மீதான அதிகரித்த அழுத்தமும், விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறைகளும் சனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் தீர்க்கமான நடவடிக்கையை எடுப்பதற்கு வழிவகுத்தன. பிரெட்டன் வூட்ஸ் முறைமை மற்றும் தங்க நியமத்தின்

வரைபடம் 1: 2000 - 2024 காலப்பகுதிகளில் மத்திய வங்கியின் தங்க உடைமைகள்



மூலம்: உலக தங்கச் சபை, ப.நா.நி

வரைபடம் 2: 2010 - 2024 காலப்பகுதிகளில் மத்திய வங்கியின் தங்கத்தின் கொள்வனவுகள்



மூலம்: உலக தங்கச் சபை, ப.நா.நி

இறுதிநிலையை அடையாளப்படுத்தி நாணயப் பெறுமதிகள் பௌதீகப் பொருளொன்றுடன் (தங்கம்) பிணைக்கப்படுவதை காட்டிலும் சந்தை சக்திகளால், அதாவது நாணயங்களின் கேள்வி மற்றும் நிரம்பலினால் தீர்மானிக்கப்படுகின்ற மிதக்கும் செலாவணி வீதங்களைக் கொண்ட புதிய சகாப்தத்திற்கு வழிவகுத்தது.

அண்மைய ஆண்டுகளில், தங்கம் நிதியியல் சொத்தொன்றாக அதன் முக்கியத்துவத்தை மீண்டும் பெற்றுள்ளது. பணவீக்கம் மற்றும் சந்தைத் தளம்பலுக்கு எதிராக காப்பிடுவதற்கு முதலீட்டாளர்கள் தங்கத்தை அதிகளவில் நம்பியுள்ள அதேவேளை மத்திய வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் தமது சொத்துப்பட்டியலின் பகுதியாக கணிசமான தங்க ஒதுக்குகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கின்றன. கீழேயுள்ள வரைபடம் 1 மற்றும் 2 முறையே மத்திய வங்கிகளின் தங்க உடைமைகளையும் தங்கக் கொள்வனவுகளையும் குறிப்பிட்டு, அதிகரித்தப் போக்கொன்றை எடுத்துக்காட்டுகின்றன.

3. ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கத்தின் உபாய ரீதியிலான நன்மைகள்

3.1 நீண்டகால வருவாய்க்கான வழி

நிச்சயமற்ற காலங்களில், தங்கம் பாரம்பரியமாக முதலீட்டாளர்களால் நம்பகமான சொத்தாகக் கருதப்பட்டு வருகின்றது. மேலும், வலுவானதும் பலயீனமானதுமான பொருளாதார சூழல் இரண்டிலும் சாதகமான நீண்ட கால வருமானத்தைத் தொடர்ந்தும் வழங்கியுள்ளது. அதன் பரந்த மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கேள்வி அடிப்படையானது தங்கத்திற்கு குறிப்பிடத்தக்க தாக்குப்பிடிக்கும்தன்மையையும் பரந்தளவிலான சந்தை நிலைமைகளின் கீழ் நிலையான வருவாயை உருவாக்கும் இயலாற்றலையும் வழங்குகின்றது. ஆபரணங்கள், தொழில்நுட்பம், முதலீடு மற்றும் மத்திய வங்கிகள் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்து தங்கத்திற்கான கேள்வி

வரைபடம் 3: கேள்வி மூலங்கள்



மூலம்: உலக தங்கச் சபை

எழுகின்றது. உலக தங்கச் சபையினால் வெளியிடப்பட்ட வரைபடங்களுக்கமைவாக, கேள்வி உள்ளமைப்பு கீழே வரைபடம் 3இல் எடுத்துக்காட்டப்படலாம்.

1971ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க தங்க நியமம் சரிவடைந்ததிலிருந்து, கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தங்கத்தின் விலை ஏறத்தாழ 8 சதவீதம் கொண்ட ஆண்டு சராசரியொன்றின் வீதத்தில் அதிகரித்துள்ளது. இக்காலப்பகுதியில், தங்கத்தின் நீண்டகால ஆதாயம் பங்குரிமை மூலதனங்களுடன் ஒப்பிடத்தக்கதாகவும், முறிகளின் வருமானத்தை விடவும் அதிகமாகவும் இருந்துள்ளது. மேலும், பின்வரும் வரைபடம் 4 இல் காணப்படுவது போல, கடந்த 3, 5, 10, மற்றும் 20 ஆண்டுகளில் தங்கம் பல முக்கிய ஏனைய சொத்து வகைகளை விடவும் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது.

வரைபடம் 4: பல்வேறு சொத்து வகைகளின் ஆண்டுதோறுமான வருவாய்
(2003 திசெம்பர் 31 தொடக்கம் 2023 திசெம்பர் 31 வரையான வருவாய்கள்)



CAGR - கூட்டு ஆண்டு வளர்ச்சி வீதம்

மூலங்கள்: புளும்பெர்க், ICE பெஞ்ச்மார்க் நிர்வாகம், உலக தங்கச் சபை

நிதியத்தை பொறுத்தவரையில், இடர்நேர்வு பொதுவாக தளம்பலினால் அளவிடப்படுவதன் மூலம் அவற்றுடன் இணைந்த இடர்நேர்வுடன் ஒப்பிட்டு வருவாய்கள் எப்போதும் மதிப்பிடப்படுகின்றன. புளும்பெர்கிடமிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளின் பிரகாரம், ஐக்கிய அமெரிக்க இருப்புகள் மற்றும் மசகெண்ணெய் (பண்டங்கள்) போன்றவற்றுடன் ஒப்பிடுகையில் தங்கம் குறைந்தளவு தளம்பலை எடுத்துக்காட்டியுள்ளது. இதன்விளைவாக, ஏனைய இடர்நேர்வுகளைத் தொடர்புபடுத்தி வருவாய்களுடன் ஒப்பிடும் போது, பண்டங்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்க இருப்புக்கள் ஆகிய இரண்டையும் விடவும் தங்கம் சிறப்பான செயலாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மேலும், தங்கம் பணவீக்கத்தை விஞ்சுகின்ற வருவாய்களை உருவாக்கி, பணவீக்க இடர்நேர்விற்கு எதிராக காப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு பயனுள்ள சொத்தாக அமைகிறது. இதற்கு மேலதிகமாக, உலகளாவிய வட்டி வீதங்கள் குறைந்தளவில் காணப்படும் போதான பணச்சுருக்க காலப்பகுதியில் குறிப்பாக தங்கம் சிறப்பாக செயற்படுகின்றது. இத்தகைய குறைந்தளவான வட்டி வீதச் சூழல்களில், தங்கத்திற்கான கேள்வி அதிகரித்து, இதனால் தங்கத்தின் விலை உயர்வடைவதுடன் அதன் விளைவாக தங்கத்தின் வருவாயும் அதிகரிக்கின்றது.

3.2 பன்முகப்படுத்தல்

ஒதுக்கு முகாமைத்துவத்தில் பிரதானமாக சொத்துப்பட்டியல் முகாமைத்துவத்தில், சொத்துப்பட்டியல் இடர்நேர்வினைக் குறைப்பதிலும் குறிப்பிட்ட அளவிலான இடர்நேர்வு மட்டத்திற்கான வருவாய்களை உச்சப்படுத்துவதிலும் பன்முகப்படுத்தல் முக்கிய வகிபாகத்தை ஆற்றுகின்றது. ஒட்டுமொத்த இடர்நேர்வைக் குறைப்பதற்கு சொத்துப்பட்டியல்களை கட்டமைப்பது, எதிர்வினை இணைவுகளுடன் சொத்துக்களை ஒன்றிணைப்பது தேவைப்படுகின்றது. எனினும், சந்தை நிச்சயமற்ற தன்மை, அதிகரித்த தளம்பல் நிலை மற்றும் பெரும்பாலும் முதலீட்டாளர்களின் இடர்நேர்வை ஏற்கும் மற்றும் இடர்நேர்வைத் தவிர்க்கும்

மனோபாவங்கள் காரணமாக பல சொத்துக்கள் பெருகிய முறையில் ஒத்திசைவாக மாறுவதால், செயற்றிறன்மிக்க பன்முகப்படுத்திகளைக் கண்டறிவது சவாலானதாக இருக்கலாம். பல பன்முகத்தன்மை கொண்ட பன்முகப்படுத்திகள் மிகவும் அவசியப்படுகின்ற போது துல்லியமாகச் சொத்துப்பட்டியல்களைப் பாதுகாப்பதற்கு தவறிவிடுகின்றன என அர்த்தப்படும். எனினும், தங்கம் அரச முறிகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் போன்ற பாரம்பரிய ஒதுக்குச் சொத்துக்களுடன் குறைந்தளவான அல்லது எதிர்மறையானத் தொடர்பை வழங்குகிறது. ஒதுக்குச் சொத்துப்பட்டியலில் தங்கம் உள்ளடங்கலாக சந்தைத் தளம்பல்களுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை குறைப்பதற்கு உதவி, ஒட்டுமொத்தத் தாக்குபிடிக்குந்தன்மையையும் ஒதுக்குச் சொத்துப்பட்டியலின் உறுதிப்பாட்டையும் மேம்படுத்துகிறது.

3.3 திரவத்தன்மை

ஒதுக்கு முகாமைத்துவத்தில், சாத்தியமான வெளிநாட்டு நாணய கொடுப்பனவு கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு திரவத்தன்மையை உறுதிசெய்வது இதன் இரண்டாவது முக்கிய குறிக்கோளாக விளங்கின்றது. உலகளாவிய தங்கச் சந்தை பரந்தளவானதும் உயர்ந்தளவில் திரவத்தன்மை உடையதாகவும் காணப்படுகின்றது. உலகச் சந்தை சபை மதிப்பீடுகளின் பிரகாரம், முதலீட்டாளர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் பௌதீக தங்க உடைமைகள், செலாவணிகள் மற்றும் நேரடி பரிவர்த்தனையிலான சந்தை மீது வர்த்தகப்படுத்தப்பட்ட பெறுதிகளிலிருந்தான ஒப்பந்தங்களில் மேலதிகமாக ஐ.அ.டொலர் 1.0 றில்லியன் உடன் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 5.1 றில்லியன் பெறுமதியாகும் என மதிப்பிடப்படுகின்றது. இது தங்கத்தை வைத்திருக்கும் மத்திய வங்கிகளுக்கு தேவைப்படும்போது அதை விற்கும் இயலாற்றலை வழங்கி, தேவைப்படும் நேரங்களில் வெளிநாட்டு நாணய திரவத்தன்மையை அணுகுவதை உறுதிப்படுத்துகின்றது.

கீழே வரைபடம் 5இல் காட்டப்பட்டுள்ளதற்கமைவாக, ஐக்கிய அமெரிக்க திறைசேரி உண்டியல்களின்[1] வர்த்தக அளவுகளுடன் ஒப்பிடுகையில், யூரோ/யென் இரட்டை நாணய மற்றும் டோவ் ஜோன்ஸ் தொழிற்துறை சராசரி உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிதியியல் சந்தைகளை விடவும் தங்கம் உயர்ந்தளவு திரவத்தன்மை கொண்டதாகும். 2023இல், தங்கத்தின் நாளாந்த சராசரி வர்த்தகப்படுத்தல் அளவு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 163 பில்லியனாகும். இதில், நேரடிப் பரிவர்த்தனையின் உடனடி மற்றும் பெறுதிகளின் ஒப்பந்தங்கள் நாளாந்த வர்த்தகப்படுத்திலில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 99

வரைபடம் 5: முக்கிய சொத்து வகுப்புக்களின் சராசரி நாளாந்த வர்த்தகப்படுத்தல் அளவுகள் - ஐ.அ.டொலர்கள்



மூலங்கள்: புளும்பெர்க், ப.நா.நி, உலக தங்கச் சபை

1. https://www.gold.org/goldhub/research/relevance-of-gold-as-a-strategic-asset (2025)

பில்லியனை பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை தங்கத்திற்கான வருங்கால ஒப்பந்தங்கள் உலகளாவிய செலாவணிகளில் நாளாந்த அளவில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 62 பில்லியனிற்கு வகைகூறின. இதற்குமேலதிகமாக, பௌதீக ரீதியில் பிணையளிக்கப்படும் தங்கத்திற்கான பரிவர்த்தனை செய்யப்படும் வர்த்தகப்படுத்தப்பட்ட நிதியங்கள் திரவத்தன்மையின் மேலதிக அடுக்கொன்றை வழங்கி, நாளாந்த வர்த்தகப்படுத்தல் அளவுகளில் ஐ.அ.டொலர் 2 பில்லியனாக சராசரியாக காணப்படுகின்றன.

தங்கச் சந்தையின் பரந்தளவும் விரிவும் பாரியளவிலான, நீண்டகாலத்திற்கு சொத்துக்களில் முதலீடுசெய்கின்ற நிறுவனம்சார் முதலீட்டாளர்களுக்கு இலகுவாக இடமளிக்கின்றது. பல நிதியியல் சந்தைகளைப் போலன்றி நிதியியல் நெருக்கடியான காலகட்டங்களிலும் கூட தங்கம் வலுவான திரவத்தன்மையைப் பேணி, முதலீட்டாளர்கள் தமது சொத்துப்பட்டியல்களிலுள்ள வேறு குறைந்தளவான திரவச் சொத்துக்களை விற்பனைசெய்வதற்கு கடினமாக இருக்கும்போது அல்லது தவறான விலையிடலுக்குட்படும்போது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு முதலீட்டாளர்களை இயலச்செய்கின்ற உறுதிப்பாட்டினை வழங்கின்றது.

3.4 பணவீக்கத்திற்கான காப்பு

தங்கம் வரலாற்று ரீதியில் அதன் கொள்வனவு சக்தியினைப் பாதுகாத்து, பணவீக்கத்திற்கு எதிராக நம்பகமான காப்புச் சாதனமாக உருவாகியுள்ளது. பணவீக்கம் அதிகரிக்கும் காலப்பகுதியில், தங்கம் வழமையாக பெறுமதியில் உயர்வடைந்து, ஒதுக்குகளின் உண்மையான கொள்வனவு சக்தியைப் பாதுகாப்பதற்கு உதவுகின்றது. பணவீக்கக் காலப்பகுதியில், தங்கத்தின் விலைகள் உயர்வடைந்து, பணவீக்கத்திற்கு எதிரான செயற்றிறன்வாய்ந்த காப்புச் சாதனமாக செயற்படும் என்பதை கீழே வரைபடம் 6 எடுத்துக்காட்டுகின்றது. சுவாரஸ்யமாக, அண்மைய மாதங்களில் பணவீக்கத்தின் வீழ்ச்சிக்கு மத்தியில் தங்க விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துள்ளன. இப்போக்கானது தங்க முதலீட்டாளர்களுக்கான அநுகூலங்களை நிரூபித்துள்ளது.

வரைபடம் 6 : தங்க விலைகளும் ஐக்கிய அமெரிக்க பணவீக்கமும்



மூலம்: புளூம்பெர்க்

3.5 இணைத்தரப்பினர்/வழங்குநர் இடர்நேர்வைத் தணித்தல்

இணைத்தரப்பினர் அத்துடன்/அல்லது வழங்குநர் இடர்நேர்வை ஈடுபடுத்துகின்ற ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் போலன்றி, தங்கம் எந்தவொரு அரசாங்கத்தின் அல்லது நிறுவனத்தின் கடன் நம்பகத்தன்மையைச் சார்ந்திராது, நாட்டின் படுகடன் நெருக்கடிகள் அல்லது முறைமைசார் வங்கி முறிவடைகின்ற காலங்களில் தனித்துவமான தாக்குப்பிடிக்கும்தன்மையை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக உலகளாவிய நிச்சயமற்றதன்மைகளின் காலப்பகுதியில், ஒதுக்குச் சொத்தொன்றாக அதன் ஈர்ப்பினை மேலும் இது அதிகரிக்கச்செய்துள்ளது.

4. ஒதுக்குகளில் தங்க ஒதுக்கீட்டிற்குச் செல்வாக்குசெலுத்துகின்ற காரணிகள்

4.1 பொருளாதார நிலைமைகள்

பொருளாதார உறுதிப்பாட்டிற்கு பதிலிறுத்தும் வகையில் அல்லது சட்டப்பூர்வமான நாணயங்களின் பெறுமதி

அழுத்தத்திற்குட்படும்போது மத்திய வங்கிகள் பெரும்பாலும் தமது தங்க ஒதுக்குகளை அதிகரிக்கின்றன. நிதியியல் குழப்பங்களின் போது தங்கம் வரலாற்று ரீதியாக தாக்குபிடிக்கும்தன்மையை வெளிப்படுத்தி, தேசிய ஒதுக்குகளைப் பாதுகாப்பதற்கான மிகவும் விரும்பப்படும் சொத்தாக மாறியுள்ளது. அதன் உள்ளார்ந்த பெறுமதி மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் என்பன பணவீக்கம், நாணய பெறுமதி இழப்பு மற்றும் புவிசார் அரசியல் இடர்நேர்வுகள் ஆகியவற்றுக்கு எதிராக காப்பை வழங்குகிறது.

மேலும், அமெரிக்க டொலருக்கும் தங்கத்திற்குமுள்ள எதிர்மறைத் தொடர்பு அதன் முக்கியத்துவத்தை மேலும் எடுத்துக்காட்டுகின்றது. டொலர் பலயீனமடையும் போது, தங்கத்தின் விலைகள் பெரும்பாலும் அதிகரித்து, நாணயத் தளம்பல்களுக்கு எதிராக மத்திய வங்கிகளுக்கு தாங்கிருப்பொன்றை வழங்கின்றன. குறிப்பாக நிச்சயமற்ற பொருளாதார சூழ்நிலைகளில் இவ்வியக்கவாற்றலானது ஒதுக்கு முகாமைத்துவ உபாயங்களின் முக்கிய அங்கமொன்றாக தங்கத்தை இடம்பெறச் செய்கின்றது.

4.2 புவிசார் அரசியல் பதற்றங்கள்

முரண்பாடுகள் அல்லது வர்த்தகம்சார்ந்த பிணக்குகள் போன்ற புவிசார்அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் மத்திய வங்கிகள் பெரும்பாலும் அவற்றின் தங்க ஒதுக்குகளை அதிகரிக்கச்செய்வதற்கு தூண்டுதலளிக்கின்றன. தங்கம் எந்த ஒரு நாட்டின் நாணயக் கொள்கைக்கும் கட்டுப்படாமல் தனித்துவமாக இருப்பதால், பொருளாதார உறுதிநிலையற்ற காலப்பகுதியில் மிகவும் நம்பகமானதும் உயர்ந்தளவு பெறுமதியுடைய சொத்தாவும் திகழ்கிறது. புவிசார் அரசியல் இடர்நேர்வு சுட்டெண்ணைப் (GPR)[2] பயன்படுத்தி புவிசார் அரசியல் இடர்நேர்வு காலப்பகுதியில் பல்வேறு சொத்து வகுப்புக்களின் செயலாற்றத்தை உலக தங்கச் சபை பகுப்பாய்வுசெய்தது. உலக தங்கச் சபையின் கண்டறிதல்களிற்கமைய, கீழே வரைபடம் 7இல் எடுத்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய பதற்ற நிகழ்வுகளில் தங்கம் ஏனைய சொத்து வகுப்புக்களை விடவும் சிறப்பாகச் செயற்பட்டது.

கீழே வரைபடம் 8 தங்க விலைகளின் வரலாற்றுரீதியிலான போக்கினை எடுத்துக்காட்டி, புவிசார் அரசியல் பதற்றம் மற்றும் நிச்சயமற்றதன்மை என்பன இடம்பெற்ற காலப்பகுதியில் தங்க விலைகள் அதிகரிக்குமென தெளிவாகக் காண்பிக்கின்றதுடன், இது அத்தகைய இடர்நேர்வுகளுக்கு எதிரான காப்பாக தங்கம் செயற்படுவதை எடுத்துரைக்கின்றது.

வரைபடம் 7: புவிசார்அரசியல் நெருக்கடிகளின் போது தங்கத்தின் செயலாற்றம்



***குறிப்பிட்ட சுட்டெண்களை மட்டுப்படுத்தியதன் காரணமாக இது 1999 சனவரி தொடக்கம் 2024 செத்தெம்பர் வரையான காலப்பகுதிக்கிடையிலுள்ள சராசரி வாராந்த செயலாற்றங்களை அடிப்படையாகக் கொண்டது. வார காலப்பகுதியில் உலகளாவிய அரசியல் இடர்நேர்வு சுட்டெண் 100 சதவீதத்தினால் அல்லது அதற்கு அதிகமாக உயர்வடைந்ததை வரைபடம் காண்பிக்கின்றது. மூலம்: புளும்பெர்க், உலக தங்கச் சபை**

2. டாரியோ கால்டாரா மற்றும் மேட்டியோ ஐகோவியெல்லோ ஆகியோர் புவிசார் அரசியல் பதற்றங்களை உள்ளடக்கிய செய்தித்தாள் கட்டுரைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பாதகமான புவிசார் அரசியல் நிகழ்வுகள் மற்றும் தொடர்புடைய இடர்நேர்வுகளின் அளவொன்றை உருவாக்கியதுடன் 1900 முதல் அதன் பரிணாமம் மற்றும் பொருளாதார விளைவுகளை ஆய்வு செய்தனர்.

வரைபடம் 8: தங்கத்தின் வரலாற்று விலைப் போக்குகள், 1970-2025



மூலங்கள்: புளும்பேர்க்

4.3 நாணயக் கொள்கை

நாணயக் கொள்கை, குறிப்பாக வட்டி வீதங்கள் மற்றும் கணியம்சார் தளர்த்தல் போன்ற திரவத்தன்மை வழிமுறைகள் தொடர்பாக மத்திய வங்கிகளால் எடுக்கப்படும் தீர்மானங்கள் தங்கத்திற்கான கேள்வியை நிர்ணயிப்பதில் குறிப்பிடத்தக்களவு பங்காற்றுகின்றன.

மத்திய வங்கிகள் வட்டி வீதங்களைக் குறைக்கின்ற போது, அரச முறிகள் அல்லது சேமிப்பு கணக்குகள் போன்ற பாரம்பரிய வட்டி உழைக்கும் சொத்துக்கள் மீதான வருவாய்கள் வீழ்ச்சியடைகின்றன. சில சந்தர்ப்பங்களில், விசேடமாக பொருளாதார வீழ்ச்சியின் போது அல்லது பணச்சுருக்க அழுத்தக் காலப்பகுதியின் போது வீதங்கள் பூச்சியம் அல்லது எதிர்க்கணியமாக கூட தோற்றம்பெறலாம். இத்தகைய சூழ்நிலையில், தங்க உடைமைகளுக்கான சந்தர்ப்பச் செலவு குறைந்து, முதலீட்டாளர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமான சொத்தாக அதனை இடம்பெறச்செய்கின்றது. நிலையான வருமானப் பிணையங்களைப் போலன்றி, தங்கம் வட்டியையோ அல்லது பங்குலாபத்தையோ தருவதில்லையெனினும், குறைந்தளவான வட்டி வீதச் சூழல்களில், இவ்வாறான பிரதிகூலமானச் சூழல் கவனத்திற்கொள்ளப்படுவதில்லை.

இதற்குமேலதிகமாக, பொருளாதார நெருக்கடியான காலப்பகுதியில், பொருளாதாரத்தினுள் திரவத்தன்மையை உட்செலுத்துவதற்கான அரசப் பிணையங்களின் அல்லது ஏனைய நிதியியல் சொத்துக்களின் பாரியளவில் கொள்வனவினை ஈடுபடுத்துகின்ற கொள்கையான கணியம்சார் தளர்த்தலை மத்திய வங்கிகள் நடைமுறைப்படுத்தலாம். கணியம்சார் தளர்த்தல் பொருளாதார நடவடிக்கையைத் தூண்டும் அதேவேளை, பெரும்பாலும் இது நாணயத் தேய்மானம் மற்றும் எதிர்காலப் பணவீக்கம் தொடர்பிலான கரிசனைகளை ஏற்படுத்துகின்றது. இதன்விளைவாக, முதலீட்டாளர்கள் பணவீக்கத்திற்கும் நாணய இடர்நேர்விற்கும் எதிரான காப்பாக தங்கத்தை நோக்கி திரும்பலடைந்து, இதன்மூலம் அதன் கேள்வியை அதிகரிக்கச்செய்யலாம்.

சுருக்கமாக, குறைந்தளவான வட்டி வீதங்கள் மற்றும் சொத்தினைக் கொள்வனவுசெய்யும் திட்டங்கள் உள்ளடங்கலாக தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கைகள், தங்கத்தை வைத்திருப்பதற்கான செலவினைக் குறைப்பதன் மூலம் அதன் கவர்ச்சிகரமான தன்மையை உயர்த்துவதற்கும் பாதுகாப்பானதும் பணவீக்கத்திற்கான காப்புச் சொத்தாகவும் தங்கத்தின் பெறுமதியை அதிகரிச்செய்வதற்கும் முனைகின்றன.

4.4 நாணய ஒதுக்குகள்

தங்க ஒதுக்கீடுகளை நிர்ணயிப்பதில் நாணய ஒதுக்குகளின் உள்ளமைப்பு முக்கிய பங்காற்றுகின்றது. தனியொரு நாணயத்தின் மீது தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு ஐ.அ.டொலர் போன்ற ஆதிக்கம்கொண்ட நாணயங்களிலிருந்து விலகி பன்முகப்படுத்தல் பெரும்பாலும் தங்க உடைமைகளை அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது. உதாரணமாக, இந்திய ரிசர்வ் வங்கி 2024 ஆம் ஆண்டுக்கான தங்கத்தைப் பெருமளவில் வாங்கும் நடவடிக்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்து, நவெம்பரில் அதன் ஒதுக்கிற்கு மேலதிகமாக 8 தொன் தங்கத்தைச்

சேர்த்துக்கொண்டது. இற்றைவரையான அதன் ஆண்டு கொள்வனவுகளை இது 73 தொன்களாகவும், மொத்த தங்க உடைமைகளை 876 தொன்களாகவும் ஆக்கி, 2024 ஆம் ஆண்டில் போலந்திற்குப் பிறகு இரண்டாவது பாரியளவிலான தங்கம் வாங்குபவராக அதன் நிலையை உறுதிப்படுத்தியது. ஆறு மாதகால இடைநிறுத்தத்திற்குப் பின்னர் சீன மக்கள் வங்கி தங்கக் கொள்வனவுகளை மீளத் தொடங்கியது என்ற அறிவிப்பு 2024 நவெம்பரில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக காணப்பட்டது. சீன மக்கள் வங்கி அதன் ஒதுக்குகளுக்கு 5 தொன்களை சேர்த்துக்கொண்டு, இற்றைவரையான அதன் ஆண்டிற்கான தேறிய கொள்வனவுகளை 34 தொன்களாகவும் மொத்தமாக அறிவிக்கப்பட்ட உடைமைகளை 2,264 தொன்களாகவும் உயர்த்தியதுடன் 5 சதவீதம் கொண்ட அதன் மொத்த ஒதுக்குகளுக்கு வகைகூறியதென அலுவல்சார் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

4.5 சந்தைப் போக்குகள்

தங்கத்தின் விலைகளும் உலகளாவிய சந்தைப் போக்குகளும் ஒதுக்கு பற்றிய ஒதுக்கீட்டு தீர்மானங்களில் செல்வாக்குச்செலுத்துகின்றன. விலை அசைவுகளுக்கு ஏற்ப மத்திய வங்கிகள் அவற்றின் தங்க உடைமைகளை சீராக்கி, பெறுமதி உயர்வடைதலுக்கான வாய்ப்புக்களைக் கொண்டு மூலதனப் பாதுகாப்பிற்கான தேவையினை சமநிலைப்படுத்தலாம்.

5. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் தங்கத்தின் வகிபாகம்

அண்மைய ஆண்டுகளில், வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் அதிகளவில் தங்கத்தை தமது வெளிநாட்டு ஒதுக்குச் சொத்துப்பட்டியல்களின் உபாயரீதியிலான கூறொன்றாக மாற்றியுள்ளன. சீனா, இந்தியா, ரஷ்யா, துருக்கி மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் தமது அலுவல்சார் தங்க உடைமைகளைத் தீவிரமாக விரிவுபடுத்தியுள்ளன. தங்கம் இடர்நேர்வு குறைந்த சொத்தாக அதன் வரலாற்று ரீதியிலான வகிபாகத்திற்கு மாத்திரமன்றி, பல மையங்கள் கொண்ட உலகளாவிய பொருளாதாரத்தில் அதன் உபாயப் பயன்பாட்டிற்கும் மதிப்பிடப்படுகின்ற இப்போக்கு ஒதுக்கு முகாமைத்துவ நடைமுறைகளில் பரந்தளவிலான மாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. வளர்ச்சியடைந்துவரும் சந்தைகளால் தங்கத்தை திரட்டுதல் மீதான இப்புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தை பல்வேறு முக்கிய காரணிகள் இயக்குகின்றன:

5.1 நாணய பன்முகப்படுத்தல்

வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் பாரம்பரியமாக அவற்றின் ஒதுக்குகளில் கணிசமான பகுதியை ஐக்கிய அமெரிக்க டொலர், யூரோ மற்றும் பிரித்தானிய பவுண் போன்ற முக்கிய ஒதுக்கு நாணயங்களில் வைத்திருக்கின்றன. எனினும், விசேடமாக புவிசார் அரசியல் பதற்றங்கள், வட்டி வீதத் தளம்பல்கள் மற்றும் நிதியியல் தடைகளின் பயன்பாடு போன்றவற்றை கருத்திற்கொண்டு, ஐக்கிய அமெரிக்க டொலர் மீது அதிகமாகச் சார்ந்திருப்பது குறித்த வளர்ந்துவரும் கரிசனைகள் மத்திய வங்கிகள் அவற்றின் ஒதுக்குச் சொத்துக்களைப் பன்முகப்படுத்துவதற்கு தூண்டியுள்ளன.

தங்கம் எந்தவொரு தனி நாட்டினதும் கடன்நம்பகத்தன்மை அல்லது பொருளாதாரக் கொள்கையுடன் பிணைக்கப்படாத நடுநிலையானதும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சொத்தாகவும் கருதப்படுகின்றது. சட்டப்பூர்வமான நாணயங்களைப் போலன்றி, தங்கம் பெறுமதியிழப்பு, மதிப்பிறக்கம் அல்லது கொள்கையால் தூண்டப்பட்ட பணவீக்கத்திற்கு உட்படாது இது ஒரு நாட்டின் ஒதுக்குகளின் உறுதிப்பாட்டினையும் உண்மையான மதிப்பையும் நீண்ட காலத்திற்கு பேணுவதற்கான பெறுமதிமிக்கதொரு கருவியாக அமைகிறது.

5.2 பொருளாதார தாக்குபிடிக்கும்தன்மை

வளர்ச்சியடைந்துவரும் சந்தைகளின் பொருளாதார மற்றும் நிதியியல் தாக்குபிடிக்கும்தன்மையை மேம்படுத்துவதில் தங்கம் முக்கியமானப் பங்காற்றுகின்றது. இப் பொருளாதாரங்கள் பெரும்பாலும், பண்ட விலைகளின் தளம்பல்கள், உலகளாவிய வட்டி வீதச் சுழற்சிகள், மற்றும் செலாவணி வீதத் தளம்பல்கள் போன்ற வெளிநாட்டு அதிர்வுகளுக்கு அதிகளவில் பாதிக்கப்படும் தன்மையை அடிக்கடி எதிர்கொள்கின்றன.

தங்கத்தை உடைமையாகக் கொண்டிருப்பதன் மூலம், இப்பிராந்தியங்களிலுள்ள மத்திய வங்கிகள் அவற்றின் ஐந்தொகைகளை வலுப்படுத்துவதுடன் சந்தை அழுத்தக் காலப்பகுதியில் பொதுமக்களினதும் முதலீட்டாளரினதும் நம்பிக்கையை அதிகரிக்கலாம். ஏனைய நிதியியல் சொத்துக்களுடன் தங்கத்தின் குறைந்தளவானத் தொடர்பு சொத்துப்பட்டியல் பன்முகப்படுத்தல் நன்மைகளையும் வழங்கி, ஒதுக்குச் சொத்துப்பட்டியல்களில் ஒட்டுமொத்த இடர்நேர்வைக் குறைப்பதற்கு உதவுகின்றது.

நெருக்கடியான காலப்பகுதியில், வெளிநாட்டு நாணயத் திரவத்தன்மையைப் பாதுகாப்பதற்கு செலாவணி வீதத்திற்கு துணையளிப்பதற்கு அல்லது உள்நாட்டுப் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒன்றில் நேரடியான விற்பனை மூலமாகவோ அல்லது பிணையுறுதியாகப் பயன்படுத்துவதன் மூலமாகவோ தங்கத்தைத் திரட்டலாம்.

5.3 உபாய ரீதியிலான சுயநிர்ணயம்

உபாய ரீதியிலான சுயநிர்ணயம் உலகளாவிய புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார ஒழுங்கு மிகவும் சிக்கலுக்குரியதாக மாறுவதனால் பல வளர்ந்துவரும் நாடுகளுக்கான முக்கிய முன்னுரிமையொன்றாக மாறியுள்ளது. தங்கம் நாட்டின் சொத்தொன்றாகக் கருதப்பட்டு, எந்தவொரு வெளிநாட்டு நிறுவனத்தின் அல்லது நிதியியல் முறைமையின் கட்டுப்பாட்டிற்கு வெளியிலேயே வைத்திருக்கப்படுகின்றது. வெளிநாட்டு அரசாங்கங்களின் அல்லது நிறுவனங்களின் பொறுப்புக்களாகக் கருதப்படுகின்ற ஒதுக்கு நாணயங்களைப் போலன்றி, தங்கம் எவருடைய பொறுப்பாகவும் இருக்காது என்பதுடன் இது மத்திய வங்கிகளுக்கு சொத்தின் மீது நேரடியான சொத்தாண்மையையும் கட்டுப்பாட்டையும் வழங்கின்றது.

பொருளாதாரத் தடைகள் மற்றும் நிதியியல் கட்டுப்பாடுகள் வெளிநாட்டுக் கொள்கையின் கருவிகளாக அதிகளவில் பயன்படுத்தப்படும் உலகில் இந்த சுயநிர்ணயம் மிகவும் மதிப்புமிக்கதாகும். கணிசமான தங்க ஒதுக்குகளை வைத்திருப்பது, வெளிநாட்டு அரசியல் அல்லது பொருளாதார அழுத்தங்களை எதிர்கொண்டாலும் கூட, நாடுகள் நாணய மற்றும் இறைக் கொள்கையில் ஓரளவு சுயாதீனத்தைப் பேணுவதற்கு அனுமதிக்கின்றது.

6. தங்க ஒதுக்குகளை முகாமைசெய்வதிலுள்ள சவால்கள்

தங்கம் மத்திய வங்கிகளுக்கான பெறுமதிமிக்க சொத்தொன்றாக இருக்கின்ற அதேவேளை, உறுதிப்பாட்டு மற்றும் பன்முகப்படுத்தல் நன்மைகளை வழங்கி, தங்க ஒதுக்குகளை முகாமைசெய்வது அதற்கே உரிய சவால்களை கொண்டுசேர்க்கின்றது. இத்தகைய சவால்கள்கள் உகந்த ஒதுக்கு முகாமைத்துவத்தை உறுதிசெய்வதற்கு கவனமாகத் திட்டமிடல் மற்றும் உபாயத் தீர்மானத்தை மேற்கொள்ளுதல் வேண்டுகின்றன.

6.1 களஞ்சியப்படுத்தலும் பாதுகாப்பும்

தங்க ஒதுக்குகளின் உடைமைகளிலுள்ள முதன்மையான சவால்களில் ஒன்று, அவற்றின் பாதுகாப்பான களஞ்சியப்படுத்தலும் பாதுகாப்பை உறுதிசெய்வதுமாகும். தங்கம் பெரும்பாலும் மத்திய வங்கியின் காப்பறையில் அல்லது பன்னாட்டு கட்டுக்காவலில் உயர்ந்தளவு பாதுகாப்பு வசதிகள் தேவைப்படுகின்ற பௌதீக ரீதியிலான சொத்தாகும். இக்களஞ்சியத் தீர்வுகள் உட்கட்டமைப்பு, காப்புறுதி மற்றும் தொடர்ச்சியானப் பேணுதல் உள்ளடங்கலாக குறிப்பிடத்தக்கச் செலவுகளைக் கொண்டவையாகும். இதற்கு மேலதிகமாக, அமைவிடங்கள் அல்லது கட்டுக்காவலர்களிடையே தங்கத்தைக் கொண்டுசெல்வது, திருட்டு அல்லது சேதம் போன்ற ஏற்பாட்டு ரீதியிலான சிக்கல்கள் மற்றும் இடர்நேர்வுகளையும் ஈடுபடுத்துகின்றன. ஆகையினால், மத்திய வங்கிகள் தமது தங்க உடைமைகளைப் பாதுகாப்பதற்கு வளங்கள் மிகுந்ததாகவும் செலவுமிக்கதாகவும் இருக்கக்கூடிய வலுவான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் அவசரத் தேவைக்கான ஏற்பாடுகள் போன்றவற்றில் முதலீடுசெய்வதற்கு வேண்டப்படுகின்றன.

6.2 சந்தைத் தளம்பல்கள்

தங்கம் நிலையானதும் நம்பகமானதுமான சொத்தாகக் கருதப்பட்டபோதிலும், அதன் விலைகள் தளம்பல்களைத் தாண்டியவையல்ல. உலகளாவிய கேள்வியில் ஏற்படும் மாற்றங்கள், வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள், புவிசார்அரசியல் பதற்றங்கள் மற்றும் பேரண்டபொருளாதார போக்குகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் தங்கத்தின் விலைகள் பாதிக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, அதிகரித்துவரும் வட்டி வீதங்கள் பெரும்பாலும் வருமானத்தை ஈட்டித்தராத சொத்தாக தங்கத்திற்கான ஈர்ப்பைக் குறைத்து, இதனால் அதன் விலை வீழ்ச்சிகளுக்கு வழிவகுக்கின்றது. தங்கத்தை வாங்குவது, விற்பது அல்லது வைத்திருப்பது குறித்து தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு, மத்திய வங்கிகள் சந்தை அசைவுகளையும் போக்குகளையும் தொடர்ந்தும் கண்காணித்தல் வேண்டும். சந்தை அசைவுகளை எதிர்பார்ப்பதற்கு தவறினால், தங்க ஒதுக்குகளில் குறைவான வருமானம் அல்லது இழப்புகள் ஏற்படக்கூடும்.

6.3 சந்தர்ப்பச் செலவு

முறிகள் அல்லது ஏனைய நிதியியல் சாதனங்கள் போன்ற வட்டி உழைக்கும் சொத்துக்களைப் போலன்றி, தங்கம் வருமானத்தை உருவாக்காது. தங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியங்களை வேறு வகையில் கிரமமாக ஆதயத்தை வழங்குகின்ற சொத்துகளில் முதலீடு செய்யக்கூடியதாக இருப்பதனால், இவ்விளைவு வீதப் பற்றாக்குறை மத்திய வங்கிகளுக்கு சந்தர்ப்பச் செலவொன்றைப் பிரதிபலிக்கின்றது. தங்கத்தை வைத்திருப்பதன் நன்மைகளை பணவீக்கம் மற்றும் நாணயப் பெறுமதியிழப்பிற்கெதிரான காப்பொன்றாக, மாற்றுவழி முதலீடுகளிலிருந்து கிடைக்கும் சாத்தியமான வருமானத்திற்கு எதிராக மத்திய வங்கிகள் கவனமாக சமநிலைப்படுத்த வேண்டும். தங்க இருப்புக்கள் பரந்தளவிலான நிதியியல் மற்றும் பொருளாதாரக்

குறிக்கோள்களுடன் அணிசேர்ந்திருப்பதை உறுதிசெய்கின்ற வகையில், இவ்விட்டுக்கொடுப்பு ஒதுக்கு முகாமைத்துவத்திற்கான மூலோபாய அணுகுமுறையொன்றை வேண்டுகின்றது.

6.4 திரவத்தன்மை தடைகள்

தங்கம் பொதுவாக திரவச் சொத்தாகக் கருதப்பட்டபோதிலும், அதிகளவிலான தங்கத்தை காசாக மாற்றுவது சவால்களை ஏற்படுத்தக்கூடும். குறுகிய காலத்தில் கணிசமானளவு தங்கத்தை விற்பனைசெய்வது சந்தை விலைகளை தற்காலிகமாக குறைத்து, மத்திய வங்கிக்கு இழப்புகளை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கலாம். அதேபோன்று, பாரியளவில் தங்கத்தை கொள்வனவுசெய்தலானது விலைகளை உயர்த்தி, கையேற்பு செலவுகளை அதிகரிக்கச்செய்யலாம். மத்திய வங்கிகள் தமது கொடுக்கல்வாங்கல்களை கவனமாக சரியான நேரத்தில் தீர்மானித்து, சந்தை தாக்கத்தைக் குறைப்பதற்கு தங்கத்தை வாங்குவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு கட்டம் கட்டமாக அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். மேலும், தங்கத்தை காசாக அல்லது ஏனைய சொத்துக்களாக மாற்றுகின்ற செயன்முறை நிர்வாகரீதியிலான தாமதங்களையும் கொடுக்கல்வாங்கல் செலவுகளையும் ஈடுபடுத்தி, திரவத்தன்மை முகாமைத்துவத்தில் மேலும் சிக்கலை ஏற்படுத்தலாம்.

7. ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கத்திற்கான எதிர்கால தோற்றப்பாடு

மத்திய வங்கிகள் அதிகரித்துவரும் சிக்கலான மற்றும் நிச்சயமற்ற உலகளாவிய நிதியியல் சூழலில் பயணிப்பதனால், பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கத்தின் வகிபாகம் குறிப்பிடத்தக்கதாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. பரந்தளவிலான பொருளாதார, தொழில்நுட்பவியல் மற்றும் புவிசார் அரசியல் போக்குகளைப் பிரதிபலித்து ஒதுக்குச் சொத்தாக தங்கத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு பல முக்கிய காரணிகள் காணப்படக்கூடும்.

7.1 தொழில்நுட்பவியல் ரீதியிலான முன்னேற்றங்கள்

நிதியியல் தொழில்நுட்பத்தில் குறிப்பாகத் தொடரேட்டுத் தொழில்நுட்பம் மற்றும் பகிரப்பட்ட பேரேட்டுத் தொழில்நுட்பம் போன்றவற்றிலுள்ள புத்தாக்கங்கள் தங்கம் முகாமைசெய்யப்படும் மற்றும் வர்த்தகம்செய்யப்படும் விதத்தில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. பேரேட்டுத் தொழில்நுட்பம் தங்க கொடுக்கல்வாங்கல்களை தடமறிதல், வெளிப்படைத்தன்மை மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தி, தங்க ஒதுக்குகளின் உண்மைத்தன்மை மற்றும் சொத்தாண்மையை உறுதிப்படுத்துவதை மத்திய வங்கிகளுக்கு எளிதாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளச்செய்கின்றது. மேலும், பௌதீக தங்கத்தால் பிணையளிக்கப்படும் டிஜிட்டல் தங்க அடையாளக் குறியீடுகளின் தோற்றம் தங்கத்தை வர்த்தகப்படுத்தலையும் நுண்ணாய்வுமயமாக்கலையும் நெறிப்படுத்தி, கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் குறைப்பதற்கும் திரவத்தன்மையை மேம்படுத்தக்கூடும். டிஜிட்டல் தங்கம் போன்ற அடையாள குறியாக்கப்பட்ட சொத்துக்களுடன் தங்குதடையின்றி ஒருங்கிணைக்கக்கூடிய மத்திய வங்கி டிஜிட்டல் நாணயங்கள் எழுச்சியடைவதற்கு இந்த அபிவிருத்திகள் நிறைவளிக்கின்றன. மத்திய வங்கி டிஜிட்டல் நாணயங்கள் மிகவும் செயற்றிறன்மிக்க எல்லை தாண்டிய தீர்ப்பனவு பொறிமுறைகளை இயலச்செய்து பாதுகாப்பானதும் செய்நிரலாக்கக்கூடியதான நாணயச் சூழலில் அதேநேர கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தக்கூடும். இம்முன்னேற்றங்கள் தங்கத்தை மிகவும் கவர்ச்சிகரமானதும் வினைத்திறன்மிக்க சொத்தொன்றாக மாற்றி, மத்திய வங்கியின் சொத்துப்பட்டியல்களில் அதன் வகிபாகத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

7.2 பசுமை வலு நிலைமாற்றம்

புதுப்பிக்கத்தக்க வலுவை நோக்கிய உலகளாவிய மாற்றமும் மின்சார வாகனங்களின் அதிகரிப்பும் தங்கத்தின் கேள்வி மற்றும் ஒதுக்கு முகாமைத்துவத்தில் அதன் வகிபாகத்திற்கு மறைமுகமான உள்ளார்ந்தங்களை ஏற்படுத்தக்கூடும். தங்கத்தின் அதன் சிறந்த கடத்துத்திறன் மற்றும் துருப்பிடித்தல் எதிர்ப்பு திறன் காரணமாக, கைத்தொழில் பிரயோகங்களில் குறிப்பாக இலத்திரனியல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பசுமை தொழில்நுட்பங்களுக்கான கேள்வி அதிகரித்தமையினால், தங்கத்திற்கான கைத்தொழில் கேள்வி அதிகரித்து, அதன் விலை மற்றும் கிடைக்கும்தன்மையில் சாத்தியமானளவில் செல்வாக்குசெலுத்தலாம். கைத்தொழில் கேள்வியில் ஏற்படும் மாற்றங்கள் தங்கத்தின் பெறுமதியையும் ஒதுக்குச் சொத்தாக அதன் ஈர்ப்பைப் பாதிக்கக்கூடும் என்பதால், மத்திய வங்கிகள் இப் போக்குகளை உன்னிப்பாகக் கண்காணித்தல் வேண்டும்.

7.3 உலகளாவிய பொருளாதார மாற்றங்கள்

வளர்ச்சியடைந்துவரும் சந்தைகளின் குறிப்பாக ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி தங்கத்திற்கான அதிகரித்த

கேள்வியைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பல வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் தங்கத்தை நிதியியல் உறுதிப்பாட்டின் அடையாளமாகவும், நாணய தளம்பலுக்கெதிரான பாதுகாப்பாகவும் கருதுகின்றன. இப்பொருளாதாரம் விரிவடைந்து, அவற்றின் மத்திய வங்கிகள் பாரியளவு ஒதுக்குகளை திரட்டுவதால், தங்கத்திற்கான அவற்றின் கேள்வி அதிகரிக்கக்கூடும். குறிப்பாக பாரம்பரிய சட்டப்பூர்வ நாணயங்களில் அல்லது உலகளாவிய நிதியியல் முறைமையில் நம்பிக்கை குறைந்தளவுள்ள பிராந்தியங்களில் இப்போக்கு தங்கத்தை உலகளாவிய ஒதுக்குச் சொத்தாக மீளவலுப்படுத்தக்கூடும். மேலும், சில நாடுகளில் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் டொலரில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கான முயற்சிகளும், பதிலீட்டு ஒதுக்குச் சொத்தொன்றாக தங்கத்தின் ஈர்ப்பை மேலும் உயர்த்தக்கூடும.

8. முடிவுரை

ஒதுக்கு முகாமைத்துவத்தில் தங்கம் முக்கிய கூறொன்றாகத் தொடர்ந்தும் விளங்கி, இடர்நேர்வுகுறைந்த, பணவீக்கத்திற்கு எதிராக காப்பளிக்கும் சொத்தாக, பன்முகப்படுத்தல் கருவியாக அதன் வகிபாகத்திற்கு மதிப்பளிக்கின்றது. களஞ்சியப்படுத்தல் செலவுகள் மற்றும் சந்தர்ப்பச் செலவுகள் போன்ற சவால்கள் இருந்தபோதிலும், அது வழங்கும் உபாயரீதியிலான அநுகூலங்கள் இப்பின்னடைவுகளை விடவும் மிக அதிகமாக காணப்படுகின்றன. மத்திய வங்கிகள் அதிகரித்தளவில் சிக்கலான பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் மாற்றமடைந்துவரும் உலகளாவிய இயக்கவாற்றலை எதிர்கொள்ளும் காலத்தில், தங்கத்தின் நீடித்திருக்கும் பண்புகள் எதிர்காலத்தில் அதனை தவிர்க்க முடியாத ஒதுக்குக் காப்பாக இடம்பெறச்செய்கின்றன.

உசாத்துணைகள்:

World Gold Council, “Central Bank Gold Reserves Survey 2025”

World Gold Council, Gold Outlook 2025: Navigating rates, risk and growth

Douglass, P., Goldberg, L.S. and Hannaoui, O.Z., “Taking Stock: Dollar Assets, Gold, and Official Foreign Exchange Reserves”, May 2024

Arslanalp, S., Eichengreen, B. and Simpson-Bell, C., “Gold as international reserves: A barbarous relic no more?”, Journal of International Economics, November 2023

Research reports on Gold outlook from ANZ, DZ Bank, HSBC and JP Morgan

சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் வகிபாகமும் பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகள் மீதான அதன் தாக்கமும்

என் பி சி எல் விஜயசேகர
மூத்த உதவிப் பணிப்பாளர்
இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம்

1. அறிமுகம்

இலங்கை, 1950 ஓகத்து 29ஆம் திகதியன்று தனது பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டது முதல், பன்னாட்டு நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான உறவு பற்றிய பல உதாரணங்களை வரலாறு எமக்கு காண்பிக்கின்றது. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் எனும் பதம் பன்னாட்டு நாணய நிதியத்துடன் நெருங்கிய தொடர்புடையதுடன், இக்கட்டுரையானது, அடிப்படையில் இச்சூழ்நிலையில் அதிகம் பேசப்படும் தலைப்பொன்றாக விளங்கும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பற்றிய சில நுண்நோக்குகளையும் வழங்குவதோடு, பன்னாட்டு நாணய நிதியத்தின் வகிபாகம் பற்றிய புரிதலையும் வழங்குகின்றது.

2. வரலாறு

1944இல், பிரெட்டன் வூட்ஸ் மாநாட்டில், பன்னாட்டு நாணய முறைமையின் மத்திய ஒதுக்கு சொத்தாக தங்கம் அங்கீகரிக்கப்பட்டது. இம்மாநாடானது IIஆம் உலகப் போரின் போது, போருக்குப் பின்னரான உலகிற்கான நிதியியல் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக 44 நாடுகளின் பிரதிநிதித்துவத்துடன், 1944 யூலையில், நியூ ஹாம்பஷயர், பிரெட்டன் வூட்ஸ் எனும் இடத்தில் இடம்பெற்றது. பிரெட்டன் வூட்ஸ் முறைமையின் கீழ், 44 நாடுகளுக்கு சொந்தமான நாணயங்கள் ஐ.அ.டொலருக்கு எதிராக நிலையான பெறுமதியாக நிர்ணயிக்கப்பட்டு, ஐ.அ.டொலர் தங்கத்தின் விலைக்கு எதிராக நிலையான பெறுமதியாக நிர்ணயிக்கப்பட்டது. இது 44 நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை கட்டுப்படுத்த உதவியதுடன் 1945 முதல் 1970இன் ஆரம்ப காலம் வரை தொழிற்பாட்டில் இருந்தது. “டிரி∴பின் குழப்பநிலை” என அறியப்படும் பிரெட்டன் வூட்ஸ் முறைமையில் இயல்பாகவே இணைந்து காணப்படும் குறைப்பாடொன்றின் காரணமாக, இம்முறைமையானது 1960களின் இறுதியில் முறிவை சந்தித்தது. 1960இல், பிரெட்டன் வூட்ஸ் முறைமையில் காணப்படும் அடிப்படை சிக்கலானது, பெல்ஜிய-அமெரிக்க பொருளியளாலரான ரொபர்ட் டிரி∴பினால் வெளிப்படுத்தப்பட்டது.

44 நாடுகளின் நாணயங்கள் ஐ.அ.டொலருக்கெதிராக நிலையான பெறுமதியாக நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக, வளர்ச்சி பெற்றுவரும் உலக வர்த்தக அளவுகள் ஐ.அ.டொலரின் அதிக நிரம்பலை தேவைப்படுத்தி, ஐக்கிய அமெரிக்க சென்மதி நிலுவைகள் எண்தொகைகளில் தொடர்ச்சியான பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. எனவே, அதிக அமெரிக்க டொலர்களை மீண்டும் நாட்டிற்குள் ஈர்ப்பதற்காக வட்டி வீதங்களை அதிகரிப்பதன் மூலம் அமெரிக்கா அதன் சென்மதி நிலுவை பற்றாக்குறைக்காக தீர்வு காணுமாயின், ஏனைய உறுப்பு நாடுகள் தமது ஒதுக்குகளில் அதிக குறைவை சந்திக்க நேரிட்டு, இது உலகளாவிய பொருளாதார சரிவினைத் தூண்டி, அதிகரித்த நிச்சயமற்றத்தன்மைக்கு வழிவகுக்கும். மாறாக, ஐக்கிய அமெரிக்க சென்மதி நிலுவை பற்றாக்குறை தொடருமாயின், உலக பொருளாதாரம் வளர்ச்சியடையும். எவ்வாறாயினும், இறுதியில் மிதமிஞ்சிய சென்மதி நிலுவை பற்றாக்குறை அமெரிக்க டொலரின் மதிப்பினை குறைந்து, இதனூடாக உறுப்பு நாடுகள் வைத்திருக்கும் சொத்துக்களின் ஒப்பீட்டு மதிப்பினை குறைவடைய செய்து, சாத்தியமான நிலையான மாற்று வீத முறைமையின் சீர்குலைவுக்கு வழிவகுக்கும். இதுவே டிரி∴பின் குழப்பநிலையின் பின்னணியில் காணப்படும் எண்ணக்கருவாகும்.

இச்சவால்களுக்கு மத்தியில், புதிய பன்னாட்டு ஒதுக்கு சொத்தொன்றினை உருவாக்குவதற்கான அவசியம் தோற்றம்பெற்று, அதனடிப்படையில், 1969இல் பன்னாட்டு நாணய நிதியமானது சிறப்பு எடுப்பனவு உரிமையை உருவாக்கியது. 1973இல் பிரெட்டன் வூட்ஸ் முறைமை முறிவடைந்த போது, பன்னாட்டு நாணய நிதியம், சிறப்பு எடுப்பனவு உரிமையை உலக நாணயங்களைக் கொண்ட தொகுதியொன்றின் மதிப்பாக வரைவிலக்கணப்படுத்தியது.

3. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பற்றிய எண்ணக்கருவும் நோக்கமும்

பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகளின் அலுவல்சார் பன்னாட்டு நாணய ஒதுக்குகளை குறைநிரப்புவதே சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் முதன்மைக் குறிக்கோளாகும். 1969இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகள், ஒதுக்கு நாணயங்களின் நிரம்பலில் காணப்படும் சாத்தியமான பற்றாக்குறைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் மேலதிக திரவத்தன்மையை வழங்குவதன் மூலம் உலகளாவிய பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பற்றிய பிரதான தவறான எண்ணக்கருக்களில் ஒன்று, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நாணயமொன்றெனும் அனுமானமாகும். ஒரு நாட்டின் பன்னாட்டு ஒதுக்கு சொத்து நிலையை தொகுக்கும் போது, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் கணக்கிற்கொள்ளப்பட்டாலும், அது நாணயமொன்றாக கருதப்படுவதில்லை. எவ்வாறாயினும், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதியொன்றினைக் கொண்டிருப்பதோடு, இப்பெறுமதியானது ஐந்து நாணயங்களின், அதாவது, ஐ.அ.டொலர், பிரித்தானிய ஸ்ரேலிங் பவுன், யூரோ, யப்பான் யென் மற்றும் சீன ரென்மின்பி என்பனவற்றைக் கொண்ட தொகுதியொன்றின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது. மூன்று தரப்பினர் மாத்திரமே சிறப்பு எடுப்பனவு உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளனர். அதாவது, பன்னாட்டு நாணய நிதியம், பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட உடைமையாளர்கள்.

குறிப்பாக, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பின்வரும் நோக்கங்களுக்காக பணியாற்றுகின்றது:

- உலகளாவியத் திரவத்தன்மையை அதிகரித்தல்

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகள், பன்னாட்டு திரவத்தன்மையை குறிப்பாக, நிதியியல் இடர்கள் அல்லது உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மை போன்ற காலப்பகுதியில், அதிகரிக்க உதவுவதனூடாக, வர்த்தக மிகைகள் அல்லது கடன்பெறுதல் மூலம் பாரிய பன்னாட்டு நாணய ஒதுக்குகளை திரட்டுவதற்கு நாடுகள் மீதான அழுத்தத்தை குறைகின்றது.

- ஒதுக்குச் சொத்தொன்றாக தொழிற்படுதல்

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நாணயமொன்றில்லையெனினும், பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகளின் தங்குத்தடையின்றி பயன்படுத்தக்கூடிய நாணயங்களுக்கான சாத்தியமான உரித்துரிமையை அவை குறிக்கின்றன. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில், நாடுகளுக்கு இடையே அவை வர்த்தகம் செய்யப்பட்டு, வட்டி உழைக்கும் பன்னாட்டு ஒதுக்குச் சொத்தாக செயற்படலாம்.

- சென்மதி நிலுவையை உறுதிப்படுத்துதல்

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உலகளாவிய வர்த்தகம் மற்றும் வளர்ச்சியை தடைப்படுத்தக்கூடிய வரையறுக்கப்பட்ட பொருளாதார கொள்கைகள் அல்லது வழிமுறைகள் என்பவற்றினை நாடாமல், தாங்கிருப்பொன்றினை வழங்குவதன் மூலம், குறுகிய-கால சென்மதி நிலுவைகளின் சவால்களுக்கு தீர்வினை காண நாடுகளை இயலச்செய்கின்றன.

- நாணய ஒத்துழைப்பை ஊக்குவித்தல்

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பன்னாட்டு ரீதியில் நாணய ஒத்துழைப்பை பேணிவளர்ப்பதற்கும் தனியொரு தேசிய நாணயமொன்றில் தங்கியிருப்பதனை குறைப்பதற்குமான கருவியொன்றாக விளங்கி, மிகவும் சமநிலையானதும் நிலையுறுதிமிக்கதுமான பன்னாட்டு நாணய முறைமையொன்றிற்கு ஆதரவளிக்கின்றது.

நடைமுறையில், இலங்கை உள்ளிட்ட 190 உறுப்பு நாடுகளும் 20 குறித்துரைக்கப்பட்ட உடைமையாளர்களும் காணப்படுகின்றன[1]. குறித்துரைக்கப்பட்ட உடைமையாளர்கள் பன்னாட்டு நாணய நிதியத்தால் பெயர்குறிக்கப்பட்ட அலுவல்சார் நிறுவனங்கள் என்பதுடன், அவை சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்தின் பங்கேற்பாளர்கள் அல்லர். பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகள் அவற்றின் தங்கம் மற்றும் பல்வேறு நிதியியல் கருவிகளிலும் ஒதுக்கு நாணயங்களிலும் வைத்திருக்கும் வேறு முதலீட்டு உடைமைகளுடன் இணைந்து, அவற்றின் உரிய பன்னாட்டு ஒதுக்குகளின் பகுதியொன்றாக தமது சிறப்பு எடுப்பனவு உரிமைகளை வைத்திருக்கின்றன.

---

1 தற்போதைய குறித்துரைக்கப்பட்ட 20 உடைமையாளர்கள், நான்கு மத்திய வங்கிகள்: (ஐரோப்பிய மத்திய வங்கி, மத்திய ஆபிரிக்க அரசுகளின் வங்கி, மேற்கு ஆபிரிக்க அரசுகளின் மத்திய வங்கி மற்றும் கிழக்கு கரீபியன் மத்திய வங்கி) மூன்று அரசாங்கங்களுக்கிடையேயான நாணய நிறுவனங்கள்: (பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி, இலத்தீன் அமெரிக்க ஒதுக்கு நிதியம் மற்றும் அரபு நாணய நிதியம்) பதின்மூன்று அபிவிருத்தி நிறுவனங்கள்: (ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி, ஆபிரிக்க அபிவிருத்தி நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, கரீபியன் அபிவிருத்தி வங்கி, இலத்தீன் அமெரிக்க அபிவிருத்தி வங்கி, மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஐரோப்பிய வங்கி, ஐரோப்பிய முதலீட்டு வங்கி, அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான அபிவிருத்தி வங்கி, மீள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, நோர்டிக் முதலீட்டு வங்கி மற்றும் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்) என்பவையாகும்.

4. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடும் உடைமைகளும்

உறுப்பு நாடுகளுக்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகள் அவற்றின் பன்னாட்டு நாணய நிதிய ஒதுக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டே பகிரப்படுகின்றன. உறுப்பு நாடொன்றின் ஒதுக்கீடானது உலகப் பொருளாதாரத்தில் அதன் ஒப்பீட்டு ரீதியான நிலையின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது. உறுப்பு நாடொன்று சென்மதி நிலுவை தேவைகளை நிறைவேற்றுதல் அல்லது அதன் பன்னாட்டு ஒதுக்குகளில் நாணய உள்ளமைப்பை சீராக்கம் செய்தல் போன்ற நோக்கங்களுக்காக அதன் சிறப்பு எடுப்பனவு உரிமைகளை தங்குதடையின்றி மாற்றக்கூடிய நாணயங்களாக பரிமாற்றிக் கொள்ளலாம். இன்றுவரை, வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளவாறு, சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒரு விசேட ஒதுக்கீடும் நான்கு பொதுவான ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகள், ஒதுக்கு தேவைப்பாட்டினைக் கொண்டிருக்கும் பொதுவாக உலகளாவிய நிகழ்வுகளுடன் அணிசேர்ந்து காணப்படுகின்றன. முதல் பொதுவான ஒதுக்கீடானது 1970இல் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், முன்னொருபோதுமில்லாத பாரியளவிலான மற்றும் மிக அண்மைய பொதுவான ஒதுக்கீடானதுமான 456.5 பில்லியன் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 2021இல் இடம்பெற்றது.

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகள் பற்றிய தொகுப்பு அத்தகைய பகிர்ந்தளிப்புக்களுக்கான காரணங்களுடன் சேர்ந்து அட்டவணை 1இல் கீழே காட்டப்பட்டுள்ளது.

இன்றுவரை, பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு

வரைபடம் 1: கடந்த காலங்களில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடு



அட்டவணை 1: பொதுவான மற்றும் விசேட சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீட்டின் நோக்கங்கள்

ஆண்டு	தொகை (சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பில்லியன்கள்)	நோக்கம்
1970-1972 (பொது)	9.3	திரவத்தன்மை மற்றும் பிரெட்டன் வூட்ஸ் முறைமை தொடர்பான கரிசனைகளுக்கு மத்தியில் உலகளாவிய ஒதுக்குகளை குறைநிரப்புதல்.
1979-1981(பொது)	12.1	உயர்வடைந்துவரும் பணவீக்கத்திற்கும் எரிபொருள் விலை அதிர்வுகளுக்கும் மத்தியில், உலகளாவிய திரவத்தன்மைக்கு ஆதரவளிப்பதற்கு இது அவசியமாகும்.
2009 (விசேட)	21.5	1981இன் பின்னர் உறுப்பினர்களாகிய மற்றும் முன்னைய பொது ஒதுக்கீடுகளில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளைப் பெறாத பன்னாட்டு நாணய நிதிய உறுப்பு நாடுகளுக்கிடையே சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகளில் காணப்படும் சமத்துவமின்மையை சீரமைத்தல்.
2009 (பொது)	161.2	உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் பின்னர், உறுப்பு நாடுகளின் ஒதுக்குகளையும் நம்பிக்கையையும் வலுப்படுத்தல்.
2021 (பொது)	456.5	கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்தான மீட்சிக்கான தீர்வினை காணுதல் மற்றும் ஆதரவளித்தல்.

நாடுகளுக்காக சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 660.7 பில்லியன் மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றின் பன்னாட்டு ஒதுக்குகளை குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்கின்றது. முன்னேற்றமடைந்த நாடுகள் சரியான நியதிகளிலான பாரிய ஒதுக்கீடுகளை பெற்று, அவற்றின் உயர்வான பன்னாட்டு நாணய நிதிய ஒதுக்கீடுகளையும் உலகளாவிய பொருளாதாரத்தில் மிகுந்த செல்வாக்கினையும் பிரதிபலிக்கும் அதேவேளை, அதனைத் தொடர்ந்து தோற்றம் பெற்றுவரும் சந்தை நாடுகள் பெறுவதோடு, பின்னர் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கிடையில் பன்னாட்டு ஒதுக்குக்களின் பாரிய பங்கினை இவ்வொதுக்கீடுகள் கொண்டிருக்கின்றன. 2021இல் 456.5 பில்லியன் தொகையான (ஐ.அ.டொலர்கள் 650 பில்லியன்) உறுப்பு நாடுகளுக்கிடையிலான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் பொது ஒதுக்கீட்டின் பகிர்ந்தளிப்பு, 2021 ஓகத்து 23ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்தது. இவ் ஏற்பாட்டின் கீழ், இலங்கைக்கான ஒதுக்கீடு சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 578.8 மில்லியனாக இருந்தது (மொத்தத்தில் 0.12 சதவீதம்), இதில் இலங்கைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 554.8 மில்லியன்களாக இருந்தன[2].

பொதுவான ஒதுக்கீட்டில் தமது விகிதசம பங்கினைப் பெற்றுக்கொள்வதற்கு பன்னாட்டு நாணய நிதிய உறுப்பு நாடுகளுக்கான குறிப்பான தேவைப்பாடுகள் எதுவுமில்லை. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீட்டு நேரத்தில், ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் இரண்டு நிலைகள் கிடைக்கும். அதாவது, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடு மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமை. ஆரம்பத்தில் இவ்விரு நிலைகளும் ஒன்றோடொன்று சமமாக காணப்படும். குறிப்பிட்ட உறுப்பு நாடொன்று சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நிலையொன்றினை வைத்திருக்கும் போது, அந்நாடு தனது உடைமைக்கான வட்டியை பெற்றுக்கொள்வதோடு, அதன் ஒதுக்கீட்டிற்கான வட்டியை செலுத்த வேண்டும். ஆகவே, உறுப்பு நாடொன்றின் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடு அதன் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமைகளை சமப்படுத்துகின்றவிடத்து, மூடிய முறைமையொன்றில், கொடுப்பனவுசெய்யத்தக்க வட்டி மற்றும் கிடைக்கப்பெறத்தக்க தொகை ஆகிய இரண்டும் தேறல்செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், உறுப்பு நாடொன்று தங்குத்தடையின்றி பயன்படுத்தக்கூடிய நாணயங்களுக்காக தனது சிறப்பு எடுப்பனவு உரிமைகளைப் பரிமாற்றும் போது, அத்தகைய நாடானது கடன்படுநர் நிலைக்குவந்து, அதன் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நிலை குறைக்கப்படும். அத்துடன், நாடானது பற்றாக்குறைக்கான வட்டியை செலுத்த வேண்டும். மாறாக, உறுப்பு நாடொன்று சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்காக அதன் தங்குத்தடையின்றி பயன்படுத்தக்கூடிய நாணயங்களை பரிமாற்றுமிடத்து, அத்தகைய நாடானது கடன்கொடுநராகின்றது. இங்கு, அதன் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நிலை அதிகரிக்கப்பட்டு, மிகைக்கான வட்டியை அந்நாடு பெற்றுக்கொள்ளும்.

5. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்தின் வகிபாகம்

பன்னாட்டு நாணய நிதிய சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களமானது பன்னாட்டு நாணய நிதியத்தினதும், உறுப்பு நாடுகளினதும் மற்றும் குறித்துரைக்கப்பட்ட உடைமையாளர்களினதும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமைகளினதும் உறுப்பு நாடுகளுக்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகளினதும் பதிவினை பேணுகின்றது. மேலும், அனைத்து சிறப்பு எடுப்பனவு உரிமைகளுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களும் தொழிற்பாடுகளும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்தின் ஊடாகவே இடம்பெறுகின்றன. ஐந்தொகையின் நோக்கிலிருந்து பார்க்கையில், புதிய சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்படும் போது, உறுப்பு நாடொன்றின் மொத்த பன்னாட்டு ஒதுக்குகள், கிடைக்கப்பெற்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் தொகையால் அதிகரிக்கும். அதேவேளை, பன்னாட்டு நாணய நிதியத்தின் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்திற்கான கடப்பாட்டினை பிரதிபலிப்பதற்காக சமமான நீண்டகால பொறுப்பொன்று பதிவுசெய்யப்பட்டு, நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் நிலைமையின் மீதான நடுநிலையான தேறிய தாக்கமொன்று ஏற்படுத்தப்படுகின்றது. இதனடிப்படையில், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்தின் பங்கேற்பாளர்கள் அவற்றின் ஐந்தொகையில் அவற்றின் உரிய சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீட்டினை பொறுப்பொன்றாகவும், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமைகளை சொத்தொன்றாகவும் காட்டுகின்றன. எவ்வாறாயினும், பன்னாட்டு நாணய நிதியமோ அல்லது குறித்துரைக்கப்பட்ட உடைமையாளர்களோ சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகளைப் பெற முடியாததால், அவற்றின் ஐந்தொகையில், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமையானது நேரொத்த பொறுப்பொன்றாகவின்றி சொத்தொன்றாக காண்பிக்கப்படுகின்றது.

6. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதி

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நாணயமொன்றல்லாத போதும், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியின் பெறுமதியின் அடிப்படையில் அவை தங்குத்தடையின்றி பயன்படுத்தக்கூடிய நாணயங்களாக பரிமாற்றம் செய்யப்படலாம். 1970 முதல் 1980 வரையான காலப்பகுதியில், சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் மதிப்பு, உலகளாவிய வர்த்தகத்தில் குறைந்தது 1 சதவீதத்திற்கு வகைக்கூறிய 16 பன்னாட்டு நாணய நிதிய உறுப்பு நாடுகளின் நாணயங்களிலிருந்து பெறப்பட்டது. எவ்வாறாயினும், தொகுதியை மீள உருவாக்குவது சவால்மிக்கதாகவும் சில நாணயங்கள் பரந்தளவில் வர்த்தகப்படுத்தப்படாமையாலும் 16 நாணயங்களைக் கொண்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியின் நடைமுறைச் சாத்தியம் சிக்கல்மிக்கதாகவே

2 *https://www.imf.org/en/Topics/special-drawing-right/2021-SDR-Allocation [Accessed 10 August. 2024]*

இருந்தது. இதற்கான தீர்வொன்றாக, 1981இல், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியிலிருந்த நாணயங்களின் எண்ணிக்கை 16இலிருந்து ஐந்து நாணயங்களாக, அதாவது, ஐ.அ டொலர், யப்பான் யென், ஜெர்மன் மார்க், பிரான்ஸ் பிரான்ங் மற்றும் ஸ்ரேலிங் பவுன் என்பனவாக குறைக்கப்பட்டது. 1999இல், ஜெர்மன் மார்க் மற்றும் பிரான்ஸ் பிரான்ங் ஆகிய இரண்டும் யூரோவால் பதிலீடு செய்யப்பட்டு, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியிலிருந்த நாணயங்களின் எண்ணிக்கையை ஐந்திலிருந்து நான்கு நாணயங்களாக மேலும் குறைத்தது. 2016இல், முக்கிய முன்னேற்றமடைந்து வரும் சந்தை நாணயமாக சீன ரென்மின்பி அறிமுகப்படுத்தப்பட்டு, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதி இறுதியாக ஐந்து நாணயங்களைக் கொண்டதாக அமைந்தது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் உடன்படிக்கையின் உறுப்புரைக்கு அமைவாக, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றன என தீர்மானிக்கும் அதிகாரம் நிறைவேற்று சபையிடம் காணப்படுகின்றது. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியின் உள்ளமைப்பை, உலகின் மிகவும் பரந்தளவு வர்த்தகப்படுத்தப்படுகின்ற நாணயங்களை அது பிரதிபலிப்பதை உறுதிசெய்வதற்காக ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது அவசியமாயின் அதற்கு முன்னர் இச்சபை மீளாய்வு செய்கின்றது. அதனடிப்படையில், மிக அண்மைய மீளாய்வு 2022இல் இடம்பெற்றது. மிக அண்மைய மீளாய்வில் தொகுதியிலுள்ள நாணயங்கள் மாற்றமின்றி காணப்பட்ட போதிலும், யப்பான் யென் மற்றும் ஸ்ரேலிங் பவுன் ஆகிய இரண்டையும் விஞ்சி, கடந்த காலத்தில் ரென்மின்பியின் மதிப்பு உயர்வடைந்துள்ளது. இதற்கமைய, வரைபடம் 2இல்

வரைபடம் 2: சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியிலுள்ள நாணய மதிப்புகள் (%)



வரைபடம் 3: 2022 மீளாய்வின் கீழ் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியிலுள்ள நாணய மதிப்புகள்



காட்டப்பட்டுள்ளவாறு, காலப்போக்கில் நாணயப் மதிப்பானது மாற்றம்பெற்றதோடு, சொல்லப்பட்ட நாடுகளால் பன்னாட்டு வர்த்தகத்தின் மீது ஏற்பட்ட தாக்கத்தின் மாற்றத்தை எடுத்துக்காட்டுவதுடன், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியிலுள்ள தற்போதைய நாணயப் மதிப்பானது வரைபடம் 3இல் காட்டப்பட்டுள்ளது.

அத்தகைய மீளாய்வின் போது, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியின் உட்சேர்த்தலிற்காக மிகப் பொருத்தமான நாணயங்களை தெரிவுசெய்வதற்கு மேலதிகமாக, நிறைவேற்று சபை அதன் உரிய மதிப்பினையும் மதிப்பீடு செய்து சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதத்தை நிர்ணயிக்க பயன்படுத்தப்படுகின்ற நிதியியல் கருவிகளை பரீட்சிக்கும். சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியின் உட்சேர்த்தலிற்காக நாணயங்களை தெரிவுசெய்யும் போது, பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை இரண்டு முக்கிய பிரமாணங்கள் மீது கவனம் செலுத்தும். முதலாவது, உலகளாவிய பொருளாதாரத்தில் அதன் முக்கியத்துவத்தையும் ஒதுக்கு சொத்துக்களை வழங்குவதற்கான இயலாற்றலையும் குறித்துக்காட்டுகின்ற ஒரு நாட்டின் ஏற்றுமதிகளின் ஒப்பீட்டு ரீதியிலான அளவு. இரண்டாவது, நாட்டின் தங்குத்தடையின்றி பயன்படுத்தக்கூடியவாறான நாணயங்களின் அந்தஸ்து, அதாவது, பன்னாட்டு கொடுக்கல்வாங்கல்களுக்காக பரந்தளவில் அது பயன்படுத்தப்படுகின்றமை மற்றும் உலகளாவிய பரிமாற்ற சந்தைகளில் பரந்தளவில் வர்த்தகப்படுத்தப்படுகின்றமை.

7. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதிமதிப்பீடு

குறிப்பிட்ட நாளொன்றிற்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் பெறுமதியானது “நாணயத் தொகையின்” தயாரிப்பினதும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியில் காணப்படும் ஒவ்வொரு நாணயத்திற்குமான செலாவணி வீதத்தினதும் கூட்டுத்தொகை மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது. 2025 செத்தெம்பர் 16ஆம் திகதிக்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மதிப்பிற்கான எளிமையான கணிப்பீடு பின்வருமாறு. அதன்படி, 2025 செத்தெம்பர் 16ஆம் திகதிக்கான 1 சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கான பெறுமதி ஐ.அ.டொலர் 1.375804இற்கு சமமானதும் அல்லது 1 ஐ.அ.டொலர் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 0.726848இற்கு சமமானதுமாகும்.

நாணயத் தொகைகள் (ஒவ்வொரு நாணயத்திற்குமான நிலையான தொகைகள்) மற்றும் நாணயங்களின் பெறுமதிகள் ஆகிய இரண்டும் ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கும் ஒருமுறை இடம்பெறும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மீளாய்வில் பெறுவிக்கப்படுகின்றன. இரண்டும் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர், அடுத்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மீளாய்வு

அட்டவணை 2: 2025 செத்தெம்பர் 16ஆம் திகதிக்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மதிப்பு கணிப்பீடு

நாணய அலகு	நாணயத் தொகை	செலாவணி வீதம்	சமமான ஐ.அ.டொலர்
சீன யுவான்	1.0993	7.1125	0.154559
யூரோ	0.37379	1.18095	0.441427
யப்பான் யென்	13.452	147.045	0.091482
ஸ்ரேலிங் பவுன்	0.08087	1.36275	0.110206
ஐ.அ.டொலர்	0.57813	1	0.578130
			1.375804
	1 ஐ.அ.டொலர் = சிறப்பு எடுப்பனவு உரிமைகள்		0.726848
	1 சிறப்பு எடுப்பனவு உரிமைகள = ஐ.அ.டொலர்		1.375804

அட்டவணை 3: 2022இன் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மீளாய்வில் தீர்மானிக்கப்பட்ட நாணய தொகைகளும் மதிப்புகளும்

	ஐ.அ.டொலர்	யூரோ	சீன ரென்மின்பி	யப்பான் யென்	ஸ்ரேலிங் பவுன்
நாணயத் தொகைகள்	0.57813	0.37379	1.0993	13.452	0.08087
நாணய மதிப்புகள் (%)	43.38	29.31	12.28	7.59	7.44

இடம்பெறும் வரையில் அவை மாற்றமின்றி காணப்படும். 2022இல் இடம்பெற்ற, மிக அண்மைய சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மீளாய்வில் தீர்மானிக்கப்பட்ட நாணயத் தொகைகள் மற்றும் நாணயங்களின் பெறுமதிகள் அட்டவணை 3இல் காட்டப்பட்டுள்ளன.

நாணயத் தொகையின் கணிப்பீட்டிற்காக, 2022 யூலை 29 பெறுமதிமதிப்பீட்டு திகதியாக எடுக்கப்பட்டதுடன் (மிக அண்மைய சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மீளாய்வு இடம்பெறுவதற்கு சற்று முன்னர்), அதே நாளில், ஐ.அ டொலருக்கான ஒவ்வொரு நாணயத்திற்குமான உரிய செலாவணி வீதங்களும் எடுக்கப்பட்டன. இவ்வெண்ணிக்கையை பெறுவிப்பதற்கான பொதுவான சமன்பாடு யாதெனில், ஐ.அ டொலரின் நியதிகளில் நிலையான தொகைகளின் சந்தை மதிப்புகளின் மொத்தம் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒன்றிற்கு சமமாக இருக்க வேண்டும்.

$$\sum_{i=1}^{5}(\text{நாணயத் தொகை}_i \times \text{செலாவணி வீதம்}_i) = 1 \text{ சிறப்பு எடுப்பனவு உரிமைகள்}$$

அனைத்து நாணயங்களுக்குமான மேற்குறித்த சமன்பாட்டினை ஒரே நேரத்தில் தீர்க்கும் போது, அடுத்த ஐந்து வருடங்களுக்கும் நிர்ணயிக்கப்படவேண்டிய ஒவ்வொரு நாணயத்திற்குமான நாணயத் தொகை கிடைக்கப்பெறுகின்றது.

வரலாற்று ரீதியான சிறப்பு எடுப்பனவு உரிமைகள் மதிப்புகளை, அவற்றின் கணிப்பீடுகளுடன் சேர்த்து, பன்னாட்டு நாணய நிதிய வெப்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்[3].

8. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதம்

1981இல், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதிக்கான திருத்தத்துடன் இணைந்து, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதமும் கருத்திற்கொள்ளப்பட்டன. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் விளைவு அதன் கையேற்பையும் உடைமையையும் ஊக்குவிப்பதற்கு போதுமானளவில் கவர்ச்சிகரமானதாக இருக்க வேண்டும், ஆனால் சென்மதி நிலுவை பற்றாக்குறை நிலைகளில் அல்லது தங்குத்தடையின்றி பயன்படுத்தக்கூடிய நாணயமொன்றாக அதனை மாற்றுகின்ற போது அதன் பயன்பாட்டைத் ஊக்கமிழக்கசெய்யும் அளவில் உயர்வானதாக இருக்கக்கூடாது என உறுப்பு நாடுகள் இணங்கின. ஆகவே, இதற்கு ஆதரவளிக்கும் வகையில், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதமானது, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதிமதிப்பீட்டிலுள்ள நாணயங்களுக்கான குறுகிய கால படுகடன் சாதனங்கள் மீதான மூன்று மாத சந்தை வட்டி வீதங்களுடன் அணிசேர்ந்திருந்தன. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதிமதிப்பீடானது நாளாந்தம் இடம்பெறுகின்ற போதிலும், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதமானது ஒவ்வொரு வாரமும், அதாவது, முன்னைய வெள்ளிக்கிழமைக்கான சந்தை வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு திங்கட்கிழமையும் கணிக்கப்படுகின்றது. இச்சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதமானது சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகள் மீதான காலாண்டு கொடுப்பனவுகளையும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமைகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது. குறித்துரைக்கப்பட்ட உடைமையாளர்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் ஆகிய இரண்டும் அவற்றின் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமைகள் மீதான வட்டியொன்றினை ஈட்டிக்கொள்கின்றன. சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியில் காணப்படும் நாணயங்களின் பின்வரும் நிதியியல் சாதனங்கள் மீதான வட்டியானது, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதத்தை நிர்ணயிப்பதற்காக பின்வருமாறு பயன்படுத்தப்படுகின்றது.

அட்டவணை 4: சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதத்தை கணிப்பிடுவதற்காக கருத்தில் கொள்ளப்படும் நிதியியல் சாதனங்கள்

நாணய அலகு	நிதியியல் சாதனம்
சீன ரென்மின்பி	சீன திறைசேறி முறிகள் மீதான மூன்று மாத அடிப்படை அளவுக் குறியீட்டு வட்டி வீதம்
யூரோ	AA மற்றும் அதற்கு மேல் மதிப்பீடு செய்யப்பட்ட யூரோ பிராந்திய மத்திய அரசாங்க முறிகளின் மீதான மூன்று மாத உடன் விளைவு வீதம்
யப்பான் யென்	யப்பானிய திறைசேறியால் வழங்கப்படும் மூன்று மாத விலைக்கழிவு உண்டியல்கள்
ஸ்ரேலிங் பவுன்	ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தால் வழங்கப்படும் மூன்று மாத திறைசேறி உண்டியல்கள்
ஐ.அ.டொலர்	ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தால் வழங்கப்படும் மூன்று மாத திறைசேறி உண்டியல்கள்

3 *https://www.imf.org/external/np/fin/data/rms_sdrv.aspx [2024 nrj;njk;gh; 17 md;W mZfg;gl;lJ]*

சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதம் பின்வரும் இரண்டில் அதிக பெறுமதியுடையதை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது: (i) சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகுதியில் காணப்படும் தனிப்பட்ட நாணயத்தின் மீதான வட்டி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரி, அதாவது, ஒவ்வொரு நாணயத்தின் தொகையை அதன் உரிய வட்டி வீதத்தாலும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கு எதிரான செலாவணி வீதத்தாலும் அல்லது (ii) 0.05 சதவீதம் என்ற குறைந்தப்பட்ச வீதத்தாலும் பெருக்குவதனூடாக கணிக்கப்படும் பெறுமதி ஆகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதமானது 0.05 சதவீதத்திற்கு குறைவாக வீழ்ச்சியடைய முடியாது. உதாரணமாக, உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றம் கொவிட்-19 நோய்த்தொற்று காலப்பகுதியின் போது, கணிப்பிடப்பட்ட வீதம் எதிர்மறையாக காணப்பட்ட போதிலும், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதமானது 0.05 சதவீதம் என்ற குறைந்தப்பட்ச வீதமாகவே பேணப்பட்டது. வரலாற்று ரீதியான சிறப்பு எடுப்பனவு உரிமைகள் வட்டி வீதங்கள், பன்னாட்டு நாணய நிதிய வெப்தளத்தில் கிடைக்கப்பெறுகின்றன[4].

9. சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் பயன்கள்

சிறப்பு எடுப்பனவு உரிமைகளை வைத்திருப்பதால் பன்னாட்டு நாணய நிதிய உறுப்பு நாடுகள் அனுபவிக்கும் சில நன்மைகள் பின்வருமாறு;

- ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர், பன்னாட்டு நாணய நிதிய உறுப்பு நாடொன்று அதன் பன்னாட்டு ஒதுக்குகளின் பகுதியொன்றாக தனது சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகையை வைத்திருக்கலாம். இது நாட்டின் ஒதுக்குகளின் வளர்ச்சிக்கு உதவியாகவிருக்கும்.
- உறுப்பு நாடொன்று தன்னார்வ வர்த்தக ஏற்பாடுகள் மூலம் தங்குத்தடையின்றி பயன்படுத்தும் நாணயங்களுக்காக சிறப்பு எடுப்பனவு உரிமைகளை ஒன்றில் விற்கவோ அல்லது வாங்கவோ முடியும். தன்னார்வ வர்த்தக ஏற்பாடுகள் பன்னாட்டு நாணய நிதியத்திற்கும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் திணைக்களத்தின் பங்கேற்பாளர்களுக்குமிடையிலான இருதரப்பு உடன்படிக்கைகளாக காணப்படுவதோடு, இவ்வுடன்படிக்கையின் கீழ், இரு தரப்பும் நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்குள் சிறப்பு எடுப்பனவு உரிமைகளை வாங்கவோ அல்லது விற்கவோ இணங்கிக்கொள்கின்றன. கொடுக்கல்வாங்கலை மேற்கொள்வதற்கு எந்தவொரு தன்னார்வ வர்த்தக ஏற்பாட்டு பங்கேற்பாளர்களும் விரும்பாதவிடத்து, பன்னாட்டு நாணய நிதியமானது பெயர்குறித்த பொறிமுறையை செயல்படுத்தும். இப்பொறிமுறையானது, சிறப்பு எடுப்பனவு உரிமைகளுக்கான பரிமாற்றமாக தங்குத்தடையின்றி பயன்படுத்தும் நாணயங்களை வழங்குவதற்காக, வலுவான சென்மதி நிலுவையையும் ஒதுக்கு நிலையையும் கொண்ட உறுப்பு நாடுகளை தெரிவுசெய்வதுடன் தொடர்புபடுத்துகின்றது. எவ்வாறாயினும், 1987 முதல், தன்னார்வ வர்த்தக ஏற்பாடுகள் மூலம் அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதால், இப்பொறிமுறை பயன்படுத்தப்படவில்லை.
- உறுப்பு நாடொன்று அல்லது குறித்துரைக்கப்பட்ட பயன்பாட்டாளரொருவர் மற்றுமொரு உறுப்பு நாடொன்றிற்கு சிறப்பு எடுப்பனவு உரிமைகளை இலவசமாக அன்பளிப்பு செய்யலாம்.
- நிதியியல் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்தல்.
- முன்கூட்டி இணங்கிய செலாவணி வீதங்களில் உடன் கொடுக்கல்வாங்கல்களாக உறுப்பு நாடுகளுக்கிடையில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளை வாங்குதல் மற்றும் விற்றல்.
- உறுப்பு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர நாணயப் பரிமாற்றல் ஒப்பந்த உடன்படிக்கைகள், முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலும் நிலையான செலாவணி வீதத்திலும் கொடுக்கல்வாங்கல்களை நேர்மாற்றிக் கொள்வதற்கான உடன்படிக்கையொன்றுடன், தங்கம் நீங்கலாக, தங்குத்தடையின்றி பயன்படுத்தும் நாணயமொன்றிற்காக சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் பரிமாற்றத்தை அனுமதிக்கின்றது.
- முன்கூட்டி இணங்கிய செலாவணி வீதங்களில், உறுப்பு நாடுகளுடன் சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் முன்னோக்கிய தொழிற்பாடுகள்.
- முன்கூட்டி இணங்கிய முதிர்வடையும் திகதி மற்றும் வட்டி வீதங்களில், உறுப்பு நாடுகளுக்கான சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் கடன்களை வழங்குதல். இம்மீள்கொடுப்பனவுகளும் வட்டி கொடுப்பனவுகளும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் அனுமதிக்கப்படலாம்.

10. பன்னாட்டு நாணய நிதியமும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளும் இலங்கையும்

பன்னாட்டு நாணய நிதியத்திற்கும் இலங்கைக்குமிடையில் நீண்டகால உறவொன்று காணப்படுகின்றது. எனவே, 1950இல் பன்னாட்டு நாணய நிதியத்தில் உறுப்புரிமை பெற்ற முதல் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். வரலாற்றுரீதியாக, இலங்கையானது, பொருளாதார நிச்சயற்றத்தன்மை காலப்பகுதிகள் போன்ற பல சந்தர்ப்பங்களில், குறிப்பாக நாட்டின் சென்மதி நிலுவை நிலைமைக்கு ஆதரவளிப்பதற்காக

4 *https://www.imf.org/external/np/fin/data/sdr_ir.aspx [Accessed 10 September 2024]*

பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவினை நாடியுள்ளது. இலங்கைத் தொழிற்பட்டுவரும் மிக அண்மைய பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டம், 2023 மாச்சு 20ஆம் திகதியன்று ஒப்புதலளிக்கப்பட்ட, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 2,286 மில்லியன் (ஏறத்தாழ ஐ.அ டொலர்கள் 3 பில்லியன்) தொகையான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாடு ஆகும். முன்னைய சந்தர்ப்பங்களை போலல்லாமல், இவ்வசதியானது சென்மதி நிலுவை மற்றும் வரவுசெலவுத் திட்ட ஆதரவு ஆகிய இரண்டிற்கும் பணியாற்றுவதற்காக வழங்கப்பட்டது.

வரலாற்று ரீதியான தரவுகள், செலுத்தவேண்டிய தொகைகள், துணை ஆவணங்கள், மற்றும் பிந்தைய செய்திகள் போன்ற இலங்கை தொடர்பான பன்னாட்டு நாணய நிதிய தகவல்களை, பன்னாட்டு நாணய நிதிய வெப்தளத்தினூடாக பெற்றுக்கொள்ளலா[5].

சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் 2021இன் பொது ஒதுக்கீட்டின் கீழ், 2021 ஓகத்தில் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 554.75 மில்லியனை இலங்கை பெற்றுக்கொண்டது. சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் 2009இன் பொது மற்றும் சிறப்பு ஒதுக்கீடுகளின் கீழ், சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 306.46 மில்லியன் மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 18.13 மில்லியனை முறையே 2009 ஓகத்து மற்றும் செத்தெம்பரில் இலங்கைப் பெற்றுக்கொண்டது. 2025 யூன் இறுதியில் உள்ளவாறு, இலங்கைக்கான மொத்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடானது, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 950 மில்லியனாகவிருந்தது. இச்சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமையானது நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலையில் சொத்துக்களின் பகுதியொன்றாக உருவாகி, படுகடன் கடப்பாடுகளை நிறைவேற்றுதல், ஒதுக்குகளின் சொத்து மற்றும் நாணய உள்ளமைப்பை சீராக்குதல் அத்துடன் சிறப்பு எடுப்பனவு உரிமைகளில் பன்னாட்டு நாணய நிதிய மூலதன மற்றும் வட்டித் தொகைகளை செலுத்துதல் வாயிலாக காலத்திற்கு காலம் உடைமையானது ஐ.அ.டொலராக மாற்றுவதற்கு இச்சிறப்பு எடுப்பனவு உரிமைகள் இலங்கை மத்திய வங்கியால் பயன்படுத்தப்பட்டது. இதனடிப்படையில், 2025 யூன் இறுதியில் உள்ளவாறு, இலங்கைக்கான மொத்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடானது மொத்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 950 மில்லியனாக காணப்பட்ட போதிலும், இலங்கையின் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் உடைமை சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 1,737,524 ஆகவிருந்தது. இது மொத்த ஒதுக்கீட்டில் 0.18 சதவீதமாகும்.

அட்டவணை 5இல் தரப்பட்டுள்ளவாறு, 1950 ஓகத்து 29ஆம் திகதியன்று பன்னாட்டு நாணய நிதியத்தில் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டது முதல், இலங்கை தற்போது தனது பதினேழாவது பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தில் இருக்கின்றது. இலங்கையின் முதலாவது பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டம் 1965இல் தொடங்கப்பட்ட அதேவேளை, மிக அண்மையில் இடம்பெறுகின்ற நிகழ்ச்சித்திட்டமானது 2023 மாச்சில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரையில், பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கான முழு ஒதுக்கீட்டினையும் வழங்கிய மிகவும் வெற்றிகரமான பன்னாட்டு நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டமானது 2009இல் ஆரம்பிக்கப்பட்டது. 1980 வரை, இலங்கையானது முக்கியமாக தாராளமயமாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் சென்மதி நிலுவை சிக்கல்களை தீர்ப்பதற்கும் 7 துணைநில் ஏற்பாடுகளிலும், 1 விரிவாக்கப்பட்ட நிதிய வசதியிலும் இருந்ததைத் தொடர்ந்து, வெளிவாரி அழுத்தங்கள் மற்றும் உள்ளக குழப்பநிலைகளை கொண்ட காலங்களில் ஆதரவினை வழங்குவதற்காக 1980 காலப்பகுதியில் துணைநில் ஏற்பாடொன்றிலும் கட்டமைப்புசார் சீராக்க வசதி கடமைப்பொறுப்பிலும் இருந்தது. 1990களில், நிகழ்ச்சித்திட்டமானது தாராளமயமாக்கலிலும் வரவுசெலவுத் திட்ட ஒழுக்கத்திலும் அதிக கவனம் செலுத்தியது. இதனைத்தொடர்ந்து, இந் நிகழ்ச்சித்திட்டமானது ஒதுக்குகளை மீள்கட்டியெழுப்புவதையும் பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதிலும் மற்றும் கட்டமைப்புக்கு ஆதரவளிப்பதையும், இறைத்திரட்சி, அரசிற்கு உரித்தான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்புகள் மற்றும் அரசிறை திரட்டல் என்பவற்றை இலக்காக கொண்டது.

2022 செத்தெம்பரில், நாட்டின் பேரண்டப்பொருளாதார நிலையுறுதியினை மீள்கட்டமைத்தல் மற்றும் பொதுப்படுகடன் நிலைபெறுதன்மையினை அடைதல் என்பவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு, சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 2.286 பில்லியன் தொகையான, விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் நான்கு ஆண்டுகளுக்கான அலுவலர் மட்ட உடன்படிக்கையை பன்னாட்டு நாணய நிதியத்துடன் இலங்கை எட்டியது. மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான நான்காவது மீளாய்வின் நிறைவைத் தொடர்ந்து பொருளாதாரக் கொள்கை மீதான அலுவலர் மட்ட உடன்படிக்கையினை எட்டிய பின்னர், 2025 யூலையில் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 254 மில்லியன் கொண்ட ஐந்தாவது தொகுதியினை பன்னாட்டு நாணய நிதியம் பகிர்ந்தளித்த அண்மையதும் தற்போது இடம்பெற்று வருகின்றதுமான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் இதுவாகும். இத்தொகுதியின் கிடைப்பனவுகளுடன், இலங்கை மொத்தமாக சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 1.0 பில்லியனைப் (ஏறத்தாழ ஐ.அ டொலர்கள் 1.74 பில்லியன்) பெற்று, 50 சதவீத நடைமுறைப்படுத்தல் மைற்கல்லை பதிவுசெய்தது. இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டும், குறிப்பாக

5 *https://www.imf.org/en/Countries/LKA [Accessed 25 August. 2024]*

அட்டவணை 5: 2025 யூன் 30இல் உள்ளவாறு இலங்கைக்கான கடன்வழங்கல் கடப்பாடுகளின் பதிவுகள்

வசதி	ஏற்பாட்டிற்கான திகதி	காலாவதி யாகும் திகதி	உடன்பட்ட தொகை (சிஎஉ)'000	பயன்படுத் தப்பட்ட தொகை (சிஎஉ)'000	வெளிநின்ற தொகை (சிஎஉ)'000
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி	20-மார்ச்-23	19-மார்ச்-27	2,286,000	1,016,000	1,016,000
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி	03-யூன்-16	02-யூன்-20	1,070,780	952,230	430,746
துணைநில் ஏற்பாடு	24-யூலை-09	23-யூலை-12	1,653,600	1,653,600	0
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி	18-ஏப்-03	17-ஏப்-06	144,400	20,670	0
விரிவாக்கப்பட்ட கடன் வசதி	18-ஏப்-03	17-ஏப்-06	269,000	38,390	0
துணைநில் ஏற்பாடு	20-ஏப்-01	19-செத்-02	200,000	200,000	0
விரிவாக்கப்பட்ட கடன் வசதி	13-செத்-91	31-யூலை-95	336,000	280,000	0
கட்டமைப்புசார் சீராக்க கடன் வசதி	9-மார்ச்-88	8-மார்ச்-91	156,170	156,170	0
துணைநில் ஏற்பாடு	14-செத்-83	31-யூலை-84	100,000	50,000	0
விரிவாக்கப்பட்ட நிதிய வசதி	1-சன-79	31-திசெ-81	260,300	260,300	0
துணைநில் ஏற்பாடு	2-திசெ-77	1-திசெ-78	93,000	93,000	0
துணைநில் ஏற்பாடு	30-ஏப்-74	29-ஏப்-75	24,500	7,000	0
துணைநில் ஏற்பாடு	18-மார்ச்-71	17-மார்ச்-72	24,500	24,500	0
துணைநில் ஏற்பாடு	12-ஓகத்-69	11-ஓகத்-70	19,500	19,500	0
துணைநில் ஏற்பாடு	6-மே-68	5-மே-69	19,500	19,500	0
துணைநில் ஏற்பாடு	15-யூன்-66	14-யூன்-67	25,000	25,000	0
துணைநில் ஏற்பாடு	15-யூன்-65	14-யூன்-66	30,000	22,500	0
மொத்தம்			**6,712,250**	**4,838,360**	**1,446,747**

மிகவும் அவசியமான மற்றும் நீண்டகாலமாக செய்யப்படாதுள்ள கட்டமைப்புசார் சீராக்கங்களுக்கான தீர்வினைக் காண்பதற்காக, நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைந்துக்கொள்வதில் ஆர்வம் காட்டிவருகின்றன.

இதனடிப்படையில், 2016 மற்றும் 2023இல் செயற்படுத்தப்பட்ட மிக அண்மைய இரு விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பன்னாட்டு நாணய நிதிய கடன்வழங்கல் கடப்பாடுகளின் கீழ் இலங்கைக்கான மொத்த வெளிநிற்கின்ற தொகை சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 1,446.75 மில்லியன் ஆகும். இவ்வெளிநிற்கின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் தொகையானது இலங்கைக்கு கிடைக்கப்பெறத்தக்க ஒதுக்கீட்டின் 250.0 சதவீதமாகும் (இலங்கைக்கு கிடைக்கப்பெறத்தக்க ஒதுக்கீடு சிறப்பு எடுப்பனவு உரிமை 578.80 மில்லியன் ஆகும்). மூலதனம் மற்றும் கட்டணங்கள்/வட்டிகள் என்பவற்றை எதிர்வரும் ஆண்டுகளில் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வெளிநிற்கின்ற தொகைகளில் உரிய காலத்தில் செலுத்தும் கடப்பாட்டின் கீழ் இலங்கை இருக்கின்றது.

11. நாடுகளிற்கு ஆதரவளிப்பதனை நோக்கமாகக் கொண்ட மிகவும் பொதுவான பன்னாட்டு நாணய நிதிய வசதிகள்

அ. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி

விரிவாக்கப்பட்ட நிதிய வசதி என்பது, பல்வேறு நோக்குகளில் பொதுவான அல்லது விசேட ஒதுக்கீடுகளிலிருந்து கணிசமானளவு வேறுபடுகின்ற, பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படும் குறிப்பான கடன்வழங்கல் ஏற்பாடாகும். தீவிரமான சென்மதி நிலுவை சிக்கல்களையும் பேரண்ட பொருளாதார நிச்சயமற்றத்தன்மையையும் எதிர்நோக்குகின்ற நாடுகளுக்கு உதவுவதே விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் நோக்கமாகும். உண்மையானதும் நிகழக்கூடியதுமான பொருளாதார பிரச்சனைகளைக் கொண்ட அனைத்து உறுப்பு நாடுகளும்

விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தகைமையுடையவையாகும். இவ்வசதி, பொதுவாக, பல்வேறு பொருளாதார, சமூக, மற்றும் கட்டமைப்புசார் சீர்த்திருத்தங்கள் என்பவற்றின் நடைமுறைப்படுத்தலுக்காக தொகுதிகளாகவும் நிபந்தனைசார் ஏற்பாடுகள் மீதும் வழங்கப்படுகின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையானது, நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றத்தை கிரமமாக மதிப்பீடுசெய்து அதற்கேற்றவாறு நிகழ்ச்சித்திட்டத்தை தக்கவாறு அமைக்கின்றது. பொதுவாக, விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் காலவரையறை ஒன்றில் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாக காணப்படுவதோடு, 12 சமமான அரையாண்டு தவணைக் கொடுப்பனவுகளில் 4.5 தொடக்கம் 10 வருட வீச்சில் செலுத்தத்தக்கவையாகும். ஏற்புடையதான வட்டி வீதமானது, சேர்க்கப்பட்ட வீதமொன்றுடன் கூடிய சிறப்பு எடுப்பனவு உரிமை வட்டி வீதமாகும். தற்போது, சேர்க்கப்படும் வீதம் 100 அடிப்படை புள்ளிகளாகும். நிலுவையாகவிருக்கின்ற கொடுகடன்களுக்காக மிகைக்கட்டணங்கள் ஏற்புடையதாகின்றது.

ஆ. துணைநில் ஏற்பாடு

துணைநில் ஏற்பாடு என்பது, குறிப்பாக குறுகிய கால சென்மதி நிலுவை பிரச்சனைகளை (உதாரணமாக, நாடுகள் இறக்குமதி மற்றும் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவு என்பவற்றினை செலுத்துவதற்கு சிரமப்படும் சூழ்நிலைகள்) எதிர்கொள்ளும் நாடுகளை இலக்காகக் கொண்டு “அவசரகால தீர்வொன்றாக”, மிகப் பொதுவாக பயன்படுத்தப்படும் பன்னாட்டு நாணய நிதிய கடன்வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றுமொரு வடிவமாகும். வெளிநாட்டு நாணயங்களிற்கான விரைவான அணுகுவழியை வேண்டுகின்ற அத்துடன் குறுகிய கால பொருளாதார சீர்த்திருத்தங்களுக்கு உறுதிபூணுவதற்கு விரும்புகின்ற அரசாங்கங்கள் துணைநில் ஏற்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அநேகமாக காணப்படுகின்றது. துணைநில் ஏற்பாடொன்றின் பொதுவான காலவரையறை 12-24 மாதங்களாகவிருப்பதுடன், மீள்கொடுப்பனவு காலம் பகிர்ந்தளிப்பிலிருந்து 3 தொடக்கம் 5 வருடங்களுமாகும். துணைநில் ஏற்பாடுகள் குறுகிய கால நம்பிக்கையை மீள்கட்டமைப்பதில் அதிகம் கவனம்செலுத்தும் அதேவேளை குறைந்தளவு கட்டமைக்கப்பட்டவையாகும்.

இ. விரிவாக்கப்பட்ட கடன் வசதி

விரிவாக்கப்பட்ட கடன் வசதி என்பது, குறைந்தளவு வருமானமுடைய பன்னாட்டு நாணய நிதிய உறுப்பு நாடுகளை இலக்காகக் கொண்டு, பன்னாட்டு நாணய நிதியத்தால் வழங்கப்படும் கடன்வழங்கல் ஏற்பாட்டின் மற்றுமொரு பாகமாகும். விரிவாக்கப்பட்ட கடன் வசதியானது, வறுமை குறைப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் பன்னாட்டு நாணய நிதிய சலுகை கடன் வழங்கல் கருவித்தொகுதியொன்றாக கருதப்படுகின்றது. விரிவாக்கப்பட்ட கடன்வழங்கல் எனும் வழமையான காலம் 5ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான சலுகைக் காலப் பகுதியொன்றுடன் 3 தொடக்கம் 5 ஆண்டுகளைக் கொண்டதாகும்.

ஈ. மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புசார் சீராக்க வசதி

1987இல் தாபிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புசார் சீராக்க வசதியானது, வறிய மற்றும் குறைந்த வருமானமுடைய நாடுகளுக்கு குறைந்த வட்டி வீதத்திலான கடன்களை குறிப்பிட்ட கொள்கை சீரமைப்பின் நடைமுறைப்படுத்தல் மீதான நிபந்தனைகளுடன் வழங்குவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தை இயலச்செய்துள்ளது. 1980-1990 வரையான காலகட்டமானது, குறைந்த வருமானமுடைய நாடுகளுக்கு, குறிப்பாக ஆபிரிக்க, ஆசிய மற்றும் இலத்தீன் அமெரிக்க பிராந்தியங்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது. சில விமர்சனங்களின் காரணமாக, 1999இல் மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புசார் சீராக்க வசதியானது வறுமை குறைப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கைப் பொறுப்பால் பதிலீடுசெய்யப்பட்டது.

12. முடிவுரை

சிறப்பு எடுப்பனவு உரிமையானது, உலகளாவிய திரவத்தன்மையை குறைநிரப்புவதற்கு, குறிப்பாக பிரெட்டன் வூட்ஸ் முறைமையின் குறைபாடுகளை நிவர்த்திசெய்யும் வகையில், 1969இல் பன்னாட்டு நாணய நிதியத்தால் உருவாக்கப்பட்ட பன்னாட்டு ஒதுக்கு சொத்தொன்றாகும். இன்று வரை, பொதுவான மற்றும் விசேட சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ஒதுக்கீடுகள், விரிவாக்கப்பட்ட நிதிய வசதி மற்றும் அதனையொத்த ஏனைய பன்னாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன இலங்கை உள்ளிட்ட, தேவையேற்பட்ட பல நாடுகளுக்கும் உதவியுள்ளன. குறைநிரப்பி பன்னாட்டு ஒதுக்கு சொத்தொன்றாக செயற்படுவதும், நிபந்தனைகளுக்குட்படாத திரவத்தன்மைக்கான அணுகலை வழங்குவதும், கணக்கு பிரிவொன்றாக நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதும் அத்துடன் கடுமையான பொருளாதார சரிவுகளையும் உயர் பணவீக்கத்தையும் தணிப்பதும், இதன்மூலம் பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதும் வறுமையை குறைப்பதும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படை நோக்கங்களாகும்.

13. உசாத்துணை

1. Choubey, P. (2024). Bretton Woods system. [online]. Wall Street Mojo. Available at: https://www.wallstreetmojo.com/bretton-woods-system/ [Accessed 21 August 2024].
2. International Monetary Fund (2021). Questions and answers on Special Drawing Rights. [online]. Available at: https://www.imf.org/en/About/FAQ/special-drawing-right [Accessed 23 August 2024].

3. International Monetary Fund (2024). 7 things you need to know about SDR allocations. [online]. Available at: https://www.imf.org/en/Topics/special-drawing-right/seven-things-you-need-to-know-about-sdr-allocations [Accessed 15 October 2024].
4. International Monetary Fund (2024). Special Drawing Rights. [online]. Available at: https://meetings.imf.org/en/IMF/Home/About/Factsheets/Sheets/2023/special-drawing-rights-sdr [Accessed 15 September 2024].
5. International Monetary Fund (2024). The Extended Fund Facility. [online]. Available at: https://www.imf.org/en/About/Factsheets/Sheets/2023/Extended-Fund-Facility-EFF [Accessed 27 October 2024].
6. International Monetary Fund (n.d.) IMF Financial Operations: Special Drawing Rights (course material). [Unpublished internal material]. Accessed via the IMF online learning platform on [insert 29 August 2024].
7. International Monetary Fund (n.d.) The IMF's Enhanced Structural Adjustment Facility (ESAF): Is it working? [online] Available at: https://www.imf.org/external/pubs/ft/esaf/exr/ [Accessed 25 July 2025].
8. Sankalana, D. (2025). Sri Lanka receives fifth tranche from IMF after completion of fourth review. [online]. Daily News. Available at: https://www.dailynews.lk/2025/07/07/local/810588/sri-lanka-receives-fifth-tranche-from-imf-after-completion-of-fourth-review/ [Accessed 07 July 2025].

நாட்டிற்கான படுகடன் முகாமைத்துவம் பற்றிய உலகளாவிய மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் அண்மைய மறுசீரமைப்புக்களில் இலங்கைக்கான அதன் பிரயோகம்

கே ஏ டீ ஏ ஏக்கநாயக
மூத்த முகாமையாளர்
பொதுப் படுகடன் திணைக்களம்

கே கே எஸ் டபிள்யு ரணசிங்க
முகாமையாளர்
பொதுப் படுகடன் திணைக்களம்

"தொழிற்பாட்டு ரீதியான கட்டமைப்பும் நடைமுறைகளும் வேறு இதனையொத்த நாட்டிற்கான கடன்பாட்டாளர்கள் மற்றும் தனியார் துறையினர் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தல்...".

படுகடன் முகாமைத்துவ அறிக்கை 2004-2005,
நிதித் திணைக்களம், கனடா[1]

1. அறிமுகம்

1.1 நீண்டகாலம்தொட்டு, நாட்டிற்கான படுகடனை முகாமைசெய்தல், கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. நாட்டிற்கான படுகடன் சொத்துப்பட்டியல் குறிப்பிடத்தக்களவு பெரிய அளவிலும் இயல்பாக சிக்கல்மிக்கதாக உள்ள போது, அந்தப் படுகடன் சொத்துப்பட்டியலின் அளவு மற்றும் தன்மை நாட்டின் நிதியியல் துறையிலும் பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, இறையாண்மைகள் ஏனைய நாடுகளால் பின்பற்றப்படும் நடைமுறைகளை ஒப்பீட்டளவில் கருத்தில் கொண்டு, படுகடன் முகாமைத்துவத்தில் தனிப்பட்ட நாடுகளுக்காக எது மிகவும் பொருத்தமானதோ அதனைப் பின்பற்றுவது மிக முக்கியமாகும்.

1.2 நாட்டிற்கான படுகடன் முகாமைத்துவம் என்பது இறைக் கொள்கைகள் மற்றும் அரசாங்கப் பிணையங்களுக்கான வினைத்திறனான மூலதனச் சந்தையை உருவாக்குதல் போன்ற அரசாங்கத்தின் ஏனைய கொள்கைகளுடன் அது இணைந்திருக்கும் விதத்தில் செலவுச் சிக்கனமான முறையில் படுகடனைத் திரட்டுவதிலிருந்து ஒரு நாட்டின் படுகடன் சொத்துப்பட்டியலைக் கையாள்வதற்கான சிறந்த உபாயங்களை வகுத்து நடைமுறைப்படுத்தும் செயன்முறையாகக் கருதப்படலாம்.

1.3 இந்நோக்கில், ஏனைய நாடுகள் அல்லது பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்ற உலகளாவிய தரநிலை நிர்ணய அமைப்புகளால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆற்றல்வாய்ந்த படுகடன் முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுகின்ற ஏனைய நாடுகளிலிருந்து இலங்கை வேறுபட்டிருக்கவில்லை. எனவே, இந்தக் கட்டுரையானது இலங்கை அதன் அண்மைய கொள்கை மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலில் அதன் பொதுப் படுகடன் சொத்துப்பட்டியலை முகாமைசெய்வதில் அத்தகைய சிறந்த நடைமுறைகளை பின்பற்ற மேற்கொண்ட முயற்சிகளை சுருக்கமாகக் கூற விளைகின்றது.

2. பொதுப் படுகடனை முகாமை செய்வதில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கான அறிமுகம்

2.1 ஒரு நாட்டிற்கான படுகடன் சொத்துப்பட்டியல் என்பது பொதுவாக ஒரு குறிப்பிட்ட நாட்டின் பாரிய இறை

1. p. 11

சொத்துப்பட்டியலாக காணப்படுவதுடன் எல்லா வகையான ஆர்வலர்களின் கவனத்தையும் ஈர்க்கின்றது. இது பொதுவாக அரசாங்கத்தின் ஐந்தொகைக்கும் அதனூடாக நாட்டின் நிதியியல் ஸ்திரத்தன்மைக்கும் கணிசமான இடர்நேர்வுகளை ஏற்படுத்துகின்ற சிக்கலானதும் கட்டமைக்கப்பட்டதுமான நிதியியல் சாதனங்களை உள்ளடக்கியதாகும். இதனால், உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சூழலில் அந்தந்த பொதுப் படுகடன் சொத்துப்பட்டியல்களின் நிலைபெறத்தக்க தன்மையை உறுதிசெய்வதற்காக தங்களது மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரல்களை அமுல்படுத்தும் போது கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவுவதற்காக பல நாடுகளும் உலகளாவிய தரநிலை நிர்ணய அமைப்புகளும் சில நடைமுறைகளை வடிவமைத்துள்ளன.

2.2 இருப்பினும், முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றும்போது படுகடன் முகாமைத்துவ குறிக்கோள்கள், அதன் இடர்நேர்வு ஏற்பு, எதிர்பாரா பொறுப்புகள் நிர்வகிக்கப்படும் விதம் பற்றி நேரடியாக கவனம் செலுத்தப்பட வேண்டியதை இலக்காகக்கொண்ட அரசாங்க ஐந்தொகைப் பிரிவு, மற்றும் பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கான சிறந்த ஆளுகைக் கட்டமைப்புகளை எவ்வாறு நிறுவுவது என்பது தொடர்பான கொள்கைத் தெரிவுகளில் இக்கட்டான நிலையை எந்தவொரு அரசாங்கமும் எதிர்கொள்ள நேரிடலாம். பன்னாட்டு நாணய நிதியம் அதன் பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கான வழிகாட்டுதல்களில் (2001), படுகடன் முகாமைத்துவத்திற்கான துல்லியமான குறிக்கோள்களை நிர்ணயித்தல், படுகடன் சொத்துப்பட்டியலுடன் தொடர்புடைய செலவு-பயன்-இடர்நேர்வுக் காரணிகளைப் பகுப்பாய்வுசெய்தல், ஆரோக்கியமான நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் பொறுப்புக்கூறல், மீள்நிதியளிப்பு மற்றும் சந்தை இடர்நேர்வுகளைக் கையாளும் படுகடன் இலக்குகளைப் பற்றி முன்கூட்டியே நிர்ணயித்தல் மற்றும் பொதுப் படுகடனை முகாமைசெய்வதற்கான ஆற்றல்வாய்ந்த சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்புகள் மற்றும் ஆளுகைக் கட்டமைப்புகளை நிறுவுதல் உள்ளிட்ட நாடுகள் கவனத்திற்கொள்ள வேண்டிய சிறந்த நடைமுறைகளின் சில நோக்குகளை எடுத்துக்காட்டியுள்ளது.

2.3 பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பன இணைந்து[2] அறிமுகப்படுத்திய பொதுப் படுகடனை முகாமைசெய்வதில் நாடுகள் அடிக்கடி எதிர்கொள்ளக்கூடிய இத்தகைய இக்கட்டான சூழ்நிலையை நிவர்த்திசெய்வதில், மேற்கூறிய நோக்கங்களுக்கமைய உருவாக்கப்பட்ட முக்கிய உலகளாவிய சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு பின்வருமாறு,

- துல்லியமான படுகடன் முகாமைத்துவ குறிக்கோள்களைக் கொண்டிருப்பதன் அனுகூலங்களை அடையாளங்களை நிர்ணயித்தல்.
- செலவு-பயன்-இடர்நேர்வுக் காரணிகளை மதிப்பீடுசெய்தல்.
- ஆரோக்கியமான நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு, பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கூறல்.
- நிலைபெறத்தக்க வகையில் படுகடன் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துதல்.
- மீள்நிதியளிப்பு மற்றும் சந்தை இடர்நேர்வுகளுக்குத் தீர்வுகாண்கின்ற படுகடன் இலக்குகளை முன்கூட்டியே நிர்ணயித்தல்.
- பொதுப் படுகடன் முகாமைத்துவத்தில் ஈடுபடும் அரச முகவராண்மைகளிடையே அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்களைப் பிரிப்பதால் ஏற்படக்கூடிய தொடர்புடைய தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக பொதுப் படுகடனை முகாமைசெய்வதற்கான வலுவான சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்புக்களையும் ஆளுகை கட்டமைப்புக்களையும் நிறுவுதல்.

2.4 எனினும், மேற்குறித்த சிறந்த நடைமுறைகள் பிணிக்கின்ற நடைமுறைகளாகவோ கட்டாய தரநிலைகளாகவோ அல்லது கோவைகளின் தொகுப்பாகவோ கருதப்படுவதில்லை. மேலும், அவை அனைத்து நிலைமைகளிலும் எந்த சூழ்நிலைகளிலும் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய உலகளாவிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வலுவான மற்றும் சிறந்த நடைமுறைகளின் தனித்துவமான தொகுப்பாகவும் காணப்படவில்லை. பொதுவாக, படுகடன் முகாமைத்துவ உபாயத்திலும் தொழிற்பாடுகளிலும் ஏனைய

2. பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல்கள்5, பன்னாட்டு நாணய நிதியம்/ உலக வங்கி

நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆற்றல்வாய்ந்த நடைமுறைகளைப் பரப்புவதன் மூலம் அவை கொள்கை வகுப்பாளர்களுக்கு துணைபுரிகின்றன. எனவே, அத்தகைய சிறந்த நடைமுறைகளை அமுல்படுத்துதல் அதன் நிதியியல் மற்றும் சந்தை வளர்ச்சி நிலை மற்றும் படுகடன் சொத்துப்பட்டியல் நிலை என்பனவற்றின் முக்கியத்துவத்தைப் போன்ற ஒவ்வொரு நாட்டின் தேவைப்பாடுகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து நாட்டிற்கு நாடு வேறுபடும்.

2.5 மேற்படி பந்தி 2.3 இல் தொகுத்துரைக்கப்பட்டுள்ள சிறந்த நடைமுறைகளுக்கமைய, படுகடன் முகாமைத்துவ செயன்முறைகளை மேற்கொள்ளும்போது, படுகடன் முகாமைத்துவ குறிக்கோள்களை தெளிவான பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்போடு இணைப்பது அத்தியாவசியமானது என்பதை நோக்குவது குறிப்பிடத்தக்கதாகும். எவ்வித பாதக விளைவுகளின்றி இதன் கீழ், பொதுப் படுகடன் சொத்துப்பட்டியல் மேம்படுத்தப்பட்டு, பொருளாதாரம் அதன் சுமைக்கு ஈடுகொடுக்கக்கூடிய விதத்தில் நிலைபெறத்தக்க வகையில் பேணப்படுவதை அரசாங்கங்கள் உறுதிசெய்ய வேண்டியது அவசியமாகும்.

2.6 மேலும், முன்மதிமிக்கதும் செயலூக்கமிக்கதுமான படுகடன் முகாமைத்துவம் மேலதிக நிதியிடலையோ அல்லது மேலதிக பொறுப்புகள் ஒன்றுசேர்வதையோ ஏற்படுத்தாத, வெளிநின்ற படுகடனின் உள்ளமைப்பையும் நிலைபெறத்தக்க தன்மையையும் மேம்படுத்துகிறது. நாட்டிற்கான படுகடன் நிலைபெறத்தக்கதாக இல்லாதபோது, இலங்கை போன்ற நாடுகள் சொல்லப்பட்ட சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நிகழ்ச்சிநிரல்களுடன் சீரமைப்புகளுடன் அணிசேர்ந்திருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இந்த சீர்திருத்தங்கள் முக்கியமாக படுகடன் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் பயன்படுத்தப்படும். கட்டமைப்புகளை மற்றும் சாதனங்களைச்

வரைபடம் 1: மத்திய அரச படுகடன்



குறிப்பு: 2010இலிருந்தான தரவுகள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2023 மாச்சு 15 அன்று வெளியிடப்பட்ட மொ.உ.உற்பத்தியின் மீள்தளப்படுத்தப்பட்ட மதிப்பீடுகளின் (2015 தள ஆண்டு) அடிப்படையிலமைந்துள்ளன.

2020 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதிக்கான தரவுகள் 2024 மாச்சில் கிடைப்பனவாகவிருந்த தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அண்மைய மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(அ) தற்காலிகமானது

(ஆ) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் இலங்கையின் வெளிநாட்டுப் பொதுப் படுகடனைத் தீர்ப்பனவு செய்தலுடன் தொடர்புடைய இடைக்காலக் கொள்கை அறிவிக்கப்பட்ட திகதியான, 2022 ஏப்பிறல் 12இற்குப் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்குவதில்லை. இடைக்காலக் கொள்கைக்கு அமைவாக மூலதனமாக்கபட வேண்டுமெனக் கருதப்படுகின்ற பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளை இப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் உள்ளடக்கின்றன. மேலும், 2022 ஏப்பிறல் தொடக்கம் 2022 இறுதி வரையான இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய முதன்மைக் கொடுப்பனவுகளின் பெறுமதியினை 2022 திசெம்பர் மாத நிலுவை உள்ளடக்குவதில்லை.

(இ) தொடர்புடைய காலாண்டினதும் முன்னைய மூன்று காலாண்டுகளினதும் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலமைந்த வருடாந்த மொ.உ.உற்பத்தி மதிப்பீடானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக வெளிநின்ற மத்திய அரச படுகடன் இருப்பினைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி (வரைபடத் தொகுதி – Q$4-2024)

செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பொறிமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் காலத்திற்குகாலம் அல்லது படுகடன் வகையிலிருந்து படுகடன் வகைக்கு அல்லது கடன்பெறுதல் மேற்கொள்ளப்பட்ட நாணயத்திற்கு மாறுபடக்கூடிய போதிலும், ஆற்றல்வாய்ந்த படுகடன் முகாமைத்துவ நடைமுறைகளுக்கமைய அனைத்து படுகடன் முகாமைத்துவ செயற்பாடுகளும் பொதுவான அம்சமொன்றை அதாவது, "இது செலுத்தப்படாத படுகடனை மறுசீரமைக்கிறது" என்பதைக் கொண்டுள்ளது.

3. பொதுப் படுகடன் சொத்துப்பட்டியலின் நிலைமைகளும் பின்னணியும்: இலங்கை

3.1 2019 இலிருந்து தொடங்கி எதிர்பாராத சூழ்நிலைகள் உள்ளடங்கலாக இலங்கை கணிசமானளவு பொதுப் படுகடன் பொறுப்பு மீள்செலுத்துகைகளை எதிர்கொண்டுவருகின்றது. 2022 முதல் 2030 இற்கு இடையில், ஏற்கனவே வழங்கப்பட்ட, பிரதானமாக ஒவ்வொன்றும் 500 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு மேல் பெறுமதியுடைய பன்னாட்டு நாட்டிற்கான முறிகளின் 12.55 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை மீள்செலுத்துவதற்கு மீள்நிதியளிப்பதற்கு நாடு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், கருத்திட்டக் கடன்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான பொறுப்புகளைத் தீர்ப்பது வெளிநாட்டு நாணயத்தில் படுகடன் தீர்ப்பனவு அழுத்தத்தை உயர்த்தி நாட்டின் ஐந்தொகைப் பொறுப்புப் பக்கத்தின் மீது தாங்க முடியாத அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது.

3.2 குறிப்பிட்ட காலப்பகுதிக்கான மத்திய அரசின் படுகடன் திரட்டல் அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை கடினமாக்கியது தொடர்பான விபரங்களின் தொகுப்பு கீழே உள்ள வரைபடம் 01 இல் வழங்கப்பட்டுள்ளது.

3.3 மேலே வரைபடம் 01 இல் கண்டவாறு, படுகடன் இருப்பு இலங்கைக்கு கட்டுப்படுத்த முடியாதளவில் நிலைபேறற்றதாகமாறி பாதகமான பொருளாதார, மனிதாபிமான மற்றும் சமூக சவால்களைத் தோற்றுவித்து பொருளாதார மந்தநிலை மற்றும் உயர் பணவீக்க நிலைமைகள், தாழ்ந்தளவிலான பன்னாட்டு ஒதுக்கு மட்டங்களுக்கு காரணமாகி நிதியியல் துறையை பாதிக்கப்படச்செய்தது.

3.4 2022ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு, மத்திய அரச படுகடன், உத்தரவாதமளிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் படுகடன் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் படுகடன் உள்ளடங்கலாக இலங்கையின் பொதுப் படுகடன் ஐ.அ.டொ 83,595 மில்லியனாக விளங்கியதுடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128.1 சதவீதத்திற்குச் சமமானதாகும். மத்திய அரச படுகடன் மொத்த பொதுப் படுகடனின் 92 சதவீதமாகவும் (ஐ.அ.டொ 76,758 மில்லியன்), அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் படுகடன் மொத்த பொதுப் படுகடனின் 4 சதவீதமாகவும் (ஐ.அ.டொ. 3,739 மில்லியன்), இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான படுகடன் மொத்த பொதுப் படுகடனின் 4 சதவீதமாகவும் (ஐ.அ.டொ 3,098 மில்லியன்) செலுத்த வேண்டியிருந்தது. ஒட்டுமொத்தமாக, வெளிநாட்டு நாணயத்தில் பொதுப் படுகடன் ஐ.அ.டொ 45,543 மில்லியன் (வெளிநாட்டுச் சட்டத்தில் முறையே ஐ.அ.டொ 41,474 மில்லியன் மற்றும் உள்நாட்டுச் சட்டத்தில் ஐ.அ.டொ 4,069 மில்லியன்) ஆக விளங்கிய அதேவேளை, உள்நாட்டு நாணயத்தில் பொதுப் படுகடன் ஐ.அ.டொ 38,052 மில்லியனாக விளங்கியது. வெளிநாட்டு நாணயப் பொதுப் படுகடன் பிரதானமாக வர்த்தகப் கடன்கொடுநர்களுக்கு மத்திய அரசு செலுத்த வேண்டிய படுகடனை (ஐ.அ.டொ 20,658 மில்லியன்) கொண்டிருந்த அதேவேளை உள்நாட்டு நாணயப் பொதுப்படுகடன் பிரதானமாக மத்திய அரசின் பிணையீடுசெய்யப்பட்ட படுகடனான (முறையே ஐ.அ.டொ 11,364 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ 24,020 மில்லியனுக்குச் சமனான திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்) ஐ.அ.டொ 35,384 மில்லியனைக் கொண்டிருந்தது.

3.5 நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் நிதி முறைமையின் ஸ்திரமின்மையை வெற்றிகொள்ளும் நோக்கில், இலங்கை அரசாங்கம் 2023 மாச்சு முதல் சிறப்பு எடுப்பனவு உரிமை 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொ 3.0 பில்லியன்) தொகைக்கு பன்னாட்டு நாணய நிதியத்துடன் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டை மேற்கொண்டது. மேற்படி ஏற்பாட்டின் விளைவாக பன்னாட்டு நாணய நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களில் ஒன்றாக, இலங்கை அதன் பொதுப் படுகடன் சொத்துப்பட்டியலை நிலைபெறத்தக்கதாக மாற்றுவதாக அமைந்திருந்தது. இலங்கை இந்த மைல்கல்லை அடையும்பொருட்டு பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கு பின்வருவனவற்றை அவசியமாக்கியது:

(i) பொதுப் படுகடனை 2032ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதத்திற்கும் கீழ் குறைத்தல்,

(ii) அழுத்தத்தின் கீழான மீண்டும் மீண்டும் தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகள் முகாமை செய்யப்படுகின்ற விதத்தில் 2027-32ஆம் ஆண்டுகளில் சராசரி மத்திய அரசின் மொத்த நிதியிடல் தேவைகளை எதிர்பாரா பொறுப்புகளின் கைகூடுவதிலிருந்தானவை உள்ளடங்கலாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்திற்கு கீழ் குறைத்தல்,

(iii) 2027-32ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எந்தவொரு ஆண்டிலும் மத்திய அரசின் வெளிநாட்டுச் செலாவணி படுகடன் தீர்ப்பனவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்கும் குறைவாகப் பேணுதல், மற்றும்

(iv) இறை மற்றும் வெளிநாட்டு நிதியளித்தல் இடைவெளிகள் நிரப்பப்பட்டுள்ளதென்பதை உறுதிசெய்தல் (அலுவலர் மட்ட இணக்கப்பாடு, 2023).

4. உலகளாவிய மிகச்சிறந்த நடைமுறைகளை இலங்கை பிரயோகித்தல்

4.1 நிலைபேறற்ற பொதுப் படுகடன் சொத்துப்பட்டியலை நிலைபெறத்தக்க சொத்துப்பட்டியலாக மாற்றுவதில், மேலே பந்தி 2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சில உலகளாவிய மிகச்சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான படிமுறைகளை இலங்கை அரசாங்கம் தொடங்கியது. இவை உள்ளடக்குவன:

(i) அ. படுகடன் கடப்பாடுகளின் மீள்நிதியிடல் மற்றும் சந்தை இடர்நேர்வுகளை முகாமைசெய்தல், மற்றும்

ஆ. நிலைபெறத்தக்க வகையில் படுகடன் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

போன்றவற்றிற்காக செலவினக் கரிசனைகளுக்கு எதிரான இடர்நேர்வுகளை மதிப்பிடுதல் மற்றும் பொறுப்பு முகாமைத்துவத்தைச் செயற்படுத்தல்:

(ii) படுகடன் முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்ற அரச நிறுவனங்களுக்கிடையில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மைகளைப் பிரிப்பதனால் ஏற்படக்கூடிய தொடர்புடைய தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக ஆற்றல்வாய்ந்த சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்பு மற்றும் ஆளுகைக் கட்டமைப்புகளை தாபித்தல்.

(iii) தனியொரு சட்டக் கட்டமைப்பொன்றிற்குள் படுகடன் முகாமைத்துவத்திற்கான தெளிவான குறிக்கோள்களின் நன்மைகளை அடையாளம்காணலும் நிர்ணயித்தலும்.

(iv) இறை மற்றும் நாணயக் கொள்கைகளை சுயாதீனமாக தொழிற்படுத்தும்போது அவற்றுக்கிடையிலான ஆரோக்கியமான ஒருங்கிணைப்பு.

4.2 நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பின் போது இலங்கையின் பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

4.2.1 படுகடன் நிலைபெறத்தக்கதன்மையை அடைவதற்கான செயன்முறையில், ஏற்கனவே உள்ள படுகடன் இருப்பின் மீள்நிதியளிப்பு இடர்நேர்வைப் பாதிக்கும் காரணிகளையும், ஒவ்வொரு வகையான கடன்கொடுநருக்கும் வழங்கப்படவுள்ள நடத்தை பற்றிய ஒப்பீடுதன்மையையும் இலங்கை அரசாங்கம் கருத்திற்கொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய பின்னணியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு வடிவமைக்கப்பட்டு அதற்கேற்றவாறு மறுசீரமைப்புச் செயன்முறைக் காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தால் அதன் பொறுப்பு முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக பின்வரும் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) **உள்நாட்டுச் சட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன்:** இவற்றில் இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட சில வங்கிக் கடன்கள் அடங்கும். குறிப்பிடத்தக்க நிவாரணத்தைப் பெறுவதற்காக, புதிய சாதனங்களாக மாற்றிச்செயற்படுத்துவதன்/மாற்றுவதன் மூலம் உள்நாட்டுச் சட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் மறுசீரமைக்கப்பட்டது. அதன்படி, உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இலங்கை அபிவிருத்தி முறிகளின் மொத்த நிலுவையில் உள்ள ஐ.அ.டொலர் 837.59 மில்லியன் பெறுமதி, புதிய இலங்கை ரூபாவில் பெயர்குறிக்கப்பட்ட துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இணைக்கப்பட்ட கூப்பன் திறைசேறி முறிகளை

வெளியிடுவதன் மூலம் தீர்க்கப்பட்டது. மேலும், இரண்டு அரச வங்கிகளும் வைத்திருந்த வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுக் கடன்கள் இலங்கை ரூபாவில் பெயர்குறிக்கப்பட்ட நீண்ட கால துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இணைக்கப்பட்ட புதிய கூப்பன் திறைசேறி முறிகளாக மாற்றப்பட்டன. அத்துடன் ஐ.அ.டொலர்.2.43 பில்லியன் பெறுமதியுடைய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கடன்கள் இலங்கை ரூபாவில் பெயர்குறிக்கப்பட்ட புதிய துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இணைக்கப்பட்ட கூப்பன் திறைசேறி முறிகளை வெளியிடுவதன் மூலம் மறுசீரமைக்கப்பட்டது..

(ii) **உள்நாட்டுச் சட்ட உள்நாட்டு நாணயப் படுகடன்:** இவை பெரும்பாலும் திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் உள்ளடக்குகின்றன. உள்நாட்டுச் சட்ட உள்நாட்டு நாணயப் படுகடன் பல்வேறுபட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய புதிய சாதனங்களைக் கொண்டு பரிமாற்றம் செய்யப்பட்டது/மாற்றப்பட்டது. இதனால், 2024ஆம் ஆண்டில் ஓய்வூதிய நிதியங்களால் வைத்திருந்த ரூ. 3,204 பில்லியன் பெறுமதியுடைய தகுதியான ஏற்றுக்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகள் புதிய கிரமமாக குறைவடையும் கூப்பன் திறைசேரி முறிகளாக மாற்றப்பட்ட அதேவேளையில் இலங்கை மத்திய வங்கியால் வைத்திருந்த ரூ. 2,368.4 பில்லியன் பெறுமதியுடைய திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூ. 344.7 பில்லியன் தற்காலிக முற்பணங்கள் ரூ. 2,492 பில்லியன் பெறுமதியுடைய புதிய கிரமமாக குறைவடையும் கூப்பன் திறைசேரி முறிகளாகவும் உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ. 220.8 பில்லியன் பெறுமதியுடைய புதிய திறைசேரி முறிகளாகவும் மாற்றப்பட்டன.

(iii) **வெளிநாட்டுச் சட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன்:** உத்தியோகபூர்வ இருதரப்பு மற்றும் வர்த்தக கடன்கொடுநர்களுக்கான வெளிநாட்டுச் சட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் பிரதானமாக, சலுகைக் காலத்தையும் முதிர்வுக் காலத்தையும் காலம்தாழ்த்தல், வட்டி வீதம் (வட்டி வீதங்களைக்) கழிவீடுசெய்தல், மிகக் குறைந்த உச்சங்களை வழங்குதல், அல்லது மேற்குறிப்பிட்ட முறைகளில் ஏதேனும் ஒன்றின் கலவை ஆகியவற்றின் ஊடாக மறுசீரமைக்கப்பட்டன.

மேலும், 2024ஆம் ஆண்டில், வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் கீழ் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் உலகளாவிய தெரிவுமுறை மற்றும் உள்நாட்டுத் தெரிவுமுறை ஆகியவற்றின் கீழ் மறுசீரமைக்கப்பட்டன. உள்நாட்டுத் தெரிவுமுறையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஒரு பகுதியானது, புதிய துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் தொடர்புடைய இலங்கை ரூபாவில் குறிக்கப்பட்ட 155.7 பில்லியன் தொகையுள்ள கூப்பன் திறைசேரி முறிகளாக மாற்றப்பட்டன.

4.3 படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கான நிறுவனசார் மற்றும் ஏதுவான ஆளுகைக் கட்டமைப்பு

ஒவ்வொரு அரசாங்கமும் அதன் படுகடன் முகாமைத்துவ குறிக்கோள்களை சிறந்த முறையில் அடையும் பொருட்டு சரியான நடைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் அதன் நிறுவனசார் மற்றும் ஆளுகைக் கட்டமைப்பின் உள்ளமைப்பைத் தெரிவுசெய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இத்தகைய கட்டமைப்புகளனாவை ஒரு நாட்டிற்குப் பொருத்தமான உகந்த நாணயத்தையும் முதிர்ச்சி உள்ளமைப்பையும் தீர்மானிக்க அரசாங்கத்தை இயலச்செய்யும். “இலங்கை: தொழில்நுட்ப உதவி அறிக்கை-படுகடன் முகாமைத்துவ சீர்திருத்தத் திட்டம்[3]” என்ற தலைப்பிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் அறிக்கையில் இலங்கைக்கு மிகவும் ஏற்புடைய இந்த அம்சங்களின் முக்கியத்துவமானது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஏனையவற்றுக்கு மத்தியில் அந்த அறிக்கைக்கமைய படுகடன் முகாமைத்துவம் தொடர்பான பிளவுபட்டதும் முழுமையற்றதுமான சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்புகள் நாட்டின் நிலைபேறற்ற பொதுப் படுகடன் சொத்துப்பட்டியலுக்குப் பங்களித்துள்ளன. அவ்வலியுறுத்தலின் நோக்கில் நாட்டின் பொறுப்பு முகாமைத்துவத்தின் ஆளுகைக் கட்டமைப்பை மேம்படுத்த ஏனையவற்றுக்கு மத்தியில்

3. 2024 திசெம்பர்

பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்குப் பரிந்துரைசெய்துள்ளது.

- பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்ககான புதிய சட்டக் கட்டமைப்பு.
- நிதி அமைச்சினுள் புதிய பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமொன்றை நிறுவுதல்.

4.3.1 நாட்டிற்கான படுகடன் மறுசீரமைப்பு ஏறக்குறைய நிறைவடைந்ததைத் தொடர்ந்து, படுகடன் முகாமைத்துவம் தொடர்பான நிறுவனசார் மற்றும் ஏதுவான ஆளுகைக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் பல கொள்கைச் சீர்திருத்தங்களைத் தொடங்கியுள்ளது. அத்தகைய சீர்திருத்தங்கள் பற்றிய சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம்

படுகடன் முகாமைத்துவம் தொடர்பான ஏற்கனவே உள்ள அனைத்துச் சட்டங்களையும் ஒருங்கிணைத்து பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தை தாபிப்பதற்கு வழிவகை செய்து, படுகடன் முகாமைத்துவம் தொடர்பான ஆளுகை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கட்டமைப்புகளை வரையறுக்கும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தை இயற்றுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது. அரசாங்கத்தின் படுகடன் இருப்பை முகாமைசெய்வதோடு மட்டுமல்லாமல், படுகடனின் நிலைபெறுதன்மையையும் நாட்டின் நடுத்தர மற்றும் நீண்ட கால இறை வலிமையையும் பேணுவதற்கான அத்தியாவசியக் கூறுகளான வினைத்திறனானதும் வெளிப்படையானதுமான படுகடன் நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் பொறுப்புடையதாகும். ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள், இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் ஆகியவற்றிடமிருந்து பொதுப் படுகடனைப் பெறுவது தொடக்கம் முகாமைசெய்வது வரையிலான அனைத்துப் பொறுப்புகளையும் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் பொறுப்பேற்கும். எனவே, பொதுப் படுகடன் முகாமைத்துவச் செயல்முறை மற்றும் தொழிற்பாடுகள் என்பன 2026 சனவரி மாதமளவில் மத்தியமயமாக்கப்படும்.

பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் சில முக்கிய அம்சங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன.

- நடுத்தரக்கால படுகடன்கள் முகாமைத்துவ உபாயம், வருடாந்த கடன்பாட்டுத் திட்டம் மற்றும் படுகடன்களை வழங்குவதற்கான ஏல நாட்காட்டிகள் என்பவற்றை உருவாக்குதலும் வெளியிடுதலும்.
- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன்பெறுகின்ற போதும் அரசாங்கத்தின் படுகடன் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதும் உரிய இணைத்தரப்பினருடனான பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் நிதியியல் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை ஒழுங்குசெய்தல்.
- நிதியியல் சந்தைகளை அணுகுதல் மற்றும் அத்தகைய அணுகுதல் ஊடாக விரும்பிய குறிக்கோள்களை அடைவதற்கான தொடர்புகளைப் பேணுதல்.
- அனைத்து ஏற்புடைய ஆர்வலர்களின் மூலமும் அவர்களுக்கிடையிலும் படுகடன் வகுத்தல், காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் படுகடன் தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- அரசாங்கத்தின் படுகடன் தீர்ப்பனவு மற்றும் பொறுப்பு முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- கடன் உத்தரவாதங்கள் மற்றும் மீள்கடன்கள் வழங்குதல் செயற்பாடுகள் உள்ளடங்கலாக கடன்பெறுதல் மீதான இடர்நேர்வு மதிப்பீடுகளை நடாத்துதல் மற்றும் இடர்நேர்வு தணிப்புச் செயற்பாடுகளை நடாத்துதல்.
- பாராளுமன்றம், ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களுக்காக படுகடன் பொறுப்புகளைத் திரட்டுதல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் பதிவுகளைப் பேணுதல், அறிக்கைகளைத் தயாரித்தல், அத்துடன் தரவு/ தகவல்களை வெளிப்படுத்துதல்.

பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது நாட்டின் படுகடன் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தவும், மையப்படுத்தவும் பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 02.12.2024ஆம் திகதி அன்று தாபிக்கப்பட்டது. அரசாங்கப் படுகடனை முகாமைசெய்வதற்கும் பொதுப் படுகடன் முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை

மேற்பார்வையிடுவதற்கும் பொறுப்புடைய ஏக நிறுவனமாக பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் விளங்குகின்றது. அதன் முக்கிய பொறுப்புகளாக பொதுப் படுகடனை முகாமைசெய்தல், கடன் உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் நிர்வகித்தல், கடனானகப்பெற்ற பணத்தை மீள்கடன்வழங்கல் தொழிற்பாடுகளை முகாமைசெய்தல் மற்றும் பொதுப் படுகடனைப் பதிவுசெய்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை உள்ளடங்குகின்றன. மேலும், பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் 2026 சனவரி மாதத்திற்குள் முழுமையாகத் தொழிற்படத் தொடங்கும்.

2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம்

கடந்த சில தசாப்தங்களாக நாட்டில் பொது நிதி முகாமைத்துவத்தில் பல குழப்பமான நடைமுறைகள் மற்றும் தெளிவற்ற தன்மைகள் காணப்பட்டன. நாட்டின் பொது நிதியியல் முகாமைத்துவக் கட்டமைப்பில் உள்ள பொது நிதியங்களின் பொறுப்புக்கூறல், மேற்பார்வை, முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்டதன் மூலம், 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 08 மற்றும் 14ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் நீக்கப்பட்டன. ஆயினும், இச்சட்டம் முழுமையாக அமுலுக்குவரும் வரை, அரசாங்கத்தின் நிதியியல் ஒழுங்குவிதிகள் (1992இல் வெளியிடப்பட்டவை), பொது நிதியை முகாமைசெய்வதற்குப் பொறுப்பான பொது திறைசேரி மற்றும் ஏனைய அதிகாரிகளால் வெளியிடப்பட்ட பல்வேறு சுற்றறிக்கைகள், மற்றும் அமைச்சரவையால் காலத்திற்குகாலம் அங்கீகரிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

4.3.3 ஏற்கனவே பின்பற்றப்பட்ட கொள்கைகள், அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகள் ஆகியவற்றின் வினைத்திறனான அமுலாக்கத்துடன் சேர்த்து சிறந்த பேரண்டப் பொருளாதார கொள்கை நிர்ணயங்கள் மற்றும் உரிய நாணய இறை ஒத்திசைவு என்பவற்றுடன் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு பொதுப் படுகடன் முகாமைத்துவத்தில் உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பிரயோகித்தல் இலங்கை அதன் நாட்டிற்கான பொதுப் படுகடன் சொத்துப்பட்டியலின் நிலைபெறுதன்மையைப் பேணுவதற்கு வழி வகுக்கும்.

5. முடிவுரை

இலங்கை அனுபவித்த நிலைபேறற்ற படுகடன் கட்டமைப்புகளானவை சந்தேகத்திற்குரிய பொருளாதாரக் கொள்கைகளின் அதாவது, இறை, நாணய மற்றும் செலாவணி வீதம் போன்ற காலம்தொட்டுவந்த விளைவுகளாகும். அத்தகைய சந்தேகங்களைச் சரிசெய்யும் முயற்சிகளில், இடர்நேர்வுகளையும் செலவுகளையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் மற்றும் நிறுவனசார் மற்றும் ஆளுகைக் கட்டமைப்புகளை நிர்ணயித்தல் போன்ற உலகளாவிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல உறுதியான நாட்டிற்கான படுகடன் முகாமைத்துவ நடைமுறைகளை இலங்கை அண்மையில் அதன் கொள்கைச் சீர்திருத்தக் கட்டமைப்பிற்குள் ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும், விரும்பிய படுகடன் முகாமைத்துவ இலக்குகளை அடைவதற்கு ஆற்றல்வாய்ந்த படுகடன் முகாமைத்துவக் கொள்கைகள் தனித்து இயங்குவதாக கருத முடியாது. மாறாக, அவை வலுவான இறை மற்றும் நாணய முகாமைத்துவத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு பொருள்கோடல் செய்யப்படல் வேண்டும்.

உசாத்துணை

1. Buchanan, J. M. (1958). Public Principles of Public Debt: A Defense and Restatement. *The Collected Works of James M. Buchanan,* Vol. 2. Indianapolis, Ind.: Liberty Fund.

2. Blommestein Hans J. and Koc Kalkan F. (2008), “Sovereign Asset and Liability Management Practical Steps towards Integrated Risk Management”, FINANCIEEL FORUM / BANK- EN FINANCIEWEZEN, Available at < // efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://pubdocs.worldbank.org/en/123551510764803764/BRISK-Resources-2008BlommensteinKoc-SovereignAssetLiabilityManagement.pdf>.

3. Central Bank of Sri Lanka, “Macroeconomic Developments in Charts-As at end December 2024 (released on 15.01.2025)”, (Chart Pack), Available at < https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/statistics/mecpac/Chart_Pack_Q4_2024_e1.pdf>.

4. International Monetary Fund, “A Government Debt

Issuance Strategy and Debt Management Framework", Developing Government Bond Markets, IMF e-library, (2001).

5. International Monetary Fund, *(2001)*. "Guidelines for Public Debt Management", Available at < https://www.imf.org/external/np/mae/pdebt/2000/eng/index.htm>.

6. International Monetary Fund, (2018). *Article IV Consultation and the Fourth Review Under the Extended Arrangement Under the Extended Fund Facility - Press Release, Staff Report and Statement by the Executive Director for Sri Lanka*, Available at < file:///C:/Users/Kishan/Downloads/cr18175.pdf>.

7. International Monetary Fund, Staff Level Agreement: 2023, Available at < https://www.imf.org/en/News/Articles/2024/11/26/pr24435-imf-team-reaches-staff-level-agreement-with-sri-lanka>.

8. Ekanayake, K. A. D. A. (2023), *Satahana*, Vol. 42. Central Bank of Sri Lanka Publications.

9. Jonasson, T and Papaioannou M, A Primer on Managing Sovereign Debt-Portfolio Risks, IMF Working Paper (2018).

10. Liability Management Background Note. (2010). World Bank, Washington DC, Available at

11. <http://siteresources.worldbank.org/FINANCIALSECTOR/Resources/LMBackgroundNotefinal.pdf>.

12. Tempelman, J. H. (2007). *The Independent Review*, Vol. XI, n. 3, Winter 2007. p. 438.

13. Tenth Bond Market Forum of OECD/World Bank/IMF. (2008), Available at <https://www.imf.org/external/np/seminars/eng/2008/bondmkt/pdf/makoff.pdf>.

14. World Bank Group (2024). "Sri Lanka: Debt Management Reform Plan", Available at < https://documents1.worldbank.org/curated/en/099082024171516818/pdf/BOSIB-a98dbe92-eb76-4416-8c4f-c2bdb19d66c9.pdf>.

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவின் முக்கியத்துவமும் அதற்கான இலங்கையின் தயார்நிலையும்



பொறியியலாளர் லசித் பெர்னாண்டோ,
மூத்த உதவிப் பணிப்பாளர்,
தகவல் தொழில்நுட்பத் திணைக்களம்

அறிமுகம்

கருத்தியல் மட்டத்திலிருந்து பாரம்பரிய இயந்திரக் கற்றல் மற்றும் ஆழமான கற்றல் வரையான தொடர்ச்சியான அபிவிருத்திகளுடன் செயற்கை நுண்ணறிவானது 1950களில் இருந்து ஆய்வு இலக்கியத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதுடன் பிறப்பாக்கின்ற செயற்கை நுண்ணறிவு (Generative AI) மற்றும் சுயாதீன செயற்கை நுண்ணறிவு (Agentic AI) என்பவற்றின் பரிணாம வளர்ச்சியுடன் இது உலகளாவிய அபிவிருத்தியில் புரட்சியை ஏற்படுத்துகின்ற அடுத்த பெரியளவிலான தொழில்நுட்ப கண்டுபிடிப்பாக மாற்றமடைந்துள்ளது. ஏதேனும் துறையில் அபிவிருத்திக்குச் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதானது தொழில்நுட்பத் தேர்ச்சியினை மாத்திரமின்றி, ஒழுக்கநெறிசார் நிலைப்பாடு, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு என்பவற்றிலும் தாக்கம் செலுத்துகின்றது. பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் நிலைமாற்றம் என்பன தொடர்பில் முக்கியமானதொரு தருணத்தில் இருக்கின்ற நாடென்ற வகையில் இலங்கை பல சவால்களை வாய்ப்புக்களாக மாற்றுவதற்குச் செயற்கை நுண்ணறிவினைப் பொறுப்புடன் தழுவிக்கொள்வதானது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன என்பதனையும் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவில் இலங்கையின் பயணம் மற்றும் தயார்நிலையினையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு என்பது செயற்கை நுண்ணறிவுசார் தீர்வுகளைப் பாதுகாப்பான, நம்பகமான மற்றும் ஒழுக்கநெறிசார்ந்ததொரு முறையில் வடிவமைப்பதற்கு, மேம்படுத்துவதற்கு, மதிப்பிடுவதற்கு மற்றும் பயன்படுத்துவதற்கான அணுகுமுறையொன்றாகக் காணப்படுகின்றது. செயற்கை நுண்ணறிவு முறைமைகளின் பரந்தளவிலானதொரு சமூகத் தாக்கம் மற்றும் இத்தொழில்நுட்பங்களை ஆர்வலர்களின் விழுமியங்கள், சட்டத் தரநியமங்கள் மற்றும் ஒழுக்கநெறிசார் கொள்கைகளுடன் சீரமைப்பதற்குத் தேவையான வழிமுறைகளைக் கருத்திற்கொள்வது இதில் அடங்குகின்றது.

பொறுப்பற்ற செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தக்கூடிய பேரழிவின் தீவிரத்தன்மையினைப் பின்வரும் உலகளாவிய உதாரணங்களிலிருந்து கண்டுகொள்ள முடியும்.

- 2018 மற்றும் 2019 இல், இயக்கக் குணாதிசய மேம்பாட்டு முறைமை அல்லது தன்னியக்க விமானக் கட்டுப்பாட்டு முறைமையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இரண்டு தனித்தனி போயிங் 737 மெக்ஸ் ரக விமானங்கள் விபத்திற்குள்ளாகி 346 பேர் இறந்தனர். ஏற்பட்ட உயிர் இழப்புக்களுக்கு மேலதிகமாக, இது போயிங் 737 மெக்ஸ் விமானங்களை உலகளவில் பறக்கவிடாமல் நிறுத்திவைக்கச் செய்தமையானது பில்லியன் கணக்கான நிதியியல் இழப்புக்களை உருவாக்கியது.
- 2023இல், சம்சுங் நிறுவனத்தின் ஊழியரொருவர் உள்ளகப் பணிகளுக்காக உள்ளக மூலக் குறியீடு மற்றும் ஆவணங்களை சட்ஜிபிடியில் பிரதியெடுத்துப் பதிலீடு செய்தமையானது முக்கியமான தரவுக் கசிவொன்றினை ஏற்படுத்தியதுடன், இதனால் பிறப்பாக்கின்ற செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை உள்ளக ரீதியில் பயன்படுத்துவதனைச் சம்சுங் நிறுவனம் தடைசெய்தது.

அட்டவணை 1: செயற்கை நுண்ணறிவின் பரிணாம வளர்ச்சியின் முக்கிய மைற்கற்கள்		
ஆண்டு	**நிகழ்வு**	**முக்கிய பண்புகள்**
1950	டூரிங் பரிசோதனை முன்மொழியப்பட்டது	இயந்திரமொன்று மனிதனொருவரிடமிருந்து பிரித்தறிய முடியாதவாறான உரையாடலொன்றினை நடத்த முடியுமாயிருப்பின் அது நுண்ணறிவுடையதெனக் கருதப்படக்கூடுமென்பதனை எடுத்துக்காட்டுகின்ற பரிசோதனையை ஆலன் டூரிங் பரிந்துரைத்தார்.
1956	டார்ட்மத்தில் செயற்கை நுண்ணறிவெனப் பெயரிடப்பட்டது	டார்ட்மத் மாநாடு அதிகாரபூர்வமாக "செயற்கை நுண்ணறிவு" என்ற சொற்பதத்தினை உருவாக்கியமையானது ஆராய்ச்சித் துறையொன்றாக செயற்கை நுண்ணறிவின் பிறப்பினைக் குறித்துக்காட்டியது.
1970	முதலாவது செயற்கை நுண்ணறிவு மந்தகாலம்	ஆரம்ப செயற்கை நுண்ணறிவு முறைமைகள் வாக்குறுதியளிக்கப்பட்ட பெறுபேறுகளை வழங்கத் தவறியமையினால் அதற்கான நிதியிடல் குறைவடைந்தது.
1980	இரண்டாவது செயற்கை நுண்ணறிவு மந்தகாலம்	உயர்ந்தளவிலான பராமரிப்புச் செலவுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட விரிவாந்தன்மை என்பன காரணமாக நிபுணர் முறைமைகளின் எழுச்சி வீழ்ச்சியடைந்தமையானது மற்றுமொரு நிதியிடல் குறைப்பிற்கு வழிவகுத்தது.
1997	டீப் ப்ளு காஸ்பரோவை வீழ்த்தியது	ஐபிஎம் இனுடைய சதுரங்கம் விளையாடுகின்ற கணினியானது உலகச் சதுரங்க வெற்றிக்கிண்ண சுவீகரிப்பாளரான கேரி காஸ்பரோவை வீழ்த்தியமையானது இயந்திரங்கள் குறிப்பிட்ட சில பணிகளில் மனிதர்களை விட சிறப்பாகச் செயற்படக்கூடும் என்பதனை நிரூபித்தது.
2012	அலெக்ஸ்நெட் ஆழ்ந்த கற்றலினைப் புரட்சிகரமாக்கியது	அலெக்ஸ்நெட்டானது இமேஜ்நெட் போட்டியினைப் பெரிய வித்தியாசமொன்றில் வென்றமையானது படிமங்களை அடையாளம் காண்பதில் வரைகலை செயற்பகுதிகள் (GPUs) மற்றும் ஆழமான நரம்பியல் வலையமைப்புக்கள் (deep neural networks) என்பவற்றின் ஆற்றலினைக் காட்டியது.
2016	ஆல்பா கோ லீ செடோலினை வீழ்த்தியது	கூகுள் டீப்மைண் நிறுவனத்தின் ஆல்பா கோ சிறந்த முன்னணி கோ வீரரைத் தோற்கடித்தமையானது சிக்கலான, உள்ளுணர்வுமிக்க விளையாட்டுக்களில் தேர்ச்சியடையும் செயற்கை நுண்ணறிவின் திறனை எடுத்துக்காட்டியது.
2020	பிறப்பாக்கின்ற செயற்கை நுண்ணறிவின் எழுச்சி (GPT-3, DALL·E)	GPT-3 மனிதர்களைப் போன்று உரைகளை உருவாக்கின்ற திறமையினால் உலகை வியக்க வைத்தது; DALL·E உரை வடிவிலான அறிவுறுத்தல்களிலிருந்து யதார்த்தபூர்வமான படிமங்களை உருவாக்கியது.
2023	பிறப்பாக்கின்ற செயற்கை நுண்ணறிவு பொதுமயமாகியது (சட்ஜிபிடி, கோபிலோட்)	எழுத்து, குறியீட்டல் மற்றும் வாடிக்கையாளர் சேவைக்கு சட்ஜிபிடி பரவலாகப் பயன்படுத்தப்பட்டது; செயற்கை நுண்ணறிவினை அன்றாட உற்பத்தித்திறன் கருவிகளுடன் கோபிலோட் ஒருங்கிணைத்தது.

- 2014-2018 காலப்பகுதியில் செயற்கை நுண்ணறிவின் அடிப்படையிலமைந்த ஆட்சேர்ப்புக் கருவியினை அமேசன் பயன்படுத்தியுள்ளதுடன் இது ஆண்கள் தொடர்பிலான பயிற்சித் தரவினைப் பயன்படுத்திப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளமையினால் பெண்களுக்கு எதிராக பக்கசார்பான முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

அதேபோன்று, செயற்கை நுண்ணறிவின் பொறுப்பற்ற பயன்பாட்டினால் ஏற்படும் சேதத்தைக் காட்டுகின்ற பல ஏனைய நிகழ்வுகள் காணப்படுவதுடன் இது பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

பல தொழில்நுட்ப ஜாம்பவான்கள் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு போன்ற பன்னாட்டு அமைப்புக்கள் செயற்கை நுண்ணறிவுக் கொள்கைகள்/நம்பிக்கைப் பொறுப்பின் தூண்களை வரைவிலக்கணப்படுத்தியுள்ளமையானது செயற்கை நுண்ணறிவினைப் பொறுப்புமிக்கதாகவும் நம்பகமானதாகவும் மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவு முறைமையொன்றின் முக்கிய பண்புகளை எடுத்துக்காட்டுகின்றது. பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவிற்கான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் கொள்கைகள் பின்வருமாறு:

- அனைவரையுமுள்ளடக்கிய வளர்ச்சி, நீடித்துநிலைத்திருக்கின்ற அபிவிருத்தி மற்றும் நலனோம்புகை
- மானிடரை மையமாகக்கொண்ட விழுமியங்கள் மற்றும் நேர்மை
- வெளிப்படைத்தன்மை மற்றும் விளக்கும் தன்மை
- வலிமை, பாதுகாப்பு மற்றும் ஆபத்தின்மை
- பொறுப்புக்கூறல்

2019இல் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் பரிந்துரைகளை வெளியிட்ட பின்னர், யுனெஸ்கோ 2021இல் செயற்கை நுண்ணறிவின் ஒழுக்கநெறிகள் குறித்த அதன் பரிந்துரைகளை வெளியிட்டதுடன் இது செயற்கை நுண்ணறிவின் ஒழுக்கநெறிகள் குறித்த முதலாவது உலகளாவிய கட்டமைப்பாகக் கருதப்படுகின்றது.

இம்மைய விழுமியங்கள், தோற்றம்பெற்று வருகின்ற செயற்கை நுண்ணறிவுடன் தொடர்புடைய குறிப்பிட்ட சட்டவாக்கங்கள் உள்ளடங்கலாக தேசிய மற்றும் பன்னாட்டுக் கொள்கைகளிற்கு வழிகாட்டுகின்றன. இருப்பினும், இக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆழமான ஒழுக்கநெறிசார் பகுப்பாய்வு, இடர்நேர்வு/வாய்ப்பு மதிப்பீடு மற்றும் மனித மேற்பார்வை என்பன எந்தவொரு செயற்கை நுண்ணறிவுசார் உற்பத்திக்கும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றன.

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுப் பயணத்தின் கட்டங்கள்

நாடுகளும் வியாபாரங்களும் டிஜிட்டல் உட்கட்டமைப்பினை அதிகளவில் நம்பியிருப்பதனால் நீடித்துநிலைத்திருக்கின்ற வளர்ச்சி, பொருளாதாரத் தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் நீண்டகால உபாய ரீதியிலான நன்மை என்பவற்றிற்குச் செயற்கை நுண்ணறிவினைப் பொறுப்புடன் ஒருங்கிணைப்பதானது இன்றியமையாததொன்றாக மாற்றமடைந்துள்ளது. பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுப் பயணமானது குறுகியதொரு பயணம் அல்ல. இது பல கட்டங்களாகப் பரவலடைந்துள்ள நீண்டதொரு பயணமாகும். பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுப் பயணத்தின் முக்கிய கட்டங்கள் பின்வருமாறு குறித்துக்காட்டப்பட முடியும்.

1. தேசிய தொலைநோக்கொன்றினையும் கோட்பாடுகளையும் நிறுவுதல்
2. வலுவான ஆளுகைக் கட்டமைப்பொன்றினைக் கட்டியெழுப்புதல்
3. தொழில்நுட்ப மற்றும் சட்ட உட்கட்டமைப்பினை உருவாக்குதல்
4. அனைவரையுமுள்ளடக்கிய பொது கலந்துரையாடல் மற்றும் பங்கேற்பினை ஊக்குவித்தல்
5. மனித மற்றும் நிறுவன ரீதியிலான இயலளவினைக் கட்டியெழுப்புதல்
6. கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான கற்றல்

பல நாடுகள் அவற்றின் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுப் பயணங்களை ஏற்கனவே தொடங்கிப் பல்வேறு கட்டங்களுக்கு முன்னேற்றமடைந்துள்ளன. இக்கட்டுரையின் அடுத்த பகுதிகள் இந்த ஒவ்வொரு கட்டத்தினையும், ஒவ்வொரு கட்டத்திலும் உலகளாவிய ரீதியிலான இருப்பினையும், அதில் இலங்கை எவ்விடத்தில் நிற்கின்றது என்பதனையும் சுருக்கமாக விவரிக்கும்.

தேசிய தொலைநோக்கொன்றினையும் கோட்பாடுகளையும் நிறுவுதல்

நாட்டின் அபிவிருத்தியில் செயற்கை நுண்ணறிவின் உபாய ரீதியிலான ஆற்றல்வாய்ந்ததன்மையினை அடையாளங்கண்டு, உலகெங்கிலும் உள்ள 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மற்றும் அரசாங்கம் தழுவிய உபாய ரீதியிலான முன்முயற்சிகளை ஏற்கனவே உருவாக்கியுள்ளன. அந்நாடுகளில் சிலவற்றின் தேசிய ரீதியிலான செயற்கை நுண்ணறிவு உபாய அங்குரார்ப்பணங்களின் காலவரிசை பின்வரும் வரைபடம் 1 சித்தரிக்கின்றது.



வரைபடம் 1: செயற்கை நுண்ணறிவு உபாயங்களின் உலகளாவிய ரீதியிலான பரிணாம வளர்ச்சி

இந்தத் தொலைநோக்கானது பொறுப்புமிக்க விதத்தில் இருப்பதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுவதுடன் இலங்கையில் செயற்கை நுண்ணறிவினை மேம்படுத்துவதற்கான உபாய ரீதியிலான கட்டமைப்பில் அடையாளம் காணப்பட்ட ஏழு மையத் தூண்களில் முதலாவது தூணாகப் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவினை அது மேலும் வலியுறுத்துகின்றது. இக்கோட்பாடுகள் அபிலாசைகளல்ல. அவை அவசியமானவையாகத் திகழ்கின்றன. பன்முக சமூகப் பொருளாதார யதார்த்தங்களைக் கொண்டதொரு சமூகத்தில் முன்னேற்றமானது சமத்துவமானதும் வெளிப்படையாகவும் காணப்படுவதனை பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு நிச்சயப்படுத்துகின்றது.



வரைபடம் 2: இலங்கையில் செயற்கை நுண்ணறிவினை மேம்படுத்துவதற்கான உபாய ரீதியிலான கட்டமைப்பு

(மூலம்: இலங்கைக்கான தேசிய செயற்கை நுண்ணறிவு உபாயம்)

வலுவான ஆளுகைக் கட்டமைப்பொன்றினைக் கட்டியெழுப்புதல்

எந்தவொரு நாடும் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு அபிவிருத்தியில் முன்னேற்றமடைவதற்கு அரசாங்க நடவடிக்கைகள் மற்றும் ஆதரவு என்பன இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. இது பல்வேறு வழிமுறைகளின் ஊடாக பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவின் அபிவிருத்தியினை வசதிப்படுத்துவதற்கு முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதனை உலகெங்கிலும் உள்ள பல அரசாங்கங்கள் புரிந்துகொண்டுள்ளன. பல துறைகளிலான மதியுரைக் குழுக்களுடன் இணைந்து ஒழுக்கநெறிசார் கட்டமைப்புக்கள், கடினமான மற்றும் மென்மையான சட்டங்கள் மற்றும் ஆளுகைக் கட்டமைப்புக்கள் என்பன மிகவும் பொதுவான ஆளுகை வழிமுறைகளாகக் காணப்படுகின்றன. முறையினைப் பொருட்படுத்தாமல், கோட்பாடுகள் பன்முகக் கண்ணோட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அனைவரையுமுள்ளடக்கியதாக அமைய வேண்டுமென்பதுடன் வெளிப்படையானதாகவும் கவனமாகவும் விரிவாகவும் ஆராயக்கூடியதாகவும் அமைய வேண்டும்.

2019இல் தன்னியக்கத் தீர்மானம் மேற்கொள்ளல் குறித்த பணிப்புரையின் ஊடாக அரசாங்கத்தில் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான வெளிப்படைத்தன்மையைக் கட்டாயமாக்குவதில் முன்னணியில் இருந்த பல நாடுகளில் கனடாவும் ஒன்றாகும். கனேடியச் செயலகத்தின் திறைசேரிச் சபையானது கனடாவில் செயற்கை நுண்ணறிவுசார் ஆளுகைக்குப் பொறுப்பான ஆளுகைக் குழுவாகக் காணப்படுகின்றது. கனடாவில் பொதுச் சேவைகளுக்கான செயற்கை நுண்ணறிவுக் கருவியொன்றினைப் பயன்படுத்துவதற்கு முன்னர் நெறிமுறைத் தாக்க மதிப்பீடொன்று நிறைவுசெய்யப்பட வேண்டும்.

செயற்கை நுண்ணறிவின் ஒழுக்கநெறி மற்றும் உபாய ரீதியிலான பயன்பாட்டை வழிநடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் பல முன்முயற்சிகளைத் தொடங்கியுள்ளது:

- செயற்கை நுண்ணறிவு குறித்த சனாதிபதி செயலணிக் குழு (2023): வேளாண்மை, சுகாதாரம், கல்வி மற்றும் பொது நிர்வாகம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் செயற்கை நுண்ணறிவினை ஊக்குவிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்டது.
- தேசிய செயற்கை நுண்ணறிவுசார் மதியுரைக் குழு: ஆளுகை, கல்வி, ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆராய்ச்சி என்பன குறித்து ஆலோசனை வழங்குகின்ற பல துறைகளிலானதொரு குழு.

இக்குழுக்கள் இலங்கையின் செயற்கை நுண்ணறிவுசார் உபாயத்தினை உருவாக்குவதிலும் அதனைப் பரந்தளவிலான டிஜிட்டல் பொருளாதார உபாயத்துடன் ஒருங்கிணைப்பதிலும் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்றன. தேசிய செயற்கை நுண்ணறிவுசார் உபாயமானது **டிஜிட்டல் நிலைமாற்ற முகவராண்மையொன்றினையும்** அதன்கீழ் **செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையத்தினையும்** நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிப்பதுடன் இவை செயற்கை நுண்ணறிவுசார் உபாயத்தின் மையக் கொள்கைகள் உபாயம் மற்றும் குறிப்பிட்ட முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதில் செயற்றிறன்மிக்க விதத்தில் பிரதிபலிக்கப்படுவதனை நிச்சயப்படுத்தும்.

பல்வேறு நாடுகளின் செயற்கை நுண்ணறிவுசார் ஆளுகை மாதிரிகளின் இலங்கைக்கு எதிரான ஒப்பீடொன்றினை அட்டவணை 1 காட்டுகின்றது.

அட்டவணை 2: செயற்கை நுண்ணறிவுசார் ஆளுகை மாதிரிகளின் ஒப்பீடு			
நாடு	முக்கிய ஆளுகை நிறுவனம்	ஆர்வலர் உள்ளடக்கம்	ஆளுகைசார் முறை
கனடா	திறைசேரிச் சபை	சிவில் சமூகம், அரசாங்க முகவராண்மைகள்	பொதுத் துறை தலைமையிலானது
ஐரோப்பிய ஒன்றியம்	ஐரோப்பிய ஆணைக்குழு + செயற்கை நுண்ணறிவுக் கூட்டமைப்பு	பரந்தளவிலான ஆர்வலர் மன்றங்கள்	பல்மட்ட, இடர்நேர்வு அடிப்படையிலானது
சிங்கப்பூர்	இன்பொகாம் ஊடக அபிவிருத்தி அதிகாரசபை + செயற்கை நுண்ணறிவு சிங்கப்பூர்	வலுவான தொழிற்றுறை ஈடுபாடு	அரசாங்கத்தின் தலைமையிலானது, விரைவானது
நியூசிலாந்து	வியாபாரம், புத்துருவாக்கம் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சு +செயற்கை நுண்ணறிவு மன்றம் நியூசிலாந்து	சுதேச மற்றும் பொது நம்பிக்கைப்பொறுப்பு	கலாசார ரீதியாக அனைத்தையும் உள்ளடக்கியது
இந்தியா	இந்திய மாற்றத்திற்கான தேசிய நிறுவனம் ஆயோக் +செயலணிக் குழுக்கள்	துறை சார்ந்த பங்குடமைகள்	நோக்கம் சார்ந்தவை
இலங்கை	டிஜிட்டல் நிலைமாற்ற முகவராண்மை + செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையம் (இன்னும் நிறுவப்படவில்லை)	ஆர்வலர் மன்றங்கள்	ஒத்துழைப்பு: அரசாங்கம், தனியார் துறை, கல்வியாளர்கள் மற்றும் சிவில் சமூகம் என்பன துடிப்பான செயற்கை நுண்ணறிவுசார் சூழலொன்றினை உருவாக்குவதற்கு இணைந்து செயற்படுதல்.

தொழில்நுட்ப மற்றும் சட்ட உட்கட்டமைப்பினை மேம்படுத்தல்

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவின் தொழில்நுட்ப மற்றும் சட்ட உட்கட்டமைப்புத் தேவைப்பாடுகள் தரவு உட்கட்டமைப்பு, கணக்கீட்டு உட்கட்டமைப்பு, கருவித் தொகுதிகள், தரநியமங்கள், சட்டங்கள் மற்றும் பரிசோதனைப் பகுதிகள் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளன. பல அபிவிருத்தியடைந்த நாடுகள் செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சியடைந்து வருகின்ற கேள்விகளைப் பூர்த்திசெய்வதற்கு ஆற்றல்வாய்ந்த தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை ஏற்கனவே கொண்டுள்ளன.

மேலும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன டிஜிட்டல் இறையாண்மையினூடாக நம்பகமான செயற்கை நுண்ணறிவினை நிச்சயப்படுத்துகின்றன. அதிவேக இணையத்தள இணைப்பு மற்றும் இணையத்தில் சேமிப்பகத் தளங்கள் (Cloud) என்பவற்றில் முதலீடு செய்வதன் மூலம் இலங்கையும் சரியான திசையினை நோக்கி நகர்கின்றது.

பின்வரும் அட்டவணை 2 தொழில்நுட்ப மற்றும் சட்ட உட்கட்டமைப்பு மேம்பாட்டில் இலங்கை மற்றும் உலகின் முக்கிய செயற்கை நுண்ணறிவுசார் தொழிற்பாட்டாளர்களைச் சுருக்கமாகக் காட்டுகின்றது.

அட்டவணை 3: செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மற்றும் சட்ட உட்கட்டமைப்பு பற்றிய ஒப்பீடு

நாடு	தரநியமங்கள்	சட்டங்கள்	கருவிகள்	செயற்கை நுண்ணறிவு பரிசோதனைச் சூழல்கள்
ஐக்கிய அமெரிக்கா	நிஸ்ட் செயற்கை நுண்ணறிவு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு	சட்டங்கள் நெறிமுறைப் பொறுப்புக்கூறல் சட்டம் (முன்மொழியப்பட்டது)	தேசிய செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி வளக் கருவிகள் (உருவாக்கத்தில் உள்ளன), நியாயமான குறியீடுகள்	பொது நிறுவனங்களில் ஆராய்ச்சிப் பயன்பாடு, தேசிய செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி (திட்டமிடப்பட்டது)
ஐரோப்பிய ஒன்றியம்	நம்பகமான செயற்கை நுண்ணறிவிற்கான நெறிமுறை வழிகாட்டுதல்கள்	ஐரோப்பிய ஒன்றிய செயற்கை நுண்ணறிவுச் சட்டம்	தேவைக்கேற்ப செயற்கை நுண்ணறிவுச் சேவைகளை வழங்குகின்ற தளம், வெளிப்படைத்தன்மை படிவங்கள்	பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவுச் சோதனை மற்றும் பரிசோதனை வசதிகள்
சிங்கப்பூர்	மாதிரி செயற்கை நுண்ணறிவுசார் ஆளுகைக் கட்டமைப்பு	சட்டவாக்கமற்றது; தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் துறைசார்ந்த வழிகாட்டுதல்	செயற்கை நுண்ணறிவு சரிபார்க்கின்ற கருவித்தொகுதி, தொழிற்றுறை சுய மதிப்பீட்டு வழிகாட்டிகள்	ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்புக்கள் (நிதி, சுகாதாரம், போக்குவரத்து)
ஐக்கிய இராச்சியம்	செயற்கை நுண்ணறிவு நெறிமுறைகள் மற்றும் பாதுகாப்பைப் புரிந்துகொள்ளல் (டூரிங் நிறுவனம்)	செயற்கை நுண்ணறிவு தொடர்பில் குறிப்பிட்ட சட்டம் எதுவும் காணப்படுவதில்லை; தரவுப் பாதுகாப்புச் சட்டம் பொருந்துகின்றது	விளக்கமளிக்கின்ற வழிகாட்டுதல்கள், சார்புத் தணிப்புக் கையேடுகள்	நம்பகமான ஆராய்ச்சிச் சூழல்கள்
இந்தியா	அனைவருக்கும் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு (இந்திய மாற்றத்திற்கான தேசிய நிறுவனம் ஆயோக்)	டிஜிட்டல் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் (2023)	செயற்கை நுண்ணறிவுச் சேவை நுழைவாயில்கள், பொது தரவுத் தளங்கள் (திட்டமிடப்பட்டது)	துறைசார்ந்த முன்னோட்டங்கள், கணனிச் சோதனைத் தளங்கள் (உருவாக்கத்தில் உள்ளன)
சீனா	செயற்கை நுண்ணறிவு தரப்படுத்தல் வழிகாட்டல்	இணையத்தளத் தகவல் சேவைகள் வழிமுறைசார் ஒழுங்குபடுத்தல்	திறந்த செயற்கை நுண்ணறிவுத் தளங்கள் (உதாரணம்: சிடி பிரைன், பெடில்பெடில்)	ஸ்மார்ட் சிடி பரிசோதனைப் பகுதிகள் (ஹங்க்சோ போன்றவை)
இலங்கை	தேசிய செயற்கை நுண்ணறிவு உபாய நெறிமுறைக் கொள்கைகள்	தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் (2022), நிகழ்நிலைக் காப்புச் சட்டம் (2024)	செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையத்திலிருந்து வரவிருக்கின்ற கருவிகள்	செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையத்தின் ஊடாக முன்மொழியப்பட்ட செயற்கை நுண்ணறிவுப் பரிசோதனைக் கட்டமைப்புக்கள் மற்றும் சோதனைத் தளங்கள். இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் தொழில்நுட்பவியல் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்புக்கள்.

இலங்கையின் சட்டவாக்கமும் செயற்கை நுண்ணறிவின் துரித அபிவிருத்திக்கு ஏற்றவாறு மாறிவருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது:

- **தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்** - 2022 இல் நிறைவேற்றப்பட்ட இச்சட்டமானது தனிப்பட்ட தரவு எவ்வாறு செய்முறைப்படுத்தப்பட முடியுமென்பதற்கான ஆணையினையளித்து, பயனர்களுக்கு அதிகாரமளிப்பதுடன் தவறான பயன்பாட்டிற்கெதிரான பாதுகாப்பினை அளிக்கின்றது. இச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய திருத்தங்கள் செயற்கை நுண்ணறிவு மற்றும் அதனையொத்த தொழில்நுட்பங்களை உள்ளடக்கும் விதத்தில் தன்னியக்கத் தீர்மானம் மேற்கொள்வதற்கு எதிரான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன.

- **நிகழ்நிலைக் காப்புச் சட்டம் (2024)** - நிகழ்நிலைத் தீங்கு மற்றும் தவறான தகவல்களைக் குறைப்பதனை நோக்காகக் கொண்டுள்ள போதிலும் சாத்தியமான அதிகார வரம்பு மீறலிற்கு வழிவகுப்பதாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்களின் கருத்துக் கணிப்பிற்காக விடப்பட்டுள்ளது.

- **இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் தொழில்நுட்பவியல் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பு:** புத்தாக்கம் புனைவோர் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதலினைப் பெறுவதற்குத் தங்களைச் சிறந்த முறையில் தயார்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பொன்றினை வழங்குவதற்கும் பாரியளவிலான நிதியியல் வசதிக்குட்படுத்தலினை இயலச்செய்யக்கூடிய வலுவான மற்றும் நீடித்துநிலைத்திருக்கின்ற புத்துருவாக்கங்களை வசதிப்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கியானது செயற்கை நுண்ணறிவுசார் புத்தாக்கம் புனைவோர் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்புத் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் செயற்கை நுண்ணறிவுசார் வளர்ச்சிகளைச் சீரமைப்பதனையும் ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுசார் வளர்ச்சிகளுக்கு ஏற்றவாறு விதிமுறைகளை இற்றைப்படுத்துவதனையும் இயலச்செய்கின்ற நிதியியல் தொழில்நுட்பவியல் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பினை நிறுவியுள்ளது.

இருப்பினும், பாரம்பரிய சட்ட மற்றும் தொழில்நுட்ப ஏற்பாடுகள் இன்னமும் பல பகுதிகளில் காணப்படுகின்றன. அவை சவால்களை உருவாக்குவதுடன் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டினைக் கட்டுப்படுத்துகின்றன. அநேகமான பொதுத்துறைத் தரவுத்தொகுப்புகள் தனித்தனியாக பிரிந்து காணப்படுவதுடன் தரவுத் தரமானது சீரற்றதாகவும் மோசமாகவும் காணப்படுகின்றது. பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பன வெவ்வேறு ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்களினால் ஆளப்படுவதுடன் இவை திணைக்களங்களிடையே தரவினைப் பகிர்வதில் தடைகளை உருவாக்கின்றன. ஆதலால், செயற்கை நுண்ணறிவின் முழுமையான ஆற்றல்வாய்ந்ததன்மையினை வெளிக்கொணர்வதற்கு ஒருங்கிணைந்த தரவு உபாயமொன்று அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. தேசிய தரவுப் பகிர்வுக் கொள்கை மற்றும் இலங்கை அரசாங்கத்தின் வேளாண்மை இயங்குதன்மைக் கட்டமைப்பு போன்ற பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையானது எதிர்காலத்தில் வளமான தரவுத் தொகுப்புக்களுக்கு வழிவகுக்கின்ற திடமான அடித்தளங்களின் சமிக்ஞைகளைக் காட்டுகின்றன.

அனைவரையுமுள்ளடக்கிய பொதுக் கலந்துரையாடல் மற்றும் பங்கேற்பு என்பவற்றினை மேம்படுத்தல்

கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப துறைசார் வல்லுநர்கள் ஆகியோருக்கு அப்பால் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரினதும் தேவைகள், விழுமியங்கள் மற்றும் கரிசனைகள் என்பவற்றினைப் பிரதிபலிப்பதற்கு அனைவரையுமுள்ளடக்கிய பொது உரையாடல் மற்றும் பங்கேற்பினை மேம்படுத்துவது அத்தியாவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. செயற்கை நுண்ணறிவு முறைமைகளின் வடிவமைப்பு, மேற்பார்வை மற்றும் மதிப்பீடு என்பவற்றில் பிரசைகள், ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள், சிவில் சமூகம், கல்வியாளர்கள் மற்றும் தொழிற்றுறையினர் தீவிரமான ஈடுபாட்டினைக் காட்டுவதும் இதில் அடங்குகின்றது. ஆலோசனை என்பதற்கு அப்பாற்சென்று, செயற்கை நுண்ணறிவுக் கொள்கை மற்றும் அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்ற பிரயோகங்களை வடிவமைப்பதில் மக்களுக்குக் குரல், முகவராண்மை மற்றும் செல்வாக்கொன்றினை வழங்குதல் அவசியமாயமைகின்றது.

பின்வரும் அட்டவணை பல்வேறு நாடுகளில் செயற்கை நுண்ணறிவுசார் ஆளுகையில் பொதுமக்களின் ஈடுபாட்டினைச் சுருக்கமாகக் கூறுகின்றது.

செயற்கை நுண்ணறிவில் வளர்ச்சியடைந்து வருகின்றதொரு நாடாக இலங்கை உள்நாட்டுக் கொள்கை உருவாக்கக் கட்டமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக இருக்கின்ற

அட்டவணை 4: செயற்கை நுண்ணறிவில் பொதுமக்களின் உள்ளடக்கம் குறித்த ஒப்பீடு			
நாடு	பொது ஈடுபாட்டுக் கருவிகள்	தொடர்புடைய ஆர்வலர்கள்	ஈடுபாட்டு முறை
கனடா	பொதுவாக அணுகக்கூடிய நெறிமுறைத் தாக்க மதிப்பீடு	சிவில் சமூகம், கல்வியாளர்கள், சுதேசக் குழுக்கள்	பயன்பாட்டிற்கு முன்னர் இடர்நேர்வு மதிப்பீடுகளைப் பொதுமக்கள் பார்ப்பதற்கும் விமர்சிப்பதற்கும் முடியும்
பிரான்ஸ்	தேசிய ஆலோசனைத் தளங்கள், செயற்கை நுண்ணறிவு குறித்த விவாதங்கள், நெறிமுறை மன்றங்கள்	பொதுமக்கள், நெறிமுறைசார் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள்	தேசிய உபாயத்திற்கான கட்டமைக்கப்பட்ட நெறிமுறை உள்ளீடு
ஐரோப்பிய ஒன்றியம்	ஐரோப்பிய செயற்கை நுண்ணறிவுக் கூட்டணி, திறந்த ஆலோசனைகள்	பிரசைகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தொழிற்றுறை, கல்வியாளர்கள்	ஐரோப்பிய ஒன்றிய செயற்கை நுண்ணறிவுச் சட்டம் மற்றும் இடர்நேர்வு வகைப்பாட்டிற்கான பின்னூட்டல்
சிங்கப்பூர்	தொழிற்றுறை வட்டமேசைக் கலந்துரையாடல்கள், இன்பொகாம் ஊடக அபிவிருத்தி அதிகாரசபைச் செயலமர்வுகள்	தொழில்நுட்ப நிறுவனங்கள், கல்வியாளர்கள், வரையறுக்கப்பட்ட சிவில் சமூகம்	நடைமுறை ரீதியிலான உரையாடல்
இந்தியா	துறைசார் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு குறித்த ஆலோசனைகள், கொள்கைச் செயலமர்வுகள்	புதிய தொழில் நிறுவனங்கள், கல்வியாளர்கள், தொழிற்றுறைத் தலைவர்கள், பிராந்திய வல்லுநர்கள்	"அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு" பணிக்கான நேரடி உள்ளீடுகள், ஆனால் பிரசைகளின் பங்கேற்பு வரையறுக்கப்பட்டுள்ளது.
நியூசிலாந்து	தரவு மற்றும் தொழில்நுட்பம் குறித்த மாவோரி ஈடுபாட்டு மன்றங்கள்	சுதேச குழுக்கள், திறந்த அரசாங்க மன்றங்கள்	செயற்கை நுண்ணறிவு நெறிமுறைகளுக்காக சுதேச தரவு இறையாண்மைக் கொள்கைகள் மீண்டும் பயன்படுத்தப்பட்டது
இலங்கை	செயற்கை நுண்ணறிவு உபாயத்தில் ஆர்வலர்களின் கருத்துக்கள் கோரப்பட்டன (2024)	அரசாங்கம், இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை, பல்கலைக்கழகங்கள், தனியார் துறை	ஈடுபாட்டுப் பொறிமுறைகள் தோற்றம்பெற்று வருகின்றன; சிவில் சமூகத்தின் உள்ளீடு வளர்ச்சியடைந்து வருகின்றது

செயற்கை நுண்ணறிவுக் கொள்கை வகுத்தலில் பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் ஆர்வலர் உள்ளடக்கத்தன்மை என்பவற்றுடன் நன்கு இசைந்து செல்லும் விதத்தில் உள்ளது. இருப்பினும், காத்திரமான விழிப்புணர்வு மற்றும் இயலளவினைக் கட்டியெழுப்புதல் என்பன ஊடாக உண்மையான பங்கேற்பு மேம்படுத்தப்பட வேண்டும்.

மனித மற்றும் நிறுவனம்சார் இயலளவினைக் கட்டியெழுப்புதல்

சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் செயற்கை நுண்ணறிவுசார் அறிவினைக் கட்டியெழுப்புவதானது பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுப் பயணத்தில் வெற்றிபெறுவதில் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. தரவு மற்றும் உட்கட்டமைப்பு என்பன எந்தளவு முக்கியமானவையாகக் காணப்படுகின்றதோ அதேபோன்று இறுதியில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களை நெறிமுறையாக மற்றும் வினைத்திறன்மிக்க விதத்தில் வடிவமைத்து, செயற்படுத்தி, ஆளுகைசெய்து, மேற்பார்வையிடும் மக்களும் நிறுவனங்களுமே முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர்.

மனித மூலதனம் மற்றும் நிறுவனம்சார் இயலளவினைக் கட்டியெழுப்புவதானது தொழில்நுட்பத்தில் மாத்திரமின்றி தொழில்நுட்பமல்லாத துறைகளிலும் தொழிற்படைத் திறன்களை வலுப்படுத்துவதனைத் தேவைப்படுத்துகின்றது. மேலும், நிறுவனம்சார் கட்டமைப்புக்கள் மற்றும் சூழல் முறைமைகள் பொறுப்புமிக்க விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல், கண்காணித்தல், புத்தாக்கம் புனைதல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு மேம்படுத்தப்பட வேண்டும்.

ஆக்கபூர்வமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த உள்ளீடுகளை வழங்குவதற்கு மக்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்புடைய துறைகளில் இயலளவினைக் கொண்டவர்களாகவும் திறமையானவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதனால் மனித

அட்டவணை 5: மனித மற்றும் நிறுவனம்சார் இயலளவினைக் கட்டியெழுப்புதலின் ஒப்பீடு			
நாடு	திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	நிறுவனம்சார் முதலீடுகள்	அணுகுமுறை
சிங்கப்பூர்	செயற்கை நுண்ணறிவுப் பயிலுநர் நிகழ்ச்சித்திட்டம், தொழில்நுட்பத் திறன் விரைவாக்கி	செயற்கை நுண்ணறிவு சிங்கப்பூர், இன்பொகாம் ஊடக அபிவிருத்தி அதிகாரசபை, நெறிமுறை ஆலோசனைக் குழுக்கள்	கட்டமைக்கப்பட்ட பாதைகள் மூலம் செயற்கை நுண்ணறிவுசார் திறமைகளின் வலுவான மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சியினை மேம்படுத்தல்
ஐக்கிய அமெரிக்கா	தேசிய செயற்கை நுண்ணறிவு நிலைய நிகழ்ச்சித்திட்டங்கள், தேசிய அறிவியல் நிறுவனச் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி நிறுவனங்கள்	தேசிய செயற்கை நுண்ணறிவு முன்முயற்சி அலுவலகம், தேசிய செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி வளம் (திட்டமிடப்பட்டது)	உயர்மட்ட பல்கலைக்கழகங்களில் சிறப்புமிக்க மையங்களுக்கு நிதியிடல்
ஐரோப்பிய ஒன்றியம்	டிஜிட்டல் ஐரோப்பியத் நிகழ்ச்சித்திட்டம், ஐரோப்பிய செயற்கை நுண்ணறிவுத் திறன் உபாயம்	ஐரோப்பிய செயற்கை நுண்ணறிவு அலுவலகம் (திட்டமிடப்பட்டது), தேசிய செயற்கை நுண்ணறிவு ஒழுங்குபடுத்துநர்கள்	செயற்கை நுண்ணறிவுத் திறன்கள் மற்றும் மேற்பார்வை குறித்த நாடு தழுவிய ஒருங்கிணைப்பு
இந்தியா	பியூச்சர்ஸ்கில்ஸ் பிரைம், தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் சங்கத் திறன் பங்குடைமைகள்	பல்வேறு துறைகளில் இந்திய மாற்றத்திற்கான தேசிய நிறுவனம் ஆயோக் தலைமையிலான செயற்கை நுண்ணறிவுப் பணிக் குழுக்கள்	பொது-தனியார் மாதிரிகள் ஊடாக தொழிற்படைத் திறன் மற்றும் வசதிப்படுத்தலில் கவனம் செலுத்தல்
பிரான்ஸ்	கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் செயற்கை நுண்ணறிவு, தேசிய ஸ்டெம் முதலீடு	டிஜிட்டல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய ஆராய்ச்சி நிறுவனம் (செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி), தேசிய செயற்கை நுண்ணறிவு உபாய நடைமுறைப்படுத்தல் அலகுகள்	செயற்கை நுண்ணறிவுக் கல்வி மற்றும் நெறிமுறை ஆராய்ச்சியினை ஊக்குவித்தல்
இலங்கை	அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல்சார் நிகழ்ச்சித்திட்டங்கள். பாடசாலைகளில் உள்ள செயற்கை நுண்ணறிவு மன்றங்கள்	செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையம் (இன்னும் தொழிற்படவில்லை). இலங்கை மென்பொருள் மற்றும் சேவைக் கம்பனிகளின் அமைப்பானது செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.	அமேசன் கிளவுட் கணினிச் சேவைகளுடன் இணைந்து இலங்கை மென்பொருள் மற்றும் சேவைக் கம்பனிகளின் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பாரியளவிலான பயிற்சித் திட்டங்கள்

மற்றும் நிறுவனம்சார் இயலளவினைக் கட்டியெழுப்புவதானது பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவில் பொது உள்ளடக்கத்தன்மையினை மேம்படுத்துவதுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடுகளின் மனித மற்றும் நிறுவனம்சார் இயலளவினைக் கட்டியெழுப்புகின்ற உபாயங்களின் ஒப்பீடொன்று கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் செயற்கை நுண்ணறிவின் எதிர்காலமானது எமது மனித மூலதனத்தில் தங்கியுள்ளது என்பதை அடையாளங்கண்டு, செயற்கை நுண்ணறிவில் மனித மூலதனத்தை மேம்படுத்துவதில் ஏராளமான முன்முயற்சிகளை இலங்கை மேற்கொண்டுள்ளது. அவற்றில் சில பின்வருமாறு.

- அமேசன் கிளவுட் கணினிச் சேவைகளுடன் இணைந்து இலங்கை மென்பொருள் மற்றும் சேவைக் கம்பனிகளின் அமைப்பானது கடந்த இரண்டு ஆண்டுகளில் 50,000 இற்கும் மேற்பட்ட பயில்வோருக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு செயற்கை நுண்ணறிவு மற்றும் கிளவுட் தொழில்நுட்பங்களில் பாரியளவிலான பயிற்சித் திட்டமொன்றினை மேற்கொண்டுள்ளது.

- அரசாங்கத்தின் தலைமையிலான பிரத்தியேகமான நிறுவனமொன்று (செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையம்) நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் செயற்கை நுண்ணறிவினை ஊக்குவிக்கின்ற வகையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியலில் புதிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளன.
- பாடசாலை மாணவர்களின் செயற்கை நுண்ணறிவுசார் அறிவினை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவுச் சங்கங்களை இலங்கை மென்பொருள் மற்றும் சேவைக் கம்பனிகளின் அமைப்புடன் இணைந்து அரசாங்கம் உருவாக்கியுள்ளது.
- செயற்கை நுண்ணறிவினை மையமாகக் கொண்டு அண்மைய காலப்பகுதியில் பல மாநாடுகள் மற்றும் உச்சிமாநாடுகள் நடாத்தப்பட்டன.

ஆதலால், இயலளவினைக் கட்டியெழுப்புவதில் இலங்கை தற்போது நன்கு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையினை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவு என்பது தொழில்நுட்பம் மற்றும் அதன் விளைவுகள் ஆகிய இரண்டினையும் புரிந்துகொள்கின்ற தொழிற்படையொன்றினைக் கொண்டிருப்பதைக் குறிக்கின்றமையினால் பயிற்சித் திட்டங்கள் குறியீட்டு அல்லது தரவு அறிவியல் என்பவற்றில் மாத்திரமின்றி, நெறிமுறை சார்ந்த பகுத்தறிவு, பல்துறை சார்ந்த சிந்தனை மற்றும் குடியுரிமைப் பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

கண்காணித்தல் மற்றும் தொடர்ச்சியான கற்றல்

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுப் பயணம் முற்றுப்பெற்றாலும்கூட தொடர்ந்து காணப்படக்கூடிய கட்டங்களாகக் கண்காணித்தல், தொடர்ச்சியான கற்றல் மற்றும் மேம்பாடு என்பன காணப்படுகின்றன. செயற்கை நுண்ணறிவானது சடுதியாக வளர்ச்சியடைந்து வருகின்ற துறையொன்றாகக் காணப்படுவதனால், செயற்கை நுண்ணறிவு முறைமைகளின் கண்காணிப்புப் பொறிமுறைகள் அவற்றின் யதார்த்தமான உலகளவிலான செயலாற்றத்தினைக் கண்காணிப்பதற்கும் தேவையான கொள்கை மேம்பாடுகளை மேற்கொள்வதற்கும் இணையாக ஒரே நேரத்தில் வளர்ச்சியடைய வேண்டும். இச்செயன்முறையினை வினைத்திறன்மிக்க விதத்தில் செயற்படுத்தும் பொருட்டு செயற்கை நுண்ணறிவு ஆளுகையானது தொடர்ச்சியான மேற்பார்வையினைத் தேவைப்படுத்துவதனால் முறையான நிறுவன ரீதியிலான ஏற்பாடுகள் மற்றும் கருவிகள் காணப்பட வேண்டும்.

இந்நிறுவனங்கள் மற்றும் கருவிகள் செயற்கை நுண்ணறிவின் நெறிமுறை, சமூக மற்றும் தொழில்நுட்ப தாக்கத்தினைப் பின்தொடர்வதற்கு, சுயாதீன கணக்காய்வுகளை இயலச்செய்வதற்கு மற்றும் அரசாங்க, கைத்தொழில் மற்றும் சமூகம் என்பன முழுவதும் மாற்றியமைக்கத்தக்க கற்றல் மற்றும் மேம்பாடுகளை ஊக்குவிப்பதற்கு முடியுமானதாயமைதல் வேண்டும்.

அட்டவணை 6: செயற்கை நுண்ணறிவுக் கண்காணிப்புக் கருவிகள் மற்றும் கற்றல் பொறிமுறைகள்		
நாடு	கண்காணிப்புக் கருவிகள்	கற்றல் பொறிமுறைகள்
ஐரோப்பிய ஒன்றியம்	உயர்ந்தளவிலான இடர்நேர்வினைக் கொண்ட செயற்கை நுண்ணறிவு முறைமைகளின் தரவுத்தளம், இணக்க மதிப்பீடுகள்	ஐரோப்பிய செயற்கை நுண்ணறிவுச் சபையின் வாயிலாக மாற்றியமைக்கத்தக்க விதிகளை வகுத்தல்
சிங்கப்பூர்	செயலாற்ற மதிப்பீட்டிற்கான செயற்கை நுண்ணறிவு சரிபார்ப்புக் கருவித்தொகுதி	செயற்கை நுண்ணறிவுசார் ஆளுகைக் கட்டமைப்பின் தொடர்ச்சியான செம்மைப்படுத்தல்
ஐக்கிய அமெரிக்கா	நிஸ்ட் செயற்கை நுண்ணறிவு இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் தன்னார்வப் பின்பற்றுகை	இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் துறைசார் கையேடுகள் என்பவற்றினை இற்றைப்படுத்துவதற்கான ஆர்வலர் செயலமர்வுகள்
இந்தியா	சுகாதாரம், வேளாண்மை, நிதியியல் தொழில்நுட்பவியல் துறைகளில் பணிக் குழுக்கள்	“அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு” முன்னோடித் திட்டங்கள் அளவிடக்கூடிய பயன்பாட்டு வகைகளை உருவாக்க வழிகாட்டுகின்றன.
இலங்கை	தேசிய செயற்கை நுண்ணறிவு உபாயமானது செயற்கை நுண்ணறிவுசார் பயன்பாடுகளை மீளாய்வு செய்வதற்கு ஆணையளிக்கின்றது	கணக்காய்வு மற்றும் பின்னூட்டல் முறைமைகளை ஒருங்கிணைப்பதற்கான தேசிய செயற்கை நுண்ணறிவு மையம்

இத்தகைய கண்காணித்தலின் முக்கிய கூறுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

- நேர்மை, துல்லியத்தன்மை மற்றும் அணுகல் விளைவுகள் என்பவற்றினை முறையாகப் பின்தொடர்வதற்கான தாக்கக் கண்காணிப்புக் கருவிகள்.
- பயனர்கள் முறைப்பாடுகள், மேன்முறையீடுகள் மற்றும் கருத்துக்களை வழங்குவதற்கான பின்னூட்டல் பொறிமுறைகள்.
- இடர்நேர்வுகளைச் சுயாதீனமாக மதிப்பீடு செய்வதற்கான காலாந்தரக் கணக்காய்வுகள்.
- விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை மேம்படுத்துவதற்குத் தரவினால் உந்தப்பட்ட கொள்கை இற்றைப்படுத்தல்கள்.
- அறிவைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் இணைத்தரப்பினருடன் பகிர்ந்துகொள்வதற்கும் நிறுவன ரீதியிலான தரவுத்தளங்கள்.

செயற்கை நுண்ணறிவுக் கண்காணிப்புக் கருவிகள் மற்றும் கற்றல் பொறிமுறைகளில் சில பன்னாட்டு ரீதியிலான உதாரணங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

முடிவுரை

பிறப்பாக்கின்ற மற்றும் சுயாதீன செயற்கை நுண்ணறிவின் பெருமளவிலான நன்மைகளை அனுபவிக்கின்ற வேளையில் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவின் உலகளாவிய நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி முழு உலகமும் துரிதமாக முன்னேறி வருகின்றது. இந்நன்மைகள் உயர்ந்தளவு துல்லியமான மருந்து மூலம் கடுமையான நோய்களுக்குப் புத்துருவாக்க ரீதியிலான சிகிச்சைகளை அளிப்பதன் ஊடாக மில்லியன் கணக்கான உயிர்களைக் காப்பாற்றுதல், தன்னியக்க மோசடி அடையாளம் மற்றும் முற்கணிப்புப் பகுப்பாய்வினை முன்னெடுப்பதன் மூலம் பில்லியன் கணக்கான டொலர்களைச் சேமித்தல் மற்றும் ஆவணத் தயாரித்து தொகுப்பதில் பல மணிநேரத்தினை மிச்சப்படுத்தல் ஆகியவற்றினை உள்ளடக்கின்றன. இவ்வுலகளாவிய கிராமத்தில் சிறியதொரு தீவென்ற வகையில், அபிவிருத்தி ஓட்டத்தில் வெற்றிபெறும் பொருட்டு செயற்கை நுண்ணறிவினைப் பின்பற்றுவதற்கு இலங்கை ஒருபோதும் தாமதமாக இருக்கக்கூடாது.

டிஜிட்டல் வலுவூட்டல் குறித்த வலுவான கவனம் செலுத்தலொன்றுடன் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதில் நாடென்ற ரீதியில் இலங்கை முக்கியமானதொரு கட்டத்தில் காணப்படுகின்றது. இக்காரணத்தினால் செயற்கை நுண்ணறிவின் விளைவானது விரைவான வளர்ச்சி, மேம்பட்ட வாழ்க்கை மற்றும் குறைவடைந்த சமத்துவமின்மை என்பவற்றில் அல்லது சமூகத்தில் பிளவுகளையும் அவநம்பிக்கையினையும் விரிவுபடுத்துவதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்த முடியும். செயற்கை நுண்ணறிவு எவ்விளைவைக் கொண்டுவரும் என்பது முக்கியமாக நாம் அதனை எவ்வளவு பொறுப்புடன் உருவாக்கின்றோம், பயன்படுத்துகின்றோம் மற்றும் ஆளுகின்றோம் என்பதிலேயே தங்கியுள்ளது.

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவின் முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டுள்ள இலங்கை வெளிப்படைத்தன்மை, நெறிமுறை, அனைவரையுமுள்ளடக்குந்தன்மை மற்றும் நீடித்துநிலைத்திருக்குந்தன்மை என்பன உள்ளிட்ட பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுசார் கொள்கைகளைத் தழுவி வலுவானதொரு தொலைநோக்கினை முன்வைத்துள்ளது. இது அத்திடமான அடித்தளத்துடன் பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுப் பயணத்தினை அடுத்த கட்டங்களுக்கு முன்னேற்ற வேண்டிய நேரமாகக் காணப்படுகின்றது. அவ்வகையில், முன்மொழியப்பட்ட செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையத்தின் முறையான நிறுவுதலானது அத்தியாவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. செயற்கை நுண்ணறிவினை ஒழுங்குமுறைப்படுத்துவதிலும் வழிகாட்டுதல்களின் நடைமுறைப்படுத்தலினைத் தொழிற்படுத்துவதிலும் இது முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுதல் வேண்டும்.

மேம்பட்ட இணைப்பு, தரவு மையங்கள் மற்றும் கிளவுட் தழுவுகை மூலம் தொழில்நுட்ப உட்கட்டமைப்புக் கட்டியெழுப்பலானது படிப்படியாக நடைபெற்று வருகின்றது. தேவையான சட்ட அடித்தளமும் உருவாகி வருகின்றது. தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் என்பன முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்ற போதிலும், செயற்கை நுண்ணறிவு குறித்த குறிப்பிட்ட ஒழுங்குவிதியொன்றிற்கான தேவை இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. குறிப்பாக, அனைத்துப் பொதுத் துறைசார் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளுக்கான நெறிமுறைத் தாக்க மதிப்பீடுகளை மேற்கொள்வதானது அத்தகைய சட்டவாக்கத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவில் மட்டுப்படுத்தப்பட்டதாயினும், வளர்ச்சியடைந்து வருகின்ற

பொதுப் பங்கேற்பு மற்றும் கலந்துரையாடல் என்பன நேர்க்கணிய சமிக்ஞைகளைக் காட்டுகின்றன. இருப்பினும், பொதுப் பணிகளிற்கான செயற்கை நுண்ணறிவுசார் ஒருங்கிணைப்பிற்கான வழிகாட்டுதல்களைத் தீர்மானிப்பதற்கு ஆழமாக உட்பொதிக்கப்பட்ட மற்றும் பரந்தளவிலான பொது உரையாடல் அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது. தேசிய ரீதியிலான செயற்கை நுண்ணறிவு உபாயமானது கல்வியாளர்கள் மற்றும் தொழிற்றுறையிலிருந்தான உள்ளீடுகளைக் கொண்டிருந்தாலும்கூட பொது/சிவில் சமூகத்திலிருந்தான உள்ளீடுகள் தொடர்ந்தும் குறைவாகவே காணப்படுகின்றன.

பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் பொதுமக்களிடமிருந்தான உள்ளீடு என்பன எமக்கு எந்தளவு தேவைப்படுகின்றதோ அதேயளவு செயற்கை நுண்ணறிவில் அவர்களின் இயலளவினைக் கட்டியெழுப்புவதும் முக்கியமாகக் காணப்படுகின்றது. தொழிற்றுறை மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பன அந்நிறுவனங்களில் செயற்கை நுண்ணறிவினை மையமாகக்கொண்ட பாடவிதானத்தினைப் பின்பற்றுகின்றன என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆனால் இயலளவினைக் கட்டியெழுப்பலின் நீடித்துநிலைத்திருக்கின்றதோர் அளவீடானது அரசாங்கம், கல்வித்துறை மற்றும் தொழிற்றுறை என்பன முழுவதும் நெருக்கமான ஒருங்கிணைப்பினைத் தேவைப்படுத்துகின்றது. ஆதலால், முன்மொழியப்பட்ட செயற்கை நுண்ணறிவிற்கான தேசிய மையத்தின் தொழிற்படுத்துகையானது விரைவுபடுத்தப்பட வேண்டும்.

செயற்கை நுண்ணறிவானது அரசியல், சமூக மற்றும் கலாசார சக்திகளைக் குறிப்பிடத்தக்களவு பாதிக்கின்ற வகையில் தொழில்நுட்ப கருவியொன்றிற்கு அப்பால் முதிர்ச்சியடைந்துள்ளது. இப்போது நாம் தழுவிக்கொண்டுள்ள பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவுசார் கொள்கைகள் செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயற்படும் என்பதனை மாத்திரமின்றி அது யாருக்காகப் பணிகளை மேற்கொள்ளும் என்பதனையும் வடிவமைக்கும். எனவே, வலுவான ஆளுகை, நெறிமுறைத் தலைமைத்துவம் மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய கொள்கை உருவாக்கம் என்பவற்றுடன் தேசிய செயற்கை நுண்ணறிவுத் தொலைநோக்கினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கை மனிதனை மையமாகக் கொண்ட பொறுப்புமிக்க செயற்கை நுண்ணறிவினை மேம்படுத்த முடியுமாயமைகின்ற வேளையில் பிராந்தியத்திற்கு முன்னுதாரணமொன்றாகவும் திகழ முடியும்.

உசாத்துணைகள்

1. LIRNEasia. (2025). Governing Inclusive and Responsible AI (GIRAI): Summary Report. Retrieved from: https://lirneasia.net/wp-content/uploads/2025/03/FINAL_GIRAI-Summary_18-March-2025.pdf
2. Presidential Secretariat of Sri Lanka. (2023). Presidential Task Force to Promote Artificial Intelligence in the Country. Retrieved from: https://www.presidentsoffice.gov.lk
3. ARTECULATE. SLASSCOM AI Policy and Collaboration with AWS. Retrieved from: https://arteculate.asia/slasscom-ai-policy-aws-collaboration-benefits/
4. ICTA Sri Lanka. (2024). National AI Advisory Committee. Retrieved from: https://www.icta.lk
5. AI Sri Lanka 2028: Sri Lanka's National Strategy on AI. Retrieved from: https://mot.gov.lk/assets/files/National_AI_strategy_for_Sri_Lanka-08a88c78d541a0746aeb8c71ed312231.pdf
6. Wikipedia. (2022). Personal Data Protection Act (Sri Lanka). Retrieved from: https://en.wikipedia.org/wiki/Personal_Data_Protection_Act_%28Sri_Lanka%29
7. Wikipedia. (2024). Online Safety Act (Sri Lanka). Retrieved from: https://en.wikipedia.org/wiki/Online_Safety_Act_%28Sri_Lanka%29
8. Ceylon Public Affairs. Sri Lanka's Path to Becoming a Regional AI Hub. Retrieved from: https://ceylonpublicaffairs.com/path-to-becoming-a-regional-ai-hub/
9. App Dev. (2024). Challenges and Solutions for AI Development in Sri Lanka. Retrieved from: https://www.app-dev.lk/blog/challenges-solutions-ai-development-sri-lanka
10. What is Responsible AI (2024), Microsoft Learn, https://learn.microsoft.com/en-us/azure/machine-learning/concept-responsible-ai?view=azureml-api-2 [Accessed on – 04/06/2025]
11. Microsoft Responsible AI Standard, v2 – General Requirements, June 2022, Online https://msblogs.

thesourcemediaassets.com/sites/5/2022/06/Microsoft-Responsible-AI-Standard-v2-General-Requirements-3.pdf [Accessed on – 04/06/2025]

12. What is responsible AI, Cole Stryker, Editorial Lead, AI Models, IBM Think, Online https://www.ibm.com/think/topics/responsible-ai [Accessed on – 04/06/2025]
13. How countries are implementing the OECD Principles for Trustworthy AI, Lucia Russo and Noah Oder, 2023-October 31, https://oecd.ai/en/wonk/national-policies-2
14. Recommendation on the Ethics of Artificial Intelligence. (2022), United Nations Educational, Scientific and Cultural Organization (UNESCO), https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000381137
15. Lanka Interoperability Framework – National Data Sharing Policy, https://life.gov.lk/images/pdfs/National-Data-Sharing-Policy.pdf [Access on - 04/06/2025]
16. Sri Lanka Agricultural Interoperability Framework for Agriculture, Plantation Industries, Fisheries and Irrigation Sectors. https://www.agrimin.gov.lk/web/images/22.07.2024-1/Agri_IF_V1.2.pdf [Accessed On 04/06/2025]
17. Financial Technology Regulatory Sandbox of the Central Bank of Sri Lanka, https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/about/20200214-FinTech-Regulatory-Sandbox-of-CBSL-Framework-e.pdf [Accessed on - 19/08/2025]

தொழில்தருநர்களின் கவனத்திற்கு!

ஊழியர் சேமலாப நிதிய இணையவழி சேவைக்கு இன்றே மாறுதலடையுங்கள்!

உங்களது ஊழியர்களுக்கு கிடைக்கவேண்டிய சிறந்த மற்றும் தங்குதடையற்ற ஊ.சே.நிதியச் சேவை அனுபவத்தை அவர்களுக்கு வழங்குங்கள்!

உங்களது ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்களை சமர்ப்பிப்பதற்கென சௌகரியமான, விரைவான அத்துடன் காகிதங்களை உபயோகிக்காத வசதியை ஊழியர் சேமலாப நிதிய இணையவழிச் சேவை வழங்குகின்றது. சில கிளிக்குகளிலேயே பங்களிப்புகளை உடனடியாக செயன்முறைப்படுத்தி, பிழைகளோ அல்லது தாமதங்களோ இன்றி ஊழியர்களின் ஊ.சே.நிதியக் கணக்குகள் இற்றைப்படுத்தப்படுகின்றது.

ஏன் ஊ.சே.நிதிய இணையவழி சேவையை தெரிவுசெய்ய வேண்டும்?

- வசதியானது – எந்நேரத்திலும், எங்கிருந்தும் பங்களிப்பை மேற்கொள்ளுதல்!
- விரைவானது மற்றும் பிழைகளற்றது – ஊழியர்களின் ஊ.சே.நிதியக் கணக்குகளுக்கான உடனடி இற்றைப்படுத்தல்கள்
- காகிதங்களற்றவை – பசுமைக்கு மாறுதலடைந்து காகித உபயோகத்தை இல்லாதொழிக்கின்றது.

தொழில்தருநர்களுக்கான முக்கிய அறிவித்தல்

- ஊழியர் எண்ணிக்கையை பொருட்படுத்தமால், அனைத்து தொழில்தருநர்களுக்கும் கிடைக்கப்பெறுகின்றது.
- 50 இற்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்ட தொழில்தருநர்களுக்கான கட்டாயமானது

இப்போதே செயற்படுங்கள்! இறுதி நேரத்தில் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்து, ஊ.சே.நிதிய இணையவழி சேவைக்கு மாறுதலடையுங்கள். தங்குதடையற்ற மற்றும் வினைத்திறன்மிக்க பங்களிப்புச் செயன்முறையைக் கொண்டு உங்களது ஊழியர்களின் எதிர்காலத்தைப் உறுதிசெய்யுங்கள்.

ஊ.சே.நிதியத்தின் இணையவழி சேவையுடன் எவ்வாறு பதிவுசெய்து கொள்வது?

ஊ.சே.நிதிய இணையவழி சேவையுடன் உங்கள் நிறுவனத்தைப் பதிவுசெய்வதற்குத் மூன்று எளிய படிமுறைகளை பின்பற்றுங்கள்.

படிமுறை 1: பின்வரும் இணைப்பிலிருந்து பதிவுப் படிவத்தை பதிவிறக்கம் செய்து பூர்த்திசெய்யுங்கள்.

https://services.epf.lk/Pages/Employer/EmployerLoginNew.aspx.

படிமுறை 2: பின்வரும் ஆவணங்களில் ஒன்றின் வர்ண ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை உள்ளடக்குதல்

தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தொழில்தருநர் பதிவுச் சான்றிதல், அல்லது

கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட வியாபாரப் பதிவுச் சான்றிதல்.

படிமுறை 3: பூர்த்திசெய்யப்பட்ட பதிவுப் படிவத்தையும் மேலே குறிப்பிடப்பட்ட ஆவணத்தின் (ஆவணங்களின்) ஸ்கேன்செய்யப்பட்ட பிரதிகளுடன் help.epfonline@cbsl.lk. என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல்.

இன்றே ஊ.சே.நிதிய – இணையவழி சேவைக்கு மாறுதலடைந்து தங்குதடையற்ற பங்களிப்பு முகாமைத்துவத்தை அனுபவியுங்கள்!

75 YEARS
STABILITY FOR PROSPERITY
1950-2025

மேலதிக விபரங்களுக்கு,

ஊழியர் சேமலாப நிதியம்,
இலங்கை மத்திய வங்கி, வைட்வேஸ் கட்டிடம்,
இல.25, சேர் பாறோன் ஜெயதிலக மாவத்தை, கொழும்பு 01.

www.epf.lk
help.epfonline@cbsl.lk

0112-206690 | 0112-477050
0112-477971 | 070-6292200